PARENTS, CHILDREN & PSYCHOLOGY

பெற்றோர் பிள்ளைகள் உளவியல்

அமிர்தகௌரிநாயகி
கனகசபாபதி

அக்டோபர் 1998

பத்தாவது ஆண்டு
நினைவு வெளியீடு

Parents, Children & Psychology

பெற்றோர்
பிள்ளைகள்
உளவியல்

திருமதி அமிர்தகெளரிநாயகி கனகசபாபதி
பத்தாவது ஆண்டு நினைவு வெளியீடு.
அக்டோபர், 1998.

நூலின் பெயர்:	'பெற்றோர், பிள்ளைகள், உளவியல்' கனடாவிலிருந்து வெளிவரும் 'தமிழர் தகவல்' மாதாந்த மஞ்சரியில் வெளியானவற்றிலிருந்து தெரிவான பதின்மூன்று கட்டுரைகளின் தொகுப்பு.
விடயம்:	கட்டுரைகள்
பக்கங்கள்:	92
பிரதிகள்:	ஐநூறு
ஆசிரியர்:	பொன்னையா கனகசபாபதி பல்கலாசார ஆலோசகர், ரொறன்ரோ மாவட்ட (வடயோர்க்) கல்விச் சபை. முன்னாள் அதிபர், மகாஜன கல்லூரி தெல்லிப்பளை, இலங்கை.
முதற் பதிப்பு:	அக்டோபர், 1998
பதிப்புரிமை:	கனகசபாபதி குடும்பம். 95 Holland Park Avenue Toronto, Ontario M6E 1L5. Canada. தொலைபேசி: 416-652-8309
வெளியீடு:	அகிலன் அசோஷியேற்ஸ் P.O.Box: 3, Station:F Toronto, Ontario. M4Y 2L4. Canada தொலைபேசி: 416-920-9250
அட்டை வடிவமைப்பு:	சசி, ஹரன் கிறா∴ப், மிஸிஸாகா.
அச்சமைப்பும் அச்சடிப்பும்:	அகிலன் அசோஷியேற்ஸ், ரொறன்ரோ.

அன்னைக்குச்
சமர்ப்பணம்

In Memory

I write this in memory.
In memory of a friend
and a mentor.
In memory of a wife
and a mother.
In memory of a soul
too early gone.
In memory of an angel
called back home too soon.
In memory of a lady
who left a legacy of love behind.

Manivillie.

திறவுகோல்

தமிழியல் என்பது சிறுகதை, நாவல், கவிதை, குழந்தை இலக்கியம், நாடகம், விமர்சனம் எனப் பரந்துபட்ட பல வடிவங்களைத் தன்னகத்தே கொண்டது. இவை பற்றிய பொதுநிலை நூல்கள் தமிழில் மிகவும் குறைவு. இதனால் விமர்சனமும் கட்டுரையும் ஒன்றே என்கின்ற நிலைப்பாட்டுச் சிக்கலில் எம்மில் பலரும் உள்ளனர்.

இவ்வாறான மயக்கத்துள் தாம் அறிந்தவைகளையும் படித்தவைகளையும் புலம்பெயர்ந்த நாட்டின் புதுவகை அனுபவங்களில் தோய்த்து, ஜனரஞ்சகமாகத் தமிழில் தருவதென்பது எளிதான ஒன்றல்ல. எளிமைப்படுத்தல் என்பதற்கும் இலகு நடையில் எழுதுவது என்பதற்குமிடையில் உள்ள வேறுபாடுகூட சரியாகப் பகுத்தாளப்படாத நிலையிலேயே பலரும் இருக்கின்றோம். இவ்வாறான நிலையில், உயிரியல் ஆசிரியராகவும், கடுமையான கல்லூரி நிர்வாகியாகவும், ஆபிரிக்க நாடொன்றில் விவசாயப் போதனாசிரியராகவும், கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றிய ஒருவர் கனடாவில் கட்டுரையாளராக மாற்றம் பெற்று, பெற்றோரும் கற்றோரும் மற்றோரும் புரியும் வகையில் உளவியல் விடயங்களைத் தமிழில் எழுதித் 'தள்ளுவது' என்பது ஒரு இமாலய சாதனை.

இந்தச் சாதனையின் நாயகன் இந்த நூலின் ஆசிரியர். கனடாவில் வசிக்கும் தமிழர்களைப் பொறுத்தளவில் 'மகாஜனா' என்றதும் நினைவுக்கு வரும் பெயர் கனகசபாபதி என்பது. அதேபோன்று, அதிபர் என்ற அடைமொழியை, அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்றுப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் தம்முடன் வைத்திருக்கும் ஒரேயொருவர் இவராகத்தான் இருக்க முடியும். இவற்றுக்கான காரணங்களைத் தெரியாதோர் அவரைத் தெரியாதோரே!

தமிழர் தகவலில் கடந்த ஏழு வருடங்களாகத் தொடர்ச்சியாக இவர் பல்வேறு விடயங்களிலும் கட்டுரைகளை எழுதி வருகின்றார். கட்டுரைகள் வெவ்வேறு தலைப்புகளில் இடம்பெற்றாலும், அனேகமானவற்றின் தொனிப் பொருள் பெற்றோர் பிள்ளைகளுடன் சம்பந்தப்பட்ட உளவியல் ரீதியானவை. இவற்றுள் பத்துக் கட்டுரைகளைத் தெரிந்தெடுத்து, 'ஒரு அதிபரின் கூரிய பார்வையில்' என்னும் பெயரில், 1994ம் ஆண்டு அதிபர் அவர்களின் மணிவிழாப் பரிசாக வெளியிட்டோம். பல கோணங்களிலிருந்தும் எதிர்பாராத பாராட்டை இந்த நூல் பெற்றது. இங்கிலாந்திலுள்ள மகாஜன பழைய மாணவர் சங்கத்தினர் இதனை மறுபிரசுரம் செய்து அதிபர் மீதுள்ள தங்களது விசுவாசத்தை நன்றியுடன் வெளிப்படுத்தினர்.

மிகுதிக் கட்டுரைகளில் மேலும் சிலவற்றைத் தொகுத்து இரண்டாவது தொகுதியினை வெளியிடலாமோ என்று கருதிய வேளையில், அதிபர் அவர்கள் தமது எண்ணத்தினை வெளிப்படுத்தினார். பத்தாண்டுகளுக்கு முன்னர் சுகவீனமுற்று இயற்கையெய்திய தமது அன்புத் துணைவியின் ஞாபகார்த்தமாக இதனை வெளியிட வேண்டுமென்பது அவரது விருப்பமாக இருந்தது.

கனகசபாபதி அமிர்தகௌரிநாயகி தம்பதிகளது இல்லறத்தின் நற்சின்னமாக விளங்கும் மணியான பிள்ளைகள் நால்வரும் சேர்ந்து, நூலினைப் பதிப்புச் செய்யும் பொறுப்பினைத் தம்கடனாக விரும்பி ஏற்றனர். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை; தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை' என்ற தமிழ்ப் பண்பாடே இங்கு நூலாக உருவெடுத்துள்ளது.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்ற குறளுக்கு ஒவ்வ, கல்வியியலுடன் இணைந்ததாகக் குடும்ப உறவு, பிள்ளை வளர்ப்பு, உளவியல் ஆகிய விடயங்களில் எழுதுவதற்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்குபவர் அதிபர் கனகசபாபதி. இந்த விடயங்களில் அவர் தகவுடையாளர் (Authority). ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையில் வகிக்கும் பல்கலாசார ஆலோசகர் பதவி, இத்துறையில் அவர் மேலும் ஆழம்பெற உதவி வருகின்றது. அறிவும் அனுபவமும் ஆற்றலும் மிகுந்த அவரது கட்டுரைகளைத் தாங்கி வருவதால் 'தமிழர் தகவல்' சஞ்சிகைக்குத் தனிமதிப்பு உண்டு. அவற்றுள் தெரிந்தெடுக்கப்பட்ட பதின்மூன்று கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் விரிந்துள்ளது. ஆதலால், அனைத்துத் தரப்பினரதும் வரவேற்பு நிறையவே இதற்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

மனித குலத்தின் கொடிய அரக்கனாக வலம் வருகின்ற 'கான்ஸர்' நோயினால் எம்மிலிருந்து பிரிக்கப்பட்ட அதிபரின் குடும்பத் தலைவியினது ஞாபகார்த்தமாக வெளிவருகின்ற இந்த நூலின் விநியோகத்தினால் கிடைக்கும் பணத்தை, கனடிய 'கான்ஸர்' நிறுவனத்துக்கு வழங்கக் குடும்பத்தினர் எடுத்துள்ள முடிவை நிச்சயமாக அனைவரும் வரவேற்பர்.

நாம் அகதிகளாகவே இங்கு வந்தோம். கனடிய அரசாங்கங்களினதும் மக்களினதும் தாராள மனப்பான்மை எம்மை இங்கு காலூன்றி நிற்கச் செய்துள்ளது. பிறந்த நாட்டில் அனுபவிக்க முடியாத சுதந்திரக் காற்றை இங்கு மூக்கு முட்டச் சுவாசிக்கின்றோம். கனடிய மண்ணில் எங்கள் தாய்வீடு போன்று காலாற நடக்கின்றோம். கனடாவின் சலுகைகள் அனைத்தையும் எங்கள் உரிமைகளாக அனுபவிக்கின்றோம். பிரதியுபகாரம் செய்ய வேண்டாமா? கனடியத் தேசிய நீரோட்டத்தில் எங்கள் பங்கைச் சேர்க்க வேண்டாமா? இந்த நூலை வெளியிடும் நோக்கம் சிறிதளவாவது இதனை நிறைவுசெய்யும் என நம்பலாம்.

ஒரு தெய்வத்துக்கு இது மாலையாக அணிவிக்கப்படுகின்றது. அதே வேளையில், புகுந்தகத்துக்கு வழங்கும் கைமாறாகவும் அமைகின்றது. இரண்டு நற்காரியங்களுக்குரியதான 'பெற்றோர், பிள்ளைகள், உளவியல்' நூலை 'அகிலன் அசோஷியேற்ஸ்' வெளியீடாகக் கொணர்வதில் பெருமிதமடைகின்றோம்.

திரு எஸ். திருச்செல்வம்

பதிப்புரை

விதைத்த சிறு விதையுள் இருந்த சிறுமுகை முளைத்துச் சிறு தருவாவதைக் கண்டின்புற்ற நீ, அவை வளர்ந்து பெருமரமாகி நிழல் தரும் வேளைவரை பொறுமை பேணாமல், தவிக்கவிட்டுப் போக உனக்கு எப்படித்தான் மனம் வந்ததோ தாயே!

அப்பா பாடசாலை அதிபராக நாள் முழுதும் அங்கே செலவிட, தாயாய் தந்தையாய் உற்ற நண்பனாய் நல்லாசிரியனாய் நாள் முழுவதும் எம்மோடு வாழ்ந்து வந்த நீ, இனி இவர்களுக்கு என் துணை தேவையில்லை என்ற நினைவுடன் அகன்றதன் மாயமென்ன அன்னையே!

அப்பா உலகறிந்த அதிபர்; ஆனால் ஊரிலும் உறவிலும் அவர் டாளியின் புருஷன் எனும் அளவினுக்கு எல்லோரையும் அன்பினால், பண்பினால் இன் சொல்லால், இனிய விருந்தோம்பலால் நிறையவே கட்டிப் போட்ட நீ திடீரெனக் கட்டறுத்து விட்டோடிய காரணமென்ன சொல் அம்மா!

அன்னையைச் சிறுவயதிலேயே இழந்து விட்ட நீ தாய்ப் பாசம் என்பதை அறியாமல் வளர்ந்ததாலோ தான் எம்மை மாத்திரமல்ல, மகாஜனா விடுதி மாணவர்களையும் உனது பிள்ளைகள் போன்று பொறுப்புடன் போஷித்தாய். அவர்களை ஒவ்வொரு பெரு நாட்களுக்கும் வீட்டுக்கு அழைத்து விருந்தோம்பினாய். தொடர்ந்து நைஜீரியாவிலும் வீட்டையே சத்திரம் என மற்றையோர் அழைக்குமளவினுக்கு உனது விருந்தோம்பல் இருந்தது. நூறு வருட வாழ்வை ஐம்பது வருடத்துள் கண்டமையால் இது போதும் என விடை பெற்று விட்டாயா மாதா?

பத்து வருடங்கள் சென்று விட்டன. ஆனால் உன் அன்பு முகம் இன்னும் எம் அருகே உள்ளது போலவே உணர்வு. உனது படமும், சாம்பலும் சுவாமி அறையுள் நிதம் எமது வணக்கத்துக்குரியவை. என்றும் தெய்வமாயிருந்து வழிகாட்டும் தேவதையே! அப்பாவின் இந்த நூலை நாம் பிரசுரித்து எமது சமூகத்தவருக்கு வழங்குவது உனக்கு நிறையவே மனத் திருப்தி தரும் விஷயமாயிருக்கும். என்றுமே எமது சமூகத்தையும், குழந்தைகளையும் நேசித்த உனை வணங்குதற்கு, உன் நினைவை எல்லோரினதும் நெஞ்சில் நிறுத்துவதற்கு இதை விடச் சிறந்த வழி இருக்க முடியாது தாயே!

உன்னை எம்மில் இருந்து பிரித்த கொடிய காலன் "கான்ஸர்". அதனை ஒழிக்க முனைந்து நிற்கும் கனடிய CANCER SOCIETY க்கு இந் நூலால் வரும் நன்கொடைகளைக் கொடுக்கவுள்ளோம். நீ இறந்ததும் ஈழத்தில் CANCER மருத்துவமனைக்கும் உன் பேரால் உதவினோம். நீ இதற்காக எம்மை வாழ்த்தவே செய்வாய். அம்மா, உன் பாதம் தொழுது இந் நூலைப் பிரசுரிக்கின்றோம்.

மணிவண்ணன், மணிமாறன்
மணிமொழி, மணிவிழி.

பதியுரை

டாளி,

பத்து வருடங்கள் உருண்டோடி விட்டன. நிறையவே அல்லற்பட்டு விட்டேன் என்று நான் சொன்னால், "நான் இல்லாவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்களோ தெரியாது" என்ற உமது கூற்றை அது ஊர்ஜிதம் செய்ததாகிவிடும்.

எப்படியோ ஓட்டிவிட்டோம்; இப்போ மணிவண்ணன் சுதர்ஷினியையும், மணிமாறன் மதியழகியையும் வாழ்க்கைத் துணைவியாக்கி விட்டனர். மணிமொழி யோர்க் பல்கலைக் கழகத்திலும், மணிவிழி கல்லூரி இறுதியாண்டிலும் உள்ளனர். எப்படியோ வளர்த்து விட்டேன். இப்படித்தான் வளர்க்க வேண்டுமென்று எண்ணியிருந்ததில்லை. நான் தரமான தந்தையாக இருக்கவில்லை என்பீர்; ஆனால், எப்படித் தரமான பெற்றோராயிருக்க வேண்டும் என்பது பற்றி நிறையவே இப்போது நான் தெரிந்து வைத்துள்ளேன். நம்பிக்கை இல்லையா? இதோ எனது 'பெற்றோர், குழந்தைகள்; உளவியல்' என்னும் நூலை உமக்கே சமர்ப்பணம் ஆக்குகின்றேன்.

உமது பிரிவின் பின்னர், பிள்ளை வளர்ப்புப் பற்றி நிறையவே சிந்தித்தேன் என்றேன். அச்சிந்தனைகளை ஏன் சமூகத்துக்கு உபயோகம் தரக்கூடிய வகையில் எழுத்து உருவம் கொடுக்கக் கூடாது என என்னை நிர்ப்பந்தித்து எழுத வைத்தவர் 'தமிழர் தகவல்' ஆசிரியரான நண்பர் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள். சாம, பேத, தான, தண்ட முறைகளை உபயோகம் செய்து என்னை மாதாமாதம் எழுத வைத்துத் தனது 'தமிழர் தகவல்' மாதாந்த மஞ்சரியில் கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பிரசுரித்து வருபவர். எனக்காக மண்சுமந்து பிரம்பால் அடிபட்டவரும் கூட! அவர் இல்லையேல் நான் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பேனோ என்பது சந்தேகமே. இந்த நூலுக்குத் 'திறவுகோல்' தந்தவரும் அவரே!

ஒரு சமயம் 'ஈழநாடு' பரமேஸ்வரன் தொலைபேசியில் உரையாடுகையில் "என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டார். குமுதம் சஞ்சிகையில் 'பாமரனுக்குக் கணிப்பொறி' என்னும் கட்டுரைத் தொடரை வாசித்துக் கொண்டிருக்கின்றேன் என்றேன். அவர் பெரிதாகச் சிரித்தவாறு கணனி பற்றி ஆங்கிலத்தில் எத்தனையோ நூல்கள் இருக்கையில் இதைப்போய் வாசிக்கின்றீர்களே என்றார். "அப்பா, இதில் விளையாடும் தமிழும் எளிமையும் ஹாஸ்ய உணர்வும் என்னைக் கவர்ந்தவை" என்றேன். அந்தக் கட்டுரைத் தொடரை எழுதிய கொன்கோர்டியா பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி ரி. இராதாகிருஷ்ணன் என்னை அந்த அளவிற்கு ஆகர்ஷித்தவர். அவர் இந்தக் கட்டுரைத் தொகுதிக்கு முன்னுரை எழுதியது எனது பாக்கியம்.

கவிநாயகர் கந்தவனம் எனது உற்ற தோழர். நான் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலங்களில், 'தமிழர் தகவல்' வெளியான மறுநாளே என்னைத் தொலைபேசியில் அழைத்துப் பாராட்டுவார். என்னை உற்சாகப்படுத்தி எழுத வைத்தவர். இப்போதெல்லம் முன்னர்போல அழைத்துப் பாராட்டுவதில்லை.

காரணம், நான் எழுதுவேன் என என்னை அங்கீகரித்தமையே. அவர்கள் இந்த நூலுக்கு அறிமுகவுரை எழுதியுள்ளார். உம்மைப் பற்றி நன்கு தெரிந்த ஒருவரைக் கொண்டு மற்றவர்களுக்குத் தெரியவைக்க வேண்டுமென விரும்பினேன். அதற்குக் குறமகளைத் (வள்ளிநாயகி இராமலிங்கம்) தவிர வேறு யார் பொருந்துவர். எழுத்தாளராக, பேச்சாளராக, ஆசிரியராக என்று எல்லாத் துறைகளிலும் பரிணமிக்கும் அவர், உமது பிறப்புத் தொடக்கம் ஒவ்வொரு வளர்ச்சியையும் நெருங்கியிருந்து கண்டவர். உமது அருமைச் சகோதரி.

எழுத்துலகில் என்னை ஒரு 'பொறுக்கி' என்றே நான் சொல்வேன். நான் இக்கட்டுரைகளில் எழுதியவை எனது சுயமான ஆய்வுகள் அல்ல. அங்கும் இங்கும் பொறுக்கியதை எனது அனுபவங்களுடன் சேர்த்துத் தந்துள்ளேன். அநேகமான பெற்றோர்களுக்கு இவைகள் ஏற்கனவே தெரிந்தவைகளாக இருக்கும். எனினும் எல்லோருக்கும் எல்லாம் தெரிந்திருத்தல் சாத்தியமில்லை. ஆகவே எனது கட்டுரைகளில் பதின்மூன்றினைத் தெரிந்தெடுத்து நூலாக்கியுள்ளேன்.

உமது பத்தாவது நினைவஞ்சலியில் எனது கட்டுரைகளை நூலாக்கி எமது சமூகத்தவர்களுக்கு வழங்க வேண்டுமென நான் எண்ணியபொழுது, அதனால் ஏற்படக்கூடிய செலவினைத் தாமே ஏற்றுக்கொள்ளப் போவதாக எங்கள் பிள்ளைகள் முன்வந்தனர். நான் தயங்கியபோது மருமகள் சுதர்ஷனி 'செய்யவே வேண்டும்' என்று வற்புறுத்தினார். உம்மை எம்மிடமிருந்து பிரித்த நோயினை இந்த நாட்டை விட்டு விரட்டப் பணி புரியும் கனடிய புற்றுநோய்ச் சங்கத்துக்கு (*Canadian Cancer Society*) நூல் வெளியீட்டில் அன்பர்கள் தரும் நன்கொடையினை வழங்குவதாகத் தீர்மானித்துள்ளோம்.

இந்நூல் அழகுமிளிரப் பொலிவுடன் காணப்படுகின்றது என்றால் அதற்குக் காரணமானவர்கள் அட்டையை அச்சொட்டாக வடிவமைத்த ஹரன் கிறாபிக் சசி, பின்னட்டைக்கான ஒளிப்படங்களை எடுத்து நல்கிய எனது மாணவன் கருணாநந்தன், கணனியில் எழுத்தைச் சொல்லோவியமாக்கி அச்சமைத்து, வடிவமைத்து, அச்சிட்டுதவிய 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் ஆகியோரே. இவர்கள் யாவருக்கும் எனது நன்றிகள்.

ஆரம்பத்தில், பெண் பிள்ளைகள் இருவரும் சிறுமிகளாக இருந்தபோது வீட்டு நலனில் நிறையவே ஈடுபட்ட எனது மகன்மார், பின்னர் வளர வளர பொறுப்புகளில் தம்மையும் ஈடுபடுத்திய பெண் பிள்ளைகள், இறுதியாக வீட்டின் முழுப் பொறுப்பையும் தன் தலையில் தாங்கியுள்ள எமது மருமகள் என்றாகி, இப்போது நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாகி விட்டது. அதன் உபவேந்தர் மறைந்திருந்து கண்காணிக்கிறார் என்பதை எல்லோருமே உணர்ந்துள்ளமையால் வீடு வீடாக உள்ளது. நாமிருவரும் மீண்டும் சந்திக்கும்போது, மேலும் பல விடயங்களைப் பகிர்ந்து கொள்வோம்.

உமது அன்பான
கனகசபாபதி

முன்னுரை

முன்னுரை, முகவுரை, நூன்முகம் முதலியன ஒருபொருட் சொற்கள். பொதுவாக நூலினது வரலாறும், நூலாசிரியரது வரலாறும் இன்ன பிறவும் முகவுரையில் கூறுவது வழக்கம் என்பர் நன்னூல் செய்த பவனந்தி முனிவர்.

நூலினது பெருமை முதலியன விளங்கச் சொல்வது அணிந்துரை எனப்படும். மதிப்புரை, சிறப்புரை என்பனவும் அதுவே. நூலினது பெருமையோடு குறைபாடுகளையும் ஆராய்ந்து கூறுவது ஆய்வுரை ஆகும்.

நூலுக்கு முன்னதாக வரத்தக்க உரை என்னதாக இருக்க வேண்டும் என்று விரும்பிய நூலாசிரியருக்கு எனது விழுமிய நன்றி.

இந் நூலின் வரலாற்றுக் கூறுகள் இரண்டு. 1996க்கும் 1998க்கும் இடைப்பட்ட காலத்தில் நூலாசிரியர் 'தமிழர் தகவல்' சஞ்சிகையில் எழுதி வந்த கட்டுரைகளில் 13 இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

'பெற்றோர், பிள்ளைகள், உளவியல்' என்பது நூலின் பெயர். பெயரே நூல் கூறும் பொருளையும் துலக்கமாகச் சொல்லி நிற்கின்றது. இது ஒரு தொகுப்பு நூலாயினும் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் உளவியலால் இழைத்துச் செய்யப் பெற்ற தனித்துவத்தால் தனி நூலாகவே கொள்ளத்தக்க இயல்புடையது.

இப்பொழுது பல மாற்றங்கள் ஒன்ராறியோவின் கல்வி அமைப்பில் ஏற்பட்டு வருவதைப் பலரும் அறிவர். அதற்கேற்பச் சில கட்டுரைகள் திருத்தப்பட்டுப் புதிய தகவல்கள் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு சிறப்பு.

கட்டுரைகளின் சிறப்புகளை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தமது உரையில் ஆழமாக ஆராய்ந்திருக்கின்றார். அவரின் ஆய்வுரை நூலுக்குத் தனி அழகு தருகின்றது.

நூலாசிரியர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் எனது நீண்ட கால நண்பர். *'There are a few men from whom their contemporaries do not withhold admiration...'* என்றார் சிக்மண்ட் பிராய்ட். அவர் கூறியது போலப் பலரும் வியக்கும் அரிதான மனிதர்களில் எனது உழுவல் நண்பரும் ஒருவர்.

இவர் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபராயினும் எமது வட்டாரத்தில் இன்றும் அதிபர் எனவே இவர் அழைக்கப்பட்டு வருகின்றார். காரணம் இங்கும் தமிழ் மக்களின் தமிழ்க் கல்விப் பணிகளுக்குத் தலைமை தாங்கிப் பல முன்னோடியான முயற்சிகளை அவர் மேற்கொண்டு வருவதே.

வடயோக்கு நகரத்தில் பல தமிழ் ஆசிரியர்கள் நியமனத்துக்கும் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும் அயராது உழைத்தவர்; உழைத்து வருபவர். வட யோக்குக் கல்விச் சபையின் ஆதரவுடன் முதலாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை படிப்பிக்கத் தக்க தமிழ்ப் பாட நூல்களைக் கனடிய சூழலுக்கேற்ற வகையில் தமிழ் ஆசிரியர்களைக் கொண்டு எழுதுவித்து வெளிவரச் செய்தவர்.

பல்கலாசார ஆலோசகர் என்ற வகையில் இங்குள்ள சிறுபான்மைச் சமூகத்துப் பிள்ளைகளுக்கு இருக்கக்கூடிய பிரச்சனைகள் பற்றிக் குரல் கொடுத்து வருபவர். பிள்ளைகள், பெற்றோர், ஆசிரியர் என்போரிடையே நல்லுறவை வளர்க்கப் பல கூட்டங்களைக் கூட்டியிருக்கின்றார். கருத்தரங்கங்களில் கல்வித் தத்துவம், உளவியல் முதலாய விடயங்கள் பற்றி இவர் ஆற்றிய உரைகள் இங்குள்ள மற்றைய சமூகத்தவர் மத்தியில் காத்திரமான தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கின்றது.

என்ன சொல்ல வருகின்றேன் என்றால் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் சிறந்த கல்விமான் என்பதை.

கல்விமானுக்கே உரிய பாணியில் கற்பித்தல், குழந்தை வளர்ப்பு, உளவியல் சார்ந்த பிரச்சனைகளை 'தமிழர் தகவல்' சஞ்சிகையில் மாதந்தோறும் தொடர்ந்து அலசி ஆராய்ந்து வருகின்றார். இவை சிந்திக்கத் தூண்டும் சிறந்த கட்டுரைகள்.

கட்டுரைகள் எழுதுவதென்பது ஒரு தனிக்கலை. ஒரு குறிப்பிட்ட பொருளில் கட்டுரை எவ்விதம் எழுத வேண்டும் என்பதை இங்குள்ள பலர் அறிந்திருப்ப-தாகத் தெரியவில்லை. அறிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்கள் 'தமிழர் தகவல்' பத்திரிகையைத் தொடர்ந்து படிப்பது நல்லது. கனகசபாபதி அவர்களும் தமக்குக் கட்டுரைக் கலையை வளர்க்க உதவியது 'தமிழர் தகவல்' சஞ்சிகையே என்று கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நூல் இவ் வடிவத்தில் வெளிவருவதற்கு மற்றொரு காரணம் (வரலாற்றுக் கூறு இரண்டு) நூலாசிரியரது அருமை மனைவி அமிர்தகௌரி அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு தினம்.

இரசிகமணி கனக செந்திநாதன் தனது மகள் நினைவாக ஈழத்துக் கவிஞர்கள் பலரின் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டார். திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் தனது மகன் அகிலனின் நினைவாக அரிய நூல்களை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றார்.

கல்விமான் கனகசபாபதி அவர்களும் தனது கண்ணிகர் மனைவிக்குக் கல்விக் கட்டுரைகளால் நிலையான அஞ்சலியைச் செலுத்த நினைத்தது இயல்பானதும் பொருத்தமானதுமாகும். இந்நூலால் தான் போற்றி நின்ற மனைவியை உலகமும் போற்றும் வகை செய்திருக்கின்றார். அதற்கு அவரது குடும்ப உறவினரும் பிரபல எழுத்தாளருமாகிய வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அமரத்துவ அமிர்தகௌரியைப் பற்றி எழுதிய சமர்ப்பணக் கட்டுரையும் துணையாகவுள்ளது.

பதியுரை உள்ளத்தைத் தொட்டுக் கண்களை வெள்ளமாக்குகின்றது. அதே சமயத்தில் விதியை நொந்து வீழ்ச்சியடையாது கதியுடன் இயங்கிப் பிள்ளைகளை வளர்த்த கடமையுணர்வும் வெளிப்படுகின்றது. மனைவி பிரிந்த பத்து ஆண்டுகளில் குடும்பத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளையும் பதியுரை பதிவு செய்கின்றது.

இவையெல்லாம் தனது மனைத்திறம் மிக்க மனைவிக்குத் தெரியாவென நினைத்து திரு. கனகசபாபதி அவர்கள் சொல்லவில்லை. ஒரு சம்பிரதாய-பூர்வமான பதிவுதான். ஏனெனில் இவை அனைத்தையும் அமிர்தகௌரி நன்கு அறிவார். அவர் எங்ஙனும் போகவில்லை என்பதும் தன்னையும் பிள்ளைகளையும் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதும் திரு. கனகசபாபதி அவர்களுக்கு தெரியாதா என்ன?

மொத்தத்தில் கற்ற கல்வியால் மட்டுமன்றி, பெற்ற அனுபவத்தாலும் 'பெற்றோர், பிள்ளைகள், உளவியல்' என்னும் இந் நூலை அதிபர் அவர்கள் தந்திருப்பதை உணர முடிகின்றது.

பெற்றோர்: கனகசபாபதி - அமிர்தகௌரி
பிள்ளைகள்: மணிவண்ணன், மணிமாறன், மணிவிழி, மணிமொழி.
உளவியல்: அமிர்தகௌரியின் நினைவைத் தாங்கும் நெஞ்சங்களின் பாச உணர்வுகள்.

இப் பதியுரைச் சுருக்கத்தின் விரிவை இனி நூலுரையிற் படித்துப் பயன் பெறுவீர்களாக!

வி. கந்தவனம்

அணிந்துரை

"சொல்லுக சொல்லிற் பயனுடையச் சொல்" என்பது வள்ளுவர் வாக்கு. இந்த இடத்தில் "சொல்" என்ற வார்த்தையை விரிவாக்கி, எழுத்தையும் கூட்டிக் கொண்டால் இந்த நூல் வள்ளுவர் வாக்குக்கு மிகவும் பொருத்தமானது. பயனுடைய கருத்துக்கள் பலவும் ஈண்டு இனிய தமிழில் கூறப்பட்டுள்ளன. உலகெங்கும் சென்று ஞானமும் விஞ்ஞானமும் கற்று அவைகளைத் தமிழில் எழுதி, தமிழன்னைக்கு நகைகளாக அணிவிக்க வேண்டும் என்பது கவிஞன் பாரதியின் கனவு. அவ்வகையில் தமிழணங்கிற்குச் சூட்டப்படும் ஆபரணமாகவும் அமைவது இந்நூல். தன் சுய அனுபவங்களையும் பிறரிடம் இருந்து படித்து அறிந்ததையும் சேர்த்து மணியான ஒரு நூலை ஆசிரியர் தமிழ் மக்களுக்கு ஈந்துள்ளார்.

காலங்கள் மாறுகின்றன. தமிழ் கூறும் மக்களான யாமும் பல்வேறு காரணத்தால் தாய்நாடு விட்டு மேலை நாட்டிற்கு வந்து குடியேறியுள்ளோம். வசதிகள் தொழில் நுட்ப முன்னேற்றங்களுடன், நாம் விரும்பி வேண்டாத பல சிக்கல்களையும் இப் புதிய தாயகம் அல்லது புகுந்த நாடு தருகின்றது. ஈண்டு குடியேறிய நமக்குப் பிறந்த மண்ணின் பாசமும் பற்றும் இற்றுப் போவதில்லை. அதே சமயம் இக் கலாசாரத்தில் வளரும் நம் பிள்ளைகளுக்கு இதுவே பிறந்த மண்ணாக அமைகின்றது. இரு வேறு கலாசாரங்களின் நடுவே வாழ்வது என்பது, அவர்களுக்கு ஒரு கழைக் கூத்தாடி கம்பியின் மேல் நடப்பதற்கொப்பாகும். இந்த அனுபவத்தில் பெற்றோருக்கும் வளரிளம் பருவத்தினருக்கும், ஆக இரு சாராருக்குமே புதுப்புதுப் போராட்டங்கள். வளரும் பருவத்தினர் பள்ளிப் படிப்பில் தொடங்கி, வீட்டில் பெற்றோருடன் பழகுவது, தொடர்ந்து அவர்களின் திருமணக் காலம் வரை எத்தனை எத்தனையோ போராட்டங்கள்! இப் போராட்டங்களில் எல்லாம் பெற்றோர்களும் ஈடுபட வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. இவ்வித போராட்டங்களில் துணைக்கு எங்கு செல்வோம் என்று நம்மவர் நோக்குங்காலை அவர்கள் இரு சாரார்க்கும் பயன் தரும் வண்ணம் எழுதப்பட்டதே இந்நூல்.

ஆசிரியர் கனகசபாபதி அவர்களின் திறமையை இப் புத்தகம் முழுவதும் தெள்ளத் தெளியக் காணலாம். தன் வாழ்வில் தன் மக்களை வளர்த்த போது, அதுவும் அவர் மனைவி மறைந்த பின் உண்டான புதுப் போராட்டங்களை உதாரணம் காட்டி, மிக அழகாகவும் ஆழமாகவும் போராட்டங்களை எப்படிச் சமாளிப்பது என்று எழுதியுள்ளார். அறிவு பல வகையாலும் ஈட்டப்படல் வேண்டும். பிறர் அனுபவங்களைக் கற்று அறிவது கல்வி. விஞ்ஞானம் போன்ற முன்னேற்றங்களை நல்ல நூல்களில் படித்து அறிவது படிப்பு. தானே தன் அனுபவத்தில் பட்டு அறிவது பட்டறிவு. ஆக இப்படிப் பல வகையாலும் அறிந்து, நூல் ஆசிரியர் தாம் அறிந்தவற்றை எளிய முறையினில் நம்மவரும் மற்றோரும் தெரிந்து கொள்ள வேண்டி மிக எளிய முறையில் எழுதியிருக்கின்றார்.

ஈஸ்ரோஜன் (*Estrogen*), ஹோர்மோன்கள், நரம்புத் திட்டம் இவைகளின் கூறுகள் பற்றி அவர் தெளிவாக எழுதியுள்ளது பாராட்டிற்குரியது. தணியாத தமிழார்வம்

கொண்ட கனகசபாபதி அவர்கள், பாரதியார், திருவள்ளுவர் போன்ற பெரும் தமிழ்ப் புலவர்களின் அறிவுரைகளை மேற்கோள்களாகக் காட்டி இந் நூலை ஒரு இனிய தமிழ் நூலாகவும் படைத்துள்ளார். இத்தோடு நில்லாமல் நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகள், முப்பாட்டி காலந் தொட்டுப் பாடிய தாலாட்டுப் பாடல்கள், அப்பாடல்களில் புதைந்திருக்கும் ஒலி பற்றிய செய்திகள், மாறிவரும் நவீன வாழ்க்கை முறைகள், ஆண் - பெண் சமத்துவத்தின் இன்றியமையாமை, பெற்றோர்களின் கடன், வளரிளம் பருவத்தினரின் பொறுப்புகள் இப்படிப் பல் வேறு தலைப்புகளைப் பற்றி இவ்வாசிரியர் மணி மணியாக எழுதியுள்ளார்.

"நயம்பட உரை" என்பது தமிழ் மூதோர் வாக்கு. சொல்வதை இனிமையாகவும் நயமாகவும் சொன்னால் தான் நற்பயன் உண்டாக வழி விடும். எப்படி நயம்பட உரைப்பது என்பதை நல்ல உதாரணங்களைக் காட்டி விளக்கியுள்ளார். அதே போல் "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பது இன்னொரு பழமொழி இதற்கிணங்க, குழந்தையைக் கருவுற்ற காலந்தொட்டு சிறுதேர்ப் பருவம் முதல் வளரிளம் பருவத்தை அவர்கள் அடையும் வரை பெற்றோர்கள் எப்படி எல்லாம் அவர்களை ஊக்குவிக்கலாம், நல்வழி வகுக்கலாம் என்று தெள்ளத் தெளிவாகக் காட்டியுள்ளார் இந்த ஆசிரியர்.

இந் நூலைப் பலரும் கற்று, கற்ற பின் அதற்குத் தக்க வழி நடந்து, தாமும், தம் பிள்ளைகளும், தம் சமுதாயமும் அதன் மூலம் இந்த மண்ணுலகும் நலம் பெற வாழ வேண்டும் என்பது என் பிரார்த்தனையாகும். இவ்விதமான இன்னும் பல அரிய நூல்களைப் படைக்கவும், அப்படிப் படைப்பதற்காக நீண்ட ஆயுளையும் தேக சுகத்தையும் இறைவன் நூலாசிரியருக்கு அருளவும் நான் வேண்டுகிறேன்.

"உண்டாலம்ம இவ்வுலகம்" என்று தொடங்கும் ஒரு புறநானூற்றுப் பாடல் உண்டு. அதன் சாரம் என்னவென்றால் நல்லார்கள் ஒரு சிலரேனும் இருப்பதால் தான் இன்று இந்த உலகம் இருந்து இயங்குகின்றது என்பதாகும். அது போன்ற நல்லவர்கள் எதிர்காலங்களில் வளர இது போன்ற நல்ல நூல்கள் வெளி வர வேண்டும். நம்மவர்கள் நல்லவற்றைப் படித்து, கற்று வழி காட்ட வேண்டும்.

"எம் பெருமான் அருள் நிறைவதாக"

அன்பன்

ரி. இராதாகிருஷ்ணன்

பேராசிரியர், கணிப்பொறித்துறை
கொன்கோர்டியா பல்கலைக்கழகம்
மொன்றியல்

சமர்ப்பண உரை

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாமல் ஒரு போதும் இருந்தறியேன்
- திருநாவுக்கரசர்

கட்டிளமைப் பருவத்தில் காலடி வைத்த இளைஞர்கள் இருவரையும், பிள்ளைப் பருவத்துச் சிறுமியர் இருவரையும் தந்தையின் கரத்தில் ஒப்புவித்துக் கண்மூடிய ஒரு தாயாருக்கு ஒரு தசாப்தத்தின் பின்னர் தங்கள் வயலின் விளைச்சலைக் காணிக்கையாக்குகிறார் ஒரு தந்தை.

புகலிடம் தந்த கனடாவில் புதுப்புதுக் கனவுகளுடன் வந்திறங்கிய கணவனும் மனைவியும் எப்படி எப்படியெல்லாம் ஆக்கபூர்வமாகத் தமது ஆற்றல்களைப் பயன்படுத்தித் தாமும் தம்மை வளப்படுத்தி வளர்த்துக் கொள்ளலாம் எனக் கனவு கண்டாள் எம் கதாநாயகி அமிர்த கௌரி நாயகி. கற்பிக்கும் தொழிலை மேற்கொள்ளும் கனவின் முதற்படியில் கால்வைக்க முன்னரே "கான்ஸர்" எனும் உருவில் காலன் புகுந்து விளையாடி விட்டான்.

இடிந்து சோர்ந்த நாட்களின் பின் மனைவியின் இலட்சியத்தை நிறைவேற்றத் துடித்து எழுந்தார் கணவன். ஒரு தாயாகவும் தந்தையாகவும் தம் புத்திரர்களுக்கு வழிவகை காட்டி உயர் நிலைக்கு இட்டுச் சென்றதுமல்லாமல், தாமும் ஒரு புதிய துறையில் கை வைத்து எழுத்தினை ஆட்சிப்படுத்தினார். அந்த எழுத்துப் பணி இன்று கனடாவின் வார மாத இதழ்கள் அனைத்திலும் வியாபித்து நின்று பல்துறைசார்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறது. கௌரி இருந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாள். தான் விட்டுப் போன கடமைகளையும் சேர்த்துப் பயன் விளைவித்தது மட்டுமல்ல ஒரு புதிய துறையிலும் சாதனை புரிந்து கொண்டிருக்கிறார் என்பதையிட்டுக் கௌரி ஆனந்தக் கூத்தாடுவாள் என நினைத்துத் தம் கட்டுரைகளைத் தொகுத்து அச்சேற்றிய கல்விமாலையைத் தம் மனைவிக்கு அர்ப்பணமாகச் சூட்டி தாலிகட்டிய போதையும் விடப் பெருமிதமும் பேருவகையும் அடைகிறார் கணவன் கனகசபாபதி. என்னே கணவனின் அருள் நெஞ்சம்.

அமிர்த கௌரி நாயகி காங்கேசன்துறை திரு. அ. குருநாதபிள்ளை (நடேஸ்வராக் கல்லூரிக் கனிஷ்ட வித்தியாலய அதிபராக இருந்தவர்) இராசம்மா தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையாக (மூத்த புதல்வி), சிவகணநாதன், சரவணபவன், ஸ்கந்தராசா, அரவிந்தன், அம்பிகா ஆகிய சகோதரர்களுடன் பிறந்தவர். சிறுவயதிலிருந்தே பெண் பிள்ளைகளுக்குரிய பயிற்சிகள், பொறுப்புணர்ச்சிகளுடன் வளர்க்கப்பட்டுக் கல்வியிலும் மேம்பாடடையச் செய்தனர் பெற்றோர். அண்ணன் சிவகணநாதன் அவரை இந்தியாவுக்கு அனுப்பித் தாவரவியல் பட்டதாரியாக்கி மகிழ்ந்தனர். தொடர்ந்து கொழும்புத் தலைமைத் தபாற் கந்தோர் நூல் நிலையத்தில் நூலகராகப் பணிபுரிந்தவர்.

சண்டிலிப்பாய் பொன்னையா கனகசபாபதி அவர்களுடன் இல்லற தர்மத்தில் இறங்கியதால் தான் பார்த்த தொழிலையும் கைவிட்டு, வீட்டு நிர்வாகத்தைக்

கையேற்றார். "பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக" பழந்தமிழ்ப் பெண்களின் பெருமை சிறிதும் குன்றாமலும் புதுமைக்கும் புதுமையான கொள்கைகளுடனும் கூடிய பெண்ணாக உருவெடுத்தார் கௌரி.

அவளுடைய உற்சாகம், சுறுசுறுப்பு, எளிமையான தோற்றம், எவரையும் நோகவைக்காத பண்பு, பிறர் துன்பங்கண்டு நெகிழும் தன்மை, உதவி செய்யும் மனப்பான்மை யாவும் அவள் சீதனம். தனது வீட்டைச் சுற்றிக் கணவனின் விருப்புக்கேற்ப, பூஞ்சோலை ஒன்றை நிர்மாணிக்க விழைந்தார். மீனுறை குளமும் அதன் நடுவே ஒன்றன் மேலொன்றான மீன் தொட்டிகளும், பலசாதி மீன்களும், விசிறி வாழைகளும் பல்லின பல்நிற பூச்செடி கொடி வகைகளும் அழகுக்கு அழகு செய்தன. ஊரிலேயே அத்தகையதொரு அழகு வாய்ந்த வீட்டைக் காண்பது அரிது.

கணவனுக்குரிய ஒரு சிறு வேலையையும் தானே செய்வதில் பெரும் மகிழ்ச்சி யடைந்தவர் கௌரி. அதனால் கனக்ஸ் தமது பாடசாலைப் பணிகளில் முழுமையாக ஈடுபடவும் அவரது ஆசிரிய நண்பர்களை - மாணவர்களை வரவேற்று விருந்தளித்து உபசரிக்கவும் கௌரி முன்னின்றார். அது மாத்திர-மல்ல வீட்டு நிர்வாகம், குழந்தைகள் பராமரிப்பு, வளர்ப்பு என்பதோடு கணவனின் கற்பித்தல் சம்பந்தமாகக் குறிப்புகள் எடுத்துக் கொடுப்பது, அறிக்கைகள் தயாரிப்பது, விடைத்தாள்களைத் திருத்துவது போன்ற அறிவியற் பணிகளிலும் ஈடுபட்டார்.

கணவன் அதிபராக இருந்த காலத்தில் தானும் கல்லூரிகளின் இன்றியமையாத அங்கத்தவராக உணர்ந்து செயற்பட்டார். ஆசிரியர் - மாணவர் - பெற்றார் குடும்பங்களுடன் நன்கு பழகி வீட்டுக்கழைத்து ஒன்று கூடல்கள் சந்திப்புகள் நடத்தினார்.

விசேட தினங்களில் வீடுகளுக்குச் செல்ல முடியாத விடுதி மாணவரை தமது வீட்டுக்கழைத்து அவ்வத் தினங்களுக்கேற்ற அன்பளிப்புகளைக் கொடுத்து உயர்தர விருந்தும் பலகார வகைகளும் அளித்து அன்றைய தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடச் செய்வார் கௌரி.

மணிவண்ணன், மணிமாறன், மணிமொழி, மணிவிழி எனும் நான்கு மணிகளைத் தம் நல்லறத்தின் பயனாகப் பெற்றெடுத்து அவசியமுணர்ந்து ஆபிரிக்கா சொக்கோட்டோ நாட்டுக்குத் தொழில் பெற்றுச் சென்றனர் தம்பதியர். அங்கே இருவரும் ஆசிரியராகக் கடமையாற்றியதோடு இலங்கையிலிருந்து அங்கே கடமைக்குச் சென்றவர்களுக்கு விருந்தோம்பி உபசரித்தனர்.

என்றும் மாறாப் புன்னகையுடன் வருவோரைச் சிறப்பித்துத் தங்கவைத்துப் போதும் போதுமென உணவூட்டி உபசாரங்கள் செய்து அனுப்புவது மாத்திர-மல்ல யாருக்கு என்ன துன்பம் நேர்ந்தபோதும் அந்த இடத்துக்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் அளித்து, அக்குடும்பத்தையும் கவனித்துப் பல சேவைகள் புரிவதும் கௌரியின் இரத்தத்தில் கலந்துள்ள செயல்களாகும். ஆபிரிக்க நாட்டுக்குச் சென்றோர் இவர்களின் இந்தச் சேவையைச் சிலாகித்துப் பேசுவர். கௌரியின் சலிக்காத நேரம் காலம் பார்க்காத விருந்தோம்பும் பண்பை

தேவைக்கதிகமாகவே பயன்படுத்திக் கொண்டவர் பலர். கடைசி நாட்களில் நெஞ்சில் வலி இருப்பதாகக் கூறிக் கொண்டே கிலோ கிலோவாக இறைச்சி வெட்டிச் சமைத்து விருந்தினரை உபசரிப்பார் என அவர்களின் நெருங்கிய நண்பர் குடும்பம் ஒன்று சொல்லிக் கவலைப்பட்டது.

ஆபிரிக்காவிலிருந்து கனடாவின் தாராள மனப்பான்மை அவர்களை இங்கே இட்டு வந்தது. எங்கு போனாலும் தமது சமூகத் தொடர்புப் பண்பினால் மிகக் குறுகிய காலத்திலேயே நட்புப் பாலம் அமைக்கப்பட்டு விடும். கனடாவின் கனவுகள் நிராசையாகி நோய் ரூபத்தில் கௌரியைப் பறித்துச் சென்றது. தான் செல்லும் வழிக்குப் புண்ணியம் சேர்த்த கௌரி 1988ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ந திகதி கான்ஸர் என்னும் கொடிய அரக்கனின் கண்ணிற் பட்டுக் காலன் கைப்பட்டார்.

"எல்லார் உடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்லப்பட முடியாதது. ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் கவலைப்படத் தேவையில்லை" எனும் கீதையின் பொருளை உணர்ந்த கனக்ஸ் தனது நூலைத் தன் மனைவியின் ஆத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்கின்றார்.

நன்றே செய்வாய் அதையும் இன்றே செய்வாய்

வள்ளிநாயகி இராமலிங்கம்
(குறமகள்)

அடுத்து வருகின்ற பக்கங்கள்...

- குடும்ப உறவுகள் 19
- எமது கடமைக் கூறுகள் மாறுகின்றன 23
- குடும்பம் ஒரு ஆலயம் 28
- பெற்றோர்கள் தமது கடமையிலிருந்து தவறுகின்றனரா? 33
- பிள்ளை வளர்ப்பு முறை 39
- பிள்ளை வளர்ப்பும் ஒழுங்காட்சியும் 43
- விரிவான புத்திக் கூர்மை 50
- சிறுவர்களின் மொழி அறிவினை விருத்தி செய்ய வேண்டும் 54
- பிள்ளைகள் எல்லோரும் கூர்மதியுடையவரே! 59
- குழந்தைகளின் மூளை அபிவிருத்தியில் பெற்றோரின் பங்கு 63
- மூளையை நல்ல நிலையில் வைத்திருக்க என்ன செய்ய வேண்டும் 70
- வளரினம் பருவத்து மாணவர் நடவடிக்கைகள் 78
- வளரினம் பருவப் பொண்கள் தாய்மாருக்குத் தீராத பிரச்சனை... 84

Family Relationships are Continuously being Challenged and New Defintions of Relationship are Created

குடும்ப உறவுகள்

"எனது மகனுக்குக் கல்யாணம் பேசுகிறேன்" என்று நான் கூறி முடியுமுன், "கனக்ஸ் நான் விட்ட பிழையை நீயும் விட்டுவிடாதே" என்றார் எனது அலுவலகச் சக ஊழியர் ஒருவர். இவர் ஒரு யூதப் பெண்மணி. "என்ன விஷயம்" என்றேன். எனது மூத்த மகள் வேலையில் விடுப்பு எடுத்து இஸ்ரேல் பார்க்கப் போயிருந்தாள். திரும்பி வரும்பொழுது அங்கிருந்து ஒரு இளைஞனையும் அழைத்து வந்தாள். நான் இவனைத்தான் திருமணம் செய்யப் போகிறேன் என்றாள். நாம் தடை சொல்லவில்லை. திருமணம் நடந்தது. சிறிது காலத்தில்தான் அவனின் உண்மையான குணம் தெரிந்தது. குடி, போதைப்பொருள், திருட்டு என எல்லாக் கெட்ட பழக்கங்களுக்கும் உறைவிடம். இருமுறை சிறைக்குக் கூடச் சென்றார். மகளுக்கு அடி, வதை. இறுதியில் மகள் ஒரு பிள்ளையுடன் பிரிந்து வாழ்கிறாள். இந்த அனுபவம் எனக்கு நிறையவே போதனை தந்தது. எனவே, எனது இரண்டாவது மகளிடம், "நீ அவசரப்பட்டுத் திருமணம் செய்யாதே, ஒருவரைப் பிடித்திருந்தால் அவருடன் சில காலம் சேர்ந்து வாழ். அப்படி வாழ்கின்ற பொழுது உனக்கு அவர் உகந்தவர் என்று உணர்ந்த பின்னரே அவரைக் கல்யாணம் செய்" என்று கூறிவிட்டேன் என்றார். "நான் மகளுக்கு ஒருவரைக் காதலித்தால் மட்டும் போதாது, அவருடன் ஒன்றாகக் குடும்பம் நடத்திப் பார்த்த பின்தான் திருமணம் செய்ய வேண்டும் என்கிறேன், நீயோ என்னடா என்றால் முன்பின் தெரியாத ஒரு பெண்ணைப் பிடித்து இவள்தான் உன்னோடு வாழ்க்கைப் பயணம் மேற்கொள்ளப்போகிறாள் என்கிறாய். இது அடாதசெயல்" என்றார். "தாயே எங்கள் சமூகத்திலே ஒரு ஆடவனும் பெண்ணும் கூடி வாழ்ந்தார்கள் என்றால் அந்தப் பெண்ணின் கதி அதோ கதிதான். அந்தப் பெண்ணை வேறு ஒரு ஆடவன் மனைவி ஆக்கும் எண்ணத்துடன் திரும்பிக்கூடப் பார்ப்பானா என்பது சந்தேகமே என்றேன்.

அந்தப் பெண்மணியின் கருத்துப்படி ஒருவரையொருவர் காதலித்தால் மட்டும் போதாது. அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்தும் வாழ்ந்த பின்தான் கல்யாணத்தைப் பற்றிச் சிந்திக்கலாம். இது எமது சமூகத்தில் நடைமுறைச் சாத்தியமா? "ஒரு பெண் முதலிரவில் தனது கணவனுக்குக் கொடுக்கக் கூடிய மிகச் சிறந்த பரிசு தனது கன்னித் தன்மையே" என்று நடிகை ஸ்ரீதேவி கூறியதாகப் படித்தேன். ஒரு நடிகையே இப்படிக் கூறுவதாயின், எமது குடும்பப் பெண்களின் மனப்பாங்கு எப்படிப்பட்டதாக இருக்கும். இங்கு ஒரு உண்மையைக் கூற வேண்டும். கனடாவிலே ஆண்கள் பொதுவாக நாற்பது வயதிலேயும், பெண்கள் 37 வயதிலேயும் விவாக ரத்துப் பெறுகிறார்கள் என்று கணிக்கப் படுகிறது. பொதுவாக 12 வருடக் குடும்ப வாழ்க்கையின் பின்னரே பிரிகின்றனர்.

அப்படியென்றால் கல்யாணமாகிப் 14 வருடத்திலேதான் ஆணும் பெண்ணும் தமது சுயபுத்தியைக் காட்டத் தொடங்குவார்கள். இப்படிப்பட்டவர்கள் கல்யாணத்திற்கு முன் கூடி வாழ்ந்து என்ன பயன்?

எமது பண்பாட்டிலே காதல் மணங்கள் இருந்து வந்தாலும் கூட, பெரும்பாலான திருமணங்கள் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படுபவையாகவே அமைந்துள்ளன. பெற்றோர்கள் சாதகங்களை ஒப்பிட்டுப் பொருத்தம் பார்த்தே திருமணங்களை நிச்சயிக்கின்றனர். மேலைத்தேயத்தினர் சாதகம் கணிக்காவிட்டாலும் அவர்கட்குச் சோதிடத்தில் நம்பிக்கையில்லாமல் இல்லை. எனவே, எமது முறையான பொருத்தம் பார்த்துத் திருமணம் நிச்சயிப்பது பிழையான முறை என்றும் கூறுவதற்கில்லை. இன்றைய ஆய்வாளர்களின் கருத்துப்படி குடும்ப உறவு முறையினில் முக்கிய பரிமாணங்களாக அமைபவை குடும்ப ஒட்டிணைவாற்றல் (*Family Cohesion*), இசைவுத்திறன் (*Adaptability*) தொடர்பு கொள்முறை (*Communication*) ஆகிய மூன்றுமே.

குடும்ப ஒட்டிணைவாற்றல்:

இது குடும்ப அங்கத்தவர்க்கிடையேயான உணர்வுபூர்வமான பிணைப்பு. ஒட்டிணைவாற்றலின் இறுக்கத்தினை நண்பர்கள், தீர்மானம் எடுத்தல், பொழுதுபோக்கு, தனிப்பற்றுக்கள் (*Interest*) போன்ற குறிப்பான கருதுகோள்களிலிருந்து தெரிந்துகொள்ள முடியும். ஒட்டிணைவாற்றல் நான்கு நிலைகளிலே உள்ளதாகக் கூறப்படுகின்றது. அவை: 1. ஈடுபாடற்ற (*Disengaged* - மிகக் குறைவு) 2. பிரிந்து நிற்கும் (*Separated* - மிகக் குறைவிலிருந்து சாதாரணம் வரை) 3. இணைப்புடைய (*Linked* - சாதாரணத்திலிருந்து மேல்நிலை வரை) 4. வலையில் பிணைத்த (*Enmeshed* - மிகை மேல்நிலை).

இந்த நான்கு நிலைகளிலே இரண்டாவதும் மூன்றாவதும்தான் குடும்பமொன்றின் செயற்பாடுகட்கு உகந்தவை. முதலாவதும் நான்காவதும் குடும்பத்திலே பிரச்சனைகள் ஏற்படுவதற்கே காரணமாகின்றன. ஈடுபாடற்ற குடும்ப உறவிலே குடும்பத்தவர் பெரும் அளவிலே உணர்வு பூர்வமாகப் பிரிந்து நிற்பார்கள். எந்த ஒரு செயலிலும் ஏனையோருடன் சேர்ந்து இயங்காது சுதந்திரமாக இயங்கும் தன்மை காட்டுவார்கள். ஒரு குழுவாகச் செயற்படுகின்ற நிலை அரிது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட தனிப்பற்றுக்கள் உள்ளமையால் குடும்பத்தின் பொது மேம்பாட்டிலும் பார்க்கத் தமது தனிப்பற்றினை ஈடுசெய்வதே குறிக்கோள் என்று ஒவ்வொருவரும் கங்கணம் கட்டி நிற்பதால் ஈடுபாடற்ற குடும்ப உறவு கீழ்த்தரமானது. வலையில் பிணைத்த நிலை என்றால் இதற்கு நேர்மாறானது. இங்கே குடும்பத்தவரிடையே மிக நெருக்கமான அந்நியோன்யம், ஆதலால் அதிகளவு விசுவாசம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொருவரும் மற்றவரைப் பெரும் அளவிலே சார்ந்துள்ளார். பொதுவாகவே குடும்பத்தை வந்தடைகின்ற எந்தவொரு தாக்கமும் தனிப்பட்டவரைச் சார்ந்ததாக இருக்கமாட்டாது. குறைந்தது இன்னொருவரையும் சம்பந்தப்படுத்தியதாகவே அமையும். இதனால் ஒருவரும் தனித்தன்மை பேணமாட்டார்கள். குடும்பத்தவரிடையே இடைவெளி இல்லாத நெருக்கம் இருக்கின்றமையால் தனித்துத் தீர்மானம் எடுக்கமாட்டார்கள். தனிப்பற்று என்ற ஒன்று இருப்பதே அவர்கட்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இதனால்

ஒவ்வொருவருடைய சக்தியும் குடும்பத்துக்குள்ளேயே பிரயோசனப்படுத்தப் படுகிறதேயல்லாமல் வெளி உலகு ஒன்று இருப்பதாகவோ வேறு தனிப்பற்றுகள் உள்ளதாகவோ குடும்பத்தவர்கள் உணர்வதில்லை. உணர முனைவதும் இல்லை. அவர்கள் உலகம் மிகச் சிறியது.

குடும்ப இசைவுத் திறன்:

சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தும் அழுத்தநிலை, அழுத்தநிலை விருத்தி போன்றவற்றால் உறவுமுறை விதிகள், செயற்கூற்று உறவு, குடும்ப ஆதிக்க அமைப்பு போன்றவற்றை குடும்ப அமைப்பில் மாற்றியமைத்தலாகும். இதில் முக்கிய அம்சம் வகிக்கும் கூறுகள் தன்னுறுதிநிலை(*Assertiveness*), கட்டுப்பாடு (*Control*), ஒழுங்காட்சி (*Discipline*), பேரம்பேசும் தன்மைகள் (*Negotiation Styles*), செயற்கூற்று உறவுகள் (*Role Relationship*), உறவுகள் (*Relationship*).

குடும்ப இசைவுத் திறனிலும் நான்கு நிலைகள் உள்ளன. அவை: 1. கட்டுறுதியான (*Rigid* - கீழ்நிலை) 2. கட்டமைப்பான (*Structured* - கீழ்நிலையிலிருந்து சாதாரண நிலைவரை) 3. நெகிழ்வான (*Flexible*- சாதாரண நிலையிலிருந்து உயர்நிலைவரை) 4. தாறுமாறான (*Chaotic*- மிக்க உயர்நிலை).

குடும்ப ஒட்டிணைவாற்றல் போலவே குடும்ப இசைவுத் திறனிலும் இரண்டாவதும் மூன்றாவதுமே சீரிய குடும்ப உறவினை நிலைநாட்டக் கூடியன. கட்டுறுதியான நிலையும் தாறுமாறான நிலையும் குடும்ப உறவினைக் கீழ்நிலைக்குக் கொண்டு போய்விடும். சிறார்கள் பெற்றோர்களிடம் வீட்டு நடைமுறை விதிகளில் சில சமயங்கள் பேரம்பேசும் தன்மையை எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்புப் பிழையில்லை. பேரம் பேசுவதிலும் தப்பில்லை. தொலைக்காட்சி பார்க்க ஒதுக்கும் நேரம், வெளியே சென்றால் வீடு திரும்பும் நேரம் போன்ற பலவற்றில் பேரம் பேசலாம். விட்டுக் கொடுத்தால் ஒழுங்காட்சி தவறிவிட்டது என்று அர்த்தமில்லை. ஆனால் பேரத்தில் நடந்த ஒப்பந்தம் நிலைநாட்டப்பட வேண்டிய கட்டுப்பாடு அவசியம். ஒப்பந்தம் மீறினால் அதற்குரிய தண்டனை பெறவேண்டியதும் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டிய அம்சமாகும்.

பெற்றோர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டிய முக்கியமான விஷயம், குடும்பச் செயற்கூட்டு உறவின் தலைமைத்துவம் யாருக்கு உரியது என்பதே. தந்தையேதான் அந்த நிலையினை எடுக்க வேண்டும். எனவே, குடும்ப ஆதிக்கத்தையும் அவர் தலைமேற் கொள்ள வேண்டும். செயற்கூற்று உறவில் சில சமயம் தற்காலிக மாற்றம் ஏற்படலாம். ஆனால் அந்த மாற்றம் நிரந்தரமானதாக மாறுமாயின் குடும்ப இசைவுத் திறன் தாறுமாறானதாகி விடும் (*Chaotic*). ஆகவே நாணயக் கயிறு அப்பாவிடமோ அல்லது அம்மாவிடமோ இருக்க வேண்டியது அவசியம்.

தொடர்புகொள் முறை:

குடும்ப அங்கத்தவர்கள் தத்தம் தேவைகள் மாறுகின்ற பொழுதோ அல்லது தமது விருப்பத் தேர்வுகளையோ மற்றவர்கட்கு எடுத்துக் கூறுகின்ற பாங்கினையே தொடர்புகொள்முறை என்போம். தன்னுறுதியுடைய தொடர்பு-கொள் திறன்களாகிய (*Positive Communication Skills*), மற்றவர்களின்

உணர்வுகட்கு மதிப்பளித்தல், ஆதரவு நல்கும் கருத்துரைகள், மனம் லயித்துச் செவிமடுத்தல் குடும்ப உறவினை உன்னத நிலைக்கு உயர்த்தவல்லன. அதேசமயம் இரட்டை அர்த்தம் தரக்கூடிய பேச்சு வார்த்தை, ஆளாளுக்கு ஒரு நீதி என்ற கோட்பாடு பிரச்சனைகளை உண்டாக்கிக் கொள்ளுதல் போன்றவை குடும்ப உறவினைப் பெரும் அளவிலே பாதிக்கக் கூடியவை.

தொடர்புகொள் முறை மிகவும் முக்கியமான கோட்பாடு. இதில் ஒரு முக்கியமான அம்சம், நாம் தவறு செய்து விட்டால் சுய கௌரவம் பார்க்காமல் பிழையினை ஒப்புக் கொண்டு அதற்கு மன்னிப்பையும் கோருவது ஆகும். மன்னிப்புக் கேட்பது கௌரவக் குறைவு என்று கருதுவோமாயின் பிள்ளைகளின் நியாயத் தராசிலே நாம் அதள பாதாளத்திற்குப் போய்விடுவோம். அதே சமயம் நாம் மன்னிப்புக் கேட்போமாயின் அவர்கள் எம்மிலே வைத்திருக்கும் நம்பிக்கை பன்மடங்கு அதிகரிப்பதாலே, அவர்கள் பெற்றோருடன் அளவளாவுவதற்கு நாட்டம் காட்டுவர். நம் பெற்றோர்கள் தெரிந்துகொள்ள வேண்டியவற்றுள் முக்கியமானது பிள்ளைகள் தம்மை முழுமையான குடும்ப அங்கத்தவர் என்று, பெற்றோர்கள் கருதவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர் என்பதைத் தாம் சொல்லும் கருத்துக்கள், தமது உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும் என்றே பிள்ளைகள் எண்ணுகின்றனர். சில சமயங்களிலே பெற்றோர்களுடைய முழுமையான பொறுப்பு ஒன்றுமே பேசாமல், எவ்வித கருத்தும் தெரிவிக்காமல் எந்த வேளையிலும் மறுத்துக் கூறாமலோ பொறுமையாக அவர்கள் சொல்லுவதைச் செவிமடுத்தலேயாகும்.

"உன் தங்கச்சி, தம்பி செய்கின்றான் உம்மால் செய்ய முடியாதா" என்று நாம் பல சந்தர்ப்பங்களில் மூத்த பிள்ளையையோ அல்லது இளைய பிள்ளையையோ கேட்டு அவர்களின் சுயமதிப்பினை கீழே ஒருபடி தள்ளியும் விடுவது உண்டு. இதனிலும் பார்க்க மிகையான இன்னொரு பிழையையும் நம்மில் பெரும்பாலோர் செய்கின்றோம். அது ஒரு பிள்ளை செய்த குற்றத்திற்கு இன்னொரு பிள்ளையைத் தண்டித்தலாகும். மூத்த பிள்ளை நடத்தையில் சில பிழைகள் விட்டிருக்கலாம். அதற்காக எந்த ஒரு பெற்றோரும் இளைய பிள்ளையின் வளர்ப்பு முறையிலே கறார் பேணுவதோ "உன் அக்காவிற்கு இடங்கொடுத்துத்தான் குட்டிச்சுவராகி விட்டா, அதே பிழைகளை உன் வளர்ப்பிலே நான் விடமாட்டேன்" என்று இளைய பிள்ளையை நோக்கிக் கூறுவது எந்த வகையில் நியாயம். இப்படிச் செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

வளரிளம் பருவத்தவரை மிகச் சுலபமாக கிளர்ந்து எழச் செய்யும் இன்னோர் விடயம் அவர்களது நண்பர்கள் சம்பந்தமானது. அவர்களது நண்பர்களை தம் பெற்றோர்கள் மதிக்கவில்லை என்பதை அவர்களால் ஏற்க முடியாது. தம்மைப் பெற்றோர்கள் அவமானப்படுத்துவதாகவே உணர்கிறார்கள். "உனது நண்பர்களை எனக்குப் பிடிக்கவில்லை" எனத் தாயோ தந்தையோ சொன்னால், தம்மில் ஒரு பகுதியைப் பெற்றோர் வெறுப்பதாகவே கொள்வர். நண்பர்களைத் தேர்ந்து எடுக்கும் தகைமை தமக்கு இல்லை எனவும், தம்மைப் பெற்றோர்கள் பொறுப்பாட்சி உடையவர்களாகக் கருதவில்லை எனவும் எண்ணுவார்கள்.

(மே 1997)

எமது கடமைக் கூறுகள் (Roles) மாறுகின்றன

இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல் ஆற்றின் நின்ற துணை

என்கிறது குறள். பெற்றோர், மனைவி, குழந்தைகள் என இயற்கையாக அமைந்த மூவர்க்கும் நல்ல துணையாக குடும்பத்தில் வாழ்பவன் இருக்க வேண்டும். வள்ளுவர் காலத்திலே கருக் குடும்பம் என அழைக்கப்படும் *(Nuclear Family)* முறை இருந்திருக்க முடியாது. கூட்டுக் குடும்ப முறை *(Extended Family)* எனப்படும் விரிந்த குடும்ப முறையே நடைமுறையில் இருந்திருக்கும்.

துணை என்பது வெறுமனே உணவு, உறைவிடம் கொடுப்பதோடு மாத்திரம் சம்பந்தப்படவில்லை. துணை என்பது உடற்றொழிலியல் தேவைகளை நிறைவு செய்வதுடன் நின்று விடாது உணர்ச்சிவயத் தேவை, சமூகவியல் தேவை, உளவியல் தேவை ஆகியவற்றையும் ஈடுசெய்ய வேண்டியது இன்றியமையாதது. இவ்வளவு தேவைகளையும் ஈடுசெய்து பிள்ளையைச் சான்றோன் ஆக்குவது தந்தையின் கடமைக் கூறு. தந்தைக்கே உரியது என்று கூறிவிடுகிறார் ஔவையார். வெறுமனே ஈன்று புறந்தருதல் மாத்திரமே தாயின் கடமைக்கூறு ஆகிவிடுகிறது. இல்லாள் அகத்திருந்து வெறுமனே பிள்ளைபெற்று அதனை வளர்த்துக் கணவனைச் சீராட்டி ஒவ்வொரு வெற்றியீட்டும் ஆண்மகனுக்கும் தூண்டுகோலாய் ஒரு பெண் இருப்பாளென்று கூறிப் பெண்ணை வெறுமனே ஒரு உயிர்ப்பற்ற கடமைக் கூறுடையாளாகக் கண்ட காலம் போய்விட்டது.

இரு பெற்றோர்களும் வீட்டிற்கு வெளியே வேலை பார்ப்பது காலத்தின் கட்டாயமாகிவிட்டமையால் பெற்றோருடைய கடமைக் கூறுகளிலும் மாற்றம் ஏற்படுவது இன்றியமையாததாகிவிடுகின்றது. அது மாத்திரமல்லாது பெற்றோரின் பெற்றோர் குடும்பத்தின் முக்கியத்துவம் வாய்ந்த நபர்களாகின்ற நிலை ஏற்படுகின்றது. பேராசிரியர் *Ben Schlesinger* (பென் சிளீசிங்கர்) புலம்பெயர்ந்த குடும்பங்களிலே பேரனேதான் தம் குடும்பத்தின் வேர்கள் பற்றியும் வரலாறு பற்றியும், குடும்ப விழுமியங்கள் பற்றியும் எடுத்துக் கூறவேண்டும் என்கிறார். சிறார்கள் பலருக்குத் தங்கள் குடும்பங்கள் எங்கிருந்து வந்தன என்பதே தெரியவில்லை என வருத்தம் தெரிவிக்கின்றார்.

பல சிறார்கள் பெற்றோர்களிலும் பார்க்கக் கூடுதலாக பெற்றோரின் பெற்றோர்களுடனேயே ஒட்டுதல் காட்டுகின்றார்கள். தமது தேவைகட்கும் பாதுகாப்புகட்கும் அவர்களையே நாடுகின்றார்கள். “எனது பேரன் விழுந்தால்கூட, *'Grandpa'* என்று அழுவானே தவிர தனது அப்பாவை அழைப்பதில்லை” என

ஒரு கிறான்ட்பா சொன்னார். உண்மை இல்லாமல் இல்லை. விவாகரத்து வீதம் அதிகரித்து வருகின்றமையால், பேரன்மார் சிறார்களுடன் இடைச்செயல் (*Interact*) ஆற்றுதல் அவர்கட்குத் தேவையான ஆண் மாதிரிஉரு ஆக முடிகின்றது. பொதுவாக, எமது சமூகத்திலே பெற்றோர்களின் பெற்றோர்களுக்கும் பிள்ளைகட்கும் இடையே உள்ள பாசப்பிணைப்பு பிள்ளைகள் வளர வளரச் சிறிது சிறிதாகக் குறைந்து விடுவது வருத்தத்திற்குரியது. இதற்குரிய காரணங்களில் முக்கியமானவை மொழியும், கலாசார விழுமியங்கள் பற்றிய எதிர்பார்ப்புக்களுமேயாகும்.

அவர்கள் வளர வளர வீட்டு மொழியில் அவர்களின் பேச்சாற்றல் குறைவது பெற்றோரின் பெற்றோருடன் கலந்துரையாடுவதற்குத் தடையாகின்றது. தமிழை வீட்டு மொழியாக உபயோகித்தால் இப்பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் பெற்றோர்களின் ஒத்துழைப்பு இதற்கு மிக அவசியமாகின்றது. ஆங்கிலத்தை வீட்டு மொழியாக உபயோகிக்கும் மனப்பான்மையைப் பெற்றோர்கள் விட்டொழித்தாலன்றி இதற்கு விமோசனம் காணமுடியாது. கலாசார விழுமியங்கள் பற்றிய வயதானோருடைய எதிர்பார்ப்புக்களை இளைய தலைமுறையினர் ஈடுசெய்வதில் பல முரண்பாடுகள் ஏற்படவே செய்யும். இதை ஓரளவு அவர்கள் போக்கிலே விட்டுப் பிடிப்பது பெரியோர்களைப் பொறுத்தளவிலே சிறந்த அணுகுமுறையாகும்.

இன்றைய ஆண்களைப் பொறுத்தமட்டிலே, அவர்கள் குழந்தைகளாக இருந்தபோது அவர்கள் தந்தையின் செயற்பாடுகள் தற்சமயம் அவர்கள் தந்தையாய் செயற்படுவதிலும் பார்க்க அதிகம் மாறுதல் உடையதாய் இருப்பதைக் காணமுடியும். அவர்கள் தமது பிள்ளைகளுடன் கூடிய நேரம் செலவிடவேண்டியவர் ஆகின்றனர். தமது பிள்ளைகளுடன் உணர்வு பூர்வமான தொடர்பினை ஏற்படுத்துவதும் அவசியமாகின்றது. "குடும்பத்தினருக்கு உணவு, உடை போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு வேண்டிய தொழிலாற்றுவதுடன் குடும்பத்தில் ஒழுங்காட்சி நடத்தும் இல்லத் தலைவன் என்ற கடமைக் கூறில் இருந்து இன்றைய தந்தை விலகி, பேணிக் காப்பவராகவும் (*Care Giver*) பேணி வளர்ப்பவராகவும் (*Nurturer*) பரிபூரணமான ஒரு மாற்றத்திற்குட்படுகின்றார்" என *Robert Glossop* எனும் சமூகவியல் அறிஞர் கூறுகிறார். மேற்படி இரண்டு செயற்பாடுகளும் நெடுங்காலமாகவே தாயின் கடமைக்கூறாகவே இருந்து வந்துள்ளன.

பெற்றோருக்குரிய கடமைகளில் (*Parenting*) ஆண்கள் முன்னிலும் பார்க்க இப்பொழுது முனைப்புடன் ஈடுபடுகிறார்கள் என்பது உண்மையே. ஆனாலும் குழந்தை பராமரிப்பு, வீட்டின் அன்றாட வேலைகள் பெரும்பாலானவை பெண்களாலேதான் செயற்படுகின்றன அல்லது ஆண்களை அதைச் செய்யுமாறு பெண்கள் ஞாபகமூட்டவோ, வேண்டிக்கொள்வதோ அவசியமாகின்றது என்றே அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்று தெளிவாக்குகின்றது. "குக்கரை ஒருக்கா *off* பண்ணி விடுகிறீர்களா?, குழந்தையை ஒருக்கா பிடிக்கிறீர்களா?" போன்ற வேண்டுகோள்கள் நம் காதுகளில் சாதாரணமாய் வந்து பாயும் அமுத வார்த்தைகள் (!).

அண்மையில் வெளிவந்த ஆய்வு அறிக்கையொன்றின்படி, ஐக்கிய அமெரிக்காவிலே தினசரி பிள்ளைகளுடன் குறைந்தது ஒரு மணித்தியாலமாவது செலவிடுகின்ற தந்தைமார் 25 வீதத்திலும் குறைந்தோரே. வடஅமெரிக்காவில் இலட்சக் கணக்கான பிள்ளைகளுக்கு பெற்றோர் விலக்கல் (*Parental Deprivation*) என்னும் உபாதையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறது. இதன் அறிகுறிகள், உணர்வு நிலைக் குழப்பங்கள், அழுத்த நிலை, முரட்டுத்தனம், பாடசாலையிலிருந்து நழுவிச் செல்லல் போன்றவையாகும். பெற்றோர் விலகல் உபாதைகளுக்குக் காரணமாவது தந்தை உடலாலோ அல்லது உள்ளத்தாலோ குடும்பத்தை விட்டு விலகிச் செல்வதே. தந்தையர்கள் குடும்பத்துடன் ஒட்டி உறவாடி இருப்பார்களானால், பிள்ளைகளுடைய பாடசாலைப் பெறுபேறுகளில் மாத்திரமன்றி, அவர்களுடைய நடத்தையிலும் ஏனையோருடன் பழகும் முறைகளிலும் பெரும் முற்போக்கான மாற்றங்களைக் காணமுடியும்.

"வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன், சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடுவேன்; சின்னக் குழந்தைக்கு சிங்காரப் பாட்டிசைத்தே ஆட்டங்காட்டி அழாதபடி பார்த்திடுவேன்.

> இரவிற் பகலிலே எந்நேரமானாலும் சிரமத்தைப் பார்ப்பதில்லை;
> தங்களுக்கோர் துன்பமுறாமற் பார்ப்பேன்.

இன்றைய கணவன் செய்ய வேண்டியவையை என்றோ பாரதி "கண்ணன் என் சேவகன்" என்றே கூறிவிட்டான். குடும்பத்தைப் பொறுத்தமட்டிலே கணவன் ஒரு சேவகனே. இன்றைய தந்தையின் கடமைக் கூறுகளையும் தீர்க்கதரிசி பாரதி விட்டு வைக்கவில்லை.

> "நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
> பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்"
> என்கிறான் பாரதி.

அன்றைய தந்தை ஆட்சி ஆதிக்கமுடையவராகவே (*Authoritarian*) குடும்பத்தை வழிநடத்தினார். இன்றைய தந்தை ஆணையுரிமை (*Authority*) உடைய ஒரு நண்பனாகவே குடும்பத்தை வழிநடத்துவதில் பங்குகொள்கிறார். பல பெற்றோர்களுடைய பிரச்சனை அவர்கள் பெற்றோர்களாக இருப்பதில் பெரும் பகுதிநேரத்தைச் செலவிடுகிறார்களே அன்றி பிள்ளைகளுடன் அதிக நேரத்தைச் செலவிட எத்தனிக்கும் வயது வந்தோராக இருக்க முனைவதில்லை. அவர்கள் பெற்றோர்களாக இருக்க முனைகின்ற பொழுது பிள்ளைகளுடைய செயல்களில், பேச்சுக்களில், சிந்தனைகளில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவர முனைவார்கள். ஆனால் ஒரு வயதானவர் சிறார்களுடன் பேசும் பொழுதோ அத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாமையால் அவர்கள் நியாயபூர்வமான அறிவினைப் பெறுவார்கள். வளரிளம் பருவத்தவர் ஒருவர் என்று தனது தந்தையிடம் தனது வாழ்க்கைப் பிரச்சனை பற்றிக் கூறி அவரிடம் ஆலோசனை பெற்று அதன்படி நடக்கிறாரோ, அன்றுதான் அவர்கள் வாழ்க்கையில் அர்த்தம் ஏற்படுகிறது. பொதுவாகவே அந்த வயது பெற்றோர் களுடன் முரண்பாடு உண்டாகின்ற, பெற்றோர்களைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்ற பெற்றோர்களை விட்டு விலகி ஒத்த வயதுடையோரை நாடிச்

செல்கின்ற குழப்பமே மொத்த உருவமாக மாறிவிட்ட பருவம். இந்தப் பருவத்தில் தந்தையை மதிமந்திரியாக எண்ணி அவர் அறிவார்ந்த வழிகாட்டலை வளரிளம் பருவத்தினர் நாடி நிற்பார்கள் என்றால் அந்தக் குடும்பம் வெற்றியின் படிகளில் கால்வைத்துள்ளது என்பதே அர்த்தமாகும். சிறந்த மந்திரியாய் செயலாற்றுதற்கு நிறையவே பொறுமை வேணும். பல சந்தர்ப்பங்களிலே அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும், மறுத்துப் பேசவோ கருத்துச் சொல்லவோ கூட முனையப்படாது. தனது தனித்துவத்தை நிலைநாட்ட முனைகின்ற இந்த வயதினிலே தான் கூறுவதைத் தந்தை செவிமடுக்கவில்லை; தன்னை இன்னும் சிறுபிள்ளையாகவே எண்ணுகிறார் என்ற உணர்வு அவர்களைப் பெற்றோரிலிருந்து விலகிச் செல்ல வைத்துவிடும்.

"Parents are the Child's first teachers" என்பார்கள். குழந்தை பிறந்ததிலிருந்து அதன் ஒவ்வொரு செய்கையையும் பெற்றோர்களே நல்லாசிரி-யராய்க் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆரம்பத்தில் கல்வி அறிவையும் தொடர்ந்து நற்பண்புகளையும், விழுமியங்களையும் பெற்றோர்கள் பிள்ளைகட்கு சொல்லாலும் செயலாலும் பயிற்றுவிக்கின்றனர்.

இன்றைய பெற்றோர்கட்கு வேறு என்ன தெரியாமல் இருந்தாலும், நாசூக்காக பழக, பேசத் தெரிந்திருத்தல் அவசியம். இங்கேயுள்ள நம் பிள்ளைகள் பலருக்குக் கொஞ்சம் வாய் நீளம். எனவே எதைச் சொல்வதா யிருந்தாலும் அதை அதன் அவசியம் கருதி ஏற்ற சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும். அவர்கள் மனதில் பதியக்கூடியவாறு சொல்ல வேண்டும். உதாரணமாக, அவர்கள் தொலைக்காட்சி பார்க்கையில் ஏதாவது சொல்வ-தாயின் ஒன்றில் விளம்பர இடைவேளையின்போது சொல்ல வேண்டும். அல்லது தொலைக்காட்சியை நிறுத்தச் சொல்லி அதன் பின்னர் கூறவேண்டும். இல்லையேல் கூறியது செவிடன் காதில் ஊதியதுதான்.

எமது சமூகத்திலே பெண்களின் கடமைக் கூறுகளிலே பாரதூரமான மாற்றம் ஏற்படவில்லையென்பது உண்மை என்றாலும் அவர்களின் கடமையின் பரிமாணம் அதிகரித்துள்ளதைக் கூறியேதான் ஆகவேண்டும். அவர்கள் அலுவலகங்களிலோ, ஆலைகளிலோ வேலை செய்து வீடுவந்ததும் அவர்களை இன்னொருவகையான கடமை எதிர்நோக்குகின்றது. கனடியப் பெண்களே இதைப் பற்றி வருந்திக்கூறியுள்ளார்கள். ஒரு பெண்ணிற்கு ஓய்வு என்பது மிகக் குறைவு என்று அவர்கள் கூறியுள்ளார்கள். அண்மையிலே எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றின்படிக்கு கனடிய பெண்களில் 51 வீதத்தினரும் ஆண்களில் 41 வீதத்தினரும், குடும் பத்தில் ஒருவர் மாத்திரம் தொழில்பார்க்க மற்றவர் வீட்டு நிர்வாகத்தை பார்ப்பது உகந்தது எனத் தெரிவித்துள்ளனர். இங்கு மாத்திரமல்ல ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் கூட பாரம்பரியமான குடும்ப விழுமியங்களைப் பேணுதல் பொருளாதாரத் தேவையிலும் பார்க்க முக்கியத்துவம் வாய்ந்தது என்ற அபிப்பிராயத்தை பெரும்பாலோர் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

"யுத ் லிங்" (*Youth Link*) எனும் அமைப்பின் நிர்வாக இயக்குனரான

கேர்மன் என்பவர் இன்றைய சமூகத்திலே ஆண்கள் ஆற்றவேண்டிய கடமைக் கூறுகள் பற்றிய ஒரு குழப்ப நிலையே உள்ளது என்கிறார். ஒரு பிரமாதமான மாற்றம் நடைபெற்றுள்ளது. ஆண் மகன் ஒரு அரிய குடும்பத்துக்குரியவனாகவும் நல்ல தொழில் ஒன்றினை உடையவனாகவும் இருக்க அவன் மனைவி வேலைக்குப் போகாமல் குடும்பப் பாரத்தைச் சுமந்து நின்றாள்.

இன்று நிலைமை மாறிவிட்டது. பெண்கள் வாழ்க்கை முறை முற்றாகவே மாறியுள்ளது. குழப்பத்துக்குக் காரணமாய் அமைவது இன்றைய கணவன்மாரால் பெண்களின் வாழ்க்கைமுறை மாற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் உள்ளமையாகும்.

கடமைக்கூறு மாற்றம் தேவை என்பதை எந்த ஒரு ஆண்மகனும் அங்கீகரிக்காமல் இல்லை. ஆனால் வெகு இலகுவில் தமது கடமைக்கூறு மாற்றத்தை அவ்வளவு எளிமையாக அவர்களால் அசைபோட முடிவதில்லை. எமது பெண்களின் புரிந்துணர்வும், எதையும் சமாளித்துக் கொண்டு செல்லும் மனப்பாங்கும் எமது குடும்பங்களைப் பல்கலைக்கழகங்களாக மாற்றுகின்றன.

(ஏப்ரல் 1997)

குடும்பம் ஒரு ஆலயமா? அல்லது வியாபார நிலையமா?

அரச குடும்பத்துக் கதை. உலகெல்லாம் கெக்கலிட்டுச் சிரித்தது. இளவரசன் ஆன்றூவின் மனைவி சாரா சுவிஸ் நாட்டின் உல்லாச வாசஸ்தலத்திலே நிர்வாணமாக நிற்க அவரது காற் பெருவிரலை, அவரது நிதி ஆலோசகர் வாயினால் சுவைத்துக் கொண்டிருப்பதை படம் எடுத்தவர்கள் உலகப் பத்திரிகைகள் யாவற்றிலும் பிரசுரமாகச் செய்தனர். விளைவு கணவனும் மனைவியும் விவாகரத்துப் பெற்றனர். சாராவுடன் அவர்களின் இரு பெண்குழந்தைகளும் வாழ்கின்றனர். இது பழைய செய்தி! ஆனால் அண்மையில் வந்த செய்தி! இளவரசன் ஆன்றூவும் சாராவும் ஒரே வீட்டில் மீண்டும் வாழ்கிறார்கள். கணவன் மனைவியாக அல்ல அந்த இரு குழந்தைகளினதும் பெற்றோர்களாக. எமது கலாசாரத்திலே இப்படியான ஒரு நிகழ்ச்சியை கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது. சில சமயங்களில் உலக சனத்தொகையில் ஒன்று குறைவதற்கு காரணமாகக்கூட அமையலாம்.

மீண்டும் ஒரு குடிலில் வாழ்வதற்குச் சாரா சொல்கின்ற காரணத்தைப் பார்க்கின்றபோது அவர் ஒரு மனைவியாய் போற்றும் வண்ணம் வாழாவிட்டாலும் ஒரு தாயாக சிறந்து வாழ்கின்றார் என்பதைக் காட்டுகின்றது. தமது பிள்ளைகள் நன்கு பேணி வளர்க்கப்பட வேண்டும். தாய் தந்தையர் மாட்டு, பாசம் வைக்க வேண்டும் என்பதால் Joint Parenting எனும் கூட்டு பிள்ளை பராமரிப்பிற்காகவே தாம் அப்படி வாழ்கின்றோம் என அம்மையார் கூறியுள்ளார்.

எம்மவரைப் பொறுத்தமட்டிலே இது ஒன்றும் புதிது இல்லையே எனச் சிலர் கூறலாம். எமது பாரம்பரியமான குடும்ப அமைப்பிலே எத்தனையோ தாய்மார்கள் பிள்ளைகளின் சுபீட்சமான வாழ்வு ஒன்றினுக்காகவே பல கீழ்த்தர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கணவன்மாருடன், எத்தனையோ அல்லல் அவலங்களுக்கிடையேயும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தது உண்மையே.

ஆனால் இன்றைய உலகின் எழுதிவைக்காத நியதிப்படிக்கு சராசரி 50% திருமணங்கள் விவாகரத்திலே முடிவுறுகின்றன என்பதைக்காணும் போது பிள்ளைகளுடைய அவலநிலை பரிதாபகரமானதாக உள்ளது. வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் பெற்றோரின் பிரிவின் பாதிப்பால் வீட்டை விட்டே ஓடி விடுகின்றார்கள்.

அன்றாட பொருளாதார அரசியல் சமூக கட்டமைப்புகள் போன்ற காரணிகளே குடும்ப வாழ்விற்குச் சவாலாக (Challenges) அமைகின்றன. உதாரணமாக நாட்டின் பொருளாதாரம் முன்னேறுவது குடும்ப பொருளாதாரம் முன்னேறுவதற்கும் வழிவகுத்து விடுகிறது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி

அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துகின்றமையால் மேலும் மேலும் பெண்கள் வீட்டிற்கு வெளியே தொழில் ஏற்க அதன் விளைவாக இரு ஊதியம் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கச்செய்கின்றது. இதன் விளைவாக அக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துகொண்டு போவது மாத்திரமல்லாது, பெண்கள் தமது பொருளாதார உய்வினுக்கு (*Economic Survival*) ஆண் ஒருவரைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை என்ற நிலை ஏற்படுகின்றது. குடும்பங்கள் பல்வேறுவிதமான மாற்றங்களை அனுபவிக்கின்றன. சில குடும்பங்களிலே அவர்கள் எதிர்பார்த்த மாற்றங்களிலும் பார்க்க பாரிய மாற்றங்கள் வாழ்க்கை முறையிலே (*Life style*) ஏற்பட்டுள்ளன. இதனால் வெறுமனே தேவைகள் எனக் கணிக்கப்பட்ட சில வசதிகள் இப்போ இன்றியமையாததாகி விட்டன (*meterial wants have become material needs*). இரண்டாவதாக தமது குடும்ப உறவிற்கு அப்பால், சுயாதீனமாக இயங்கக் கூடியநிலை சில பெண்களைத் தன்னாட்சியுரிமையுடையோராகச் செயற்பட வைத்துவிட்டது. அதே சமயம் பெரும்பாலான பெண்கள் தமது கடமைக் கூறுகளை இரட்டித்து குடும்ப சம்பந்தமான பொறுப்புக்களையும் அலுவலக பொறுப்புக்களையும் பாங்காகவே செய்து வருகின்றனர். மூன்றாவதாக தொழில் ஒன்றினைத் தேடிக்கொண்ட காரணத்தால் பொருளாதார சுதந்திரம் பெற்ற பெண்களிற் சிலர் திருமணத்தை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை.

பெண்கள் பொருளாதார ரீதியாகத் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள கூடிய தகைமை பெற்றமையால் மணவாழ்க்கையை மேற்கொள்ள தவிர்ப்பதையோ அல்லது மணவாழ்க்கையை விட்டு விலகித் தனியே வாழ்வதோ மிகவும் சுலபமான விஷயம். எனவே, குடும்பத்தின் பொருளாதார விரிவாக்கம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பல்வேறு வாழ்க்கைமுறைத் தேர்வுகளை கொடுத்துள்ளது. கொன்வே (*J.F. Conway*) என்னும் சமூகவியல் அறிஞர் கவனத்தை ஈர்க்கும் சில அவலநிலைகள் பற்றி கூறியுள்ளார். மாதிரிக்குச் சில: கல்யாணம் என்னும் உணர்வுபூர்வமான பந்தத்திலே ஈடுபட விரும்புவோருடைய எண்ணிக்கை பெரும் அளவிலே குறைந்து கொண்டு போகின்றது. ஒற்றைப் பெற்றோர் கொண்ட அல்லது வெறுமனே சேர்ந்து வாழ்கின்ற குடும்ப முறை பாரம்பரிய குடும்ப வாழ்க்கை முறையிலும் கவர்ச்சியுடை தாய் அமைந்து அதிகரித்துக் கொண்டு போகிறது. மனைவிமீது வன்முறைப் பிரயோகம், சிறார்கள் பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் துஷ்பிரயோகிக்கப்படுதல் அதிகம் பெருகிக்கொண்டு போகிறது. கனடாவின் பிள்ளைப்பேறு வீதம் குறைந்து விட்டது. குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ள பலர் விரும்பியோ விரும்பாமலோ பிள்ளை பெறுவதைத் தவிர்க்கின்றனர். குழந்தை இறப்பு வீதம் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

Margaret Mead (மார்கறெற் மீட்) என்னும் புகழ் பெற்ற சமூகவியலறிஞர், கல்வி அறிவு பெற்ற நடுத்தரவர்க்கப் பெண்களைப் பற்றிக் கூறுகின்ற பொழுது அவர்கள் ஆரம்ப காலங்களிலே தான் எவ்வளவு சிறந்த மனைவியாகவும் சிறந்த தாயாகவும் செயற்படுகின்றா என்பதைக் காட்டும் முகமாக தமது சக்தி முழுவதையும் வீடு பராமரித்தலிலும், கணவனை இரட்சிப்பதிலும் பிள்ளை வளர்த்தெடுப்பதிலுமே செலவிட்டார்கள். ஆனால் இன்றோ நடுத்தர வர்க்கப் பெண்களுக்கு வேலைக்குப் போவதில் ஏற்படக்கூடிய

இன்பம் நாளாந்தம் குழந்தை பராமரிப்பதில் இல்லை என்கிறார். எனவே வீடா? தொழிலா? என்பது பல பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனையாகிறது.

நாட்டின் பொருளாதாரப் பின்னடைவும் குடும்ப நிலைகளைப் பெரும் அளவில் பாதிக்கவே செய்கின்றன. பொருளாதாரச் சீர்குலைவு குடும்பத்திலே பொருளாதார அவலநிலையை ஏற்படுத்துகின்றது. பொருளாதார அவலநிலை என்பது வாழ்வுடன் சம்பந்தப்பட்ட துறைகளிலே தனிநபர் ஒருவருக்கோ, குடும்பத்திற்கோ ஏற்படக்கூடிய அழுத்தநிலைகள் ஆகும். இதன் முக்கிய கூறுகள் பொருளாதார நிலையற்ற தன்மை, தொழில் நிச்சயமின்மை, பொருளாதார நலிவு, பொருளிழப்பு. இதன் காரணமாக ஏற்படும் அழுத்தநிலை பாரதூரமாக கணவன், மனைவி, பிள்ளைகள் என எல்லோரையுமே பாதிக்க முடியும். இதனை எங்ஙனம் தாக்குப்பிடிக்கிறார்கள் என்பது அக் குடும்பம் பின்பற்றும் விழுமியங்களில் பெரிதும் தங்கியுள்ளது.

அரசியல் ரீதியாகப் பார்க்கின்ற பொழுது பெண்களுக்குரிய அந்தஸ்து காலப்போக்கில் மாறிக்கொண்டு போகின்றமை குடும்பத்திலேயும் இன்றியமையாத சில மாற்றங்களை எதிர்நோக்கச் செய்கின்றது. தொழில் ரீதியாக பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிற்சில தொழில்களில் ஒத்த ஊதியம் இல்லை எனினும், சட்டமூலத்தின் மூலம் அத்தகைய ஒரு நிலையினை எய்தப் பகீரத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது உண்மையே.

ஆண்களின் வன்முறைக்கு ஆளாகும் பெண்களுக்கு சட்டமுறையிலும், சமூகசேவைகள் மூலமும் போதிய ஆதரவும் பாதுகாப்பும் கிடைக்கவே செய்கின்றன. பெண்களுடைய அந்தஸ்து மேலும் மேலும் வலியுறுத்தப் படுவதால், குடும்பத்திலே நாளாந்தம் நடைபெறும் இடைத் தாக்கங்களும், செயற்கூறுகளும் புதிய பரிமாணங்கள் பெறுகின்றன. ஆணும் பெண்ணும் உழைத்துக் குடும்பத்தை நடத்திய போதும் ஆணையே குடும்ப பொருளாதாரத்திற்குகாரணமாக ஏன் அழைக்க வேண்டும்? குடும்பத்திலே தொழில் சமத்துவம் ஏற்படுகின்ற பொழுது இருவருமே பொருளாதார மேம்பாட்டிற்குக் காரணமானவர் எனக் கணிக்கப்படுகின்றனரா? அப்படியாயின் அன்றாட வீட்டு அலுவல்களிலே ஆணும் பெண்ணும் சமபங்கேற்கிறார்களா? குடும்பம் சார்ந்த விடயங்களில் தீர்மானம் எடுப்பது யார்? இப்படிப் பல வினாக்கள் பெண்நிலைவாதிகளால் எழுப்பப்படுவதால், குடும்பங்களிலே சிறிதளவு கிளர்ச்சிகளுக்கு அடிகோலுகிறது என்பது சங்கடமான உண்மையே. பெண்நிலைவாதிகளின் குடும்பம் பற்றிய உளக்காட்சி "சமூகத்தின் கௌரவத்திற்குரிய விஷயங்கள் எல்லாவற்றிலும் பெண்களுக்குப் போதிய சமசந்தர்ப்பங்கள் கொடுக்கப்படாமல் அவர்கள் அடக்கிவைக்கப்படுகின்றனர்" என்ற மெய்கோள்களின (*Premise*) அடிப்படையிலேயே எழுந்தது என வால்கர் மாற்றின், தொம்சன் என்போர் குறிப்பிடுகின்றனர். இதில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால் ஆண் ஆணாக இருப்பது ஒன்றைத் தவிர பெண் வேறு எந்த விதத்திலும் ஆணுக்குச் சளைத்தவள் அல்ல என்பது ஆதாரபூர்வமான உண்மை. ஜிம் செல்னர் (*Jim Sellner*) என்பவர், *The Phallic Imperative* எனும் நூலில் "ஆண்கள் ஆண் டைனோசர் தன்மைச் சிந்தனைகளை அறவே நீக்க வேண்டும். மூர்க்கத்தனம், வன்முறை, விதண்டாவாதம் போன்றவற்றைக்

கைவிட்டு, புதிய முறை ஆண்மை இயல்புகளாகிய விட்டுக் கொடுத்தல், ஒத்துப்போதல், கருத்தைச் செவிமடுத்தல், செயலாற்றல் ஆகியவற்றைக் கையாண்டால் பிரச்சனைக்கே இடமில்லை என்கிறார்.

அடுத்து சமூகக் கட்டமைப்பு. சமூகக் கட்டமைப்பின் முறையிலிருந்து ஒரு பொழுதும் தனிநபரைப் பிரித்துப் பார்க்க முடியாது. உதாரணமாக எங்கோ ஒரு பெண் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கலாம். சமூகக் கட்டமைப்பு அப்பெண்மணி இந்த நிலையை அடைவதற்கு எவ்விதத்தில் உறுதுணையாய் நின்றது என்பதை உணரவேண்டும். சமூகத்தின் முக்கிய செயற்கூறு குடும்பமாக அமைகின்றமையால் குடும்பம் சமூக அமைப்பினையே பிரதிபலிக்கிறது. இதன் விளைவு குடும்பத்திலேயும் பெண் கீழான நிலையிலேயே இருக்கவேண்டி-யுள்ளது. மாறுபட்டுக்கொண்டு இருக்கின்ற சமூக அமைப்பிலே தனிநபர்க்கிடையே மாறாத தொடர்பு ஒன்றினை ஏற்படுத்தும் பிணைப்பு ஒன்றே திருமணம் எனப்படுகிறது. அப்படியான ஓர் பிணைப்பினை ஏற்படுத்திக் கொண்டவர்கள் அதனால் இரு சாராருக்கும் நன்மை பயக்காதவிடத்து பிரிந்து விடுவது இரு சாராருக்கும் நன்மை பயக்கும் என்பது இன்றைய சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுவாகவே விவாகரத்துக்கள் திருமணமான 12 வருடங்களின் பின்னரே நடைபெறுவதாகவும், அப்பொழுது ஆண்களின் சராசரி வயது 40 என்றும், பெண்கள் வயது 37 என்றும் கனடா புள்ளி விபரவியல் இலாகா தெரிவித்துள்ளது. 1994ம் ஆண்டில் மாத்திரம் 78,840 திருமணங்கள் விவாகரத்தில் முடிந்துள்ளன. அண்மையில் பிரபல முன்னாள் கிறிக்கட் வீரர் பற்றூடி நவாப்பின் மனைவியும், ரவீந்திரநாத் தாகூரின் மருமகளுமான முன்னாள் நடிகை சார்மிளா தாகூரும், ஒரு கணவனை நன்கு புரிந்து கொள்வதற்குக் குறைந்தது 14 வருடங்களாவது தேவை என்றே கருத்துத் தெரிவித்துள்ளார். இதை இங்கு நான் கூறுவதற்குரிய காரணம், பெரும்பாலான குடும்பங்களிலே விவாகரத்துப் பெறுகின்ற பொழுது அவர்களுக்குப் பிள்ளைகள் உண்டாகியிருக்கும். எனவே பெற்றோர்களின் திருமண முறிவு பிள்ளைகளைப் பெரும் அளவிலே பாதிக்கவே செய்யும்.

டேவிட் பிளான்ஹென்ஹோர்ன் (David Blankenhorn) என்பவர் *Fatherless America* எனும் தனது நூலிலே தந்தை இல்லாமல் வளரும் பிள்ளைகளின் பரிதாபம் பற்றிக் கூறுகின்றார். அவர்களில் பெரும்பாலோர் பாட-சாலையிலிருந்து நழுவிச் செல்பவராக (Drop outs), பால்ய குற்றவாளிகளாக வளரிளம் பருவத்தில் கருத்தரிப்பவர்களாக, வளர்ந்தபின் கல்யாண முறிவு ஏற்படுத்தக்கூடியவர்களாகவே வளர்வார்கள். கனடாவிலே ஏறக்குறைய 25% குழந்தைகள் தந்தை இல்லாமல் தாயுடன் வாழ்பவர்களாகவே உள்ளனர். பிள்ளையினுடைய முழுமையான வளர்ச்சியை, சமூகபொருளாதாரம், பெற்றோர் கல்விநிலை, குடும்ப ஊதியம், சுற்றாடல் போன்ற காரணிகள் யாவற்றிலும் பார்க்க தந்தையுடன் கூடி வாழ்தலே ஊக்குவிக்கும் என்பது டேவிட் பிளான்ஹென்ஹோன் கருத்தாகும்.

விவாகம் நடந்தால்தானே விவாகரத்து, எனவே விவாகம் செய்யாமல் இருந்து விடுவது மேல்தானே என்று கூறலாம். உண்மை என்ன? கனடாவிலே கல்யாணம் செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை சென்ற மூன்று வருடங்களில்

16வீதத்தினால் குறைந்துள்ளது. ஆனால் 1950, 60களில் உள்ள மாதிரியே ஆண் பெண்பாலார் பாலியல் தொடர்பு வைத்துள்ளனர். திருமணம் என்னும் பந்தத்தை ஏற்படுத்தாமலேயே ஒன்றாக வாழ்கின்றனர். பிள்ளைபெறுகின்றனர். சட்ட ரீதியான பிணைப்பினை ஏற்படுத்தாமல் கணவன் மனைவி என்று கூறாமல் கணவன் மனைவியாக வாழ்கின்றனர். சரிப்பட்டு வராவிட்டால் விலகி வேறொருவருடன் வாழ்கின்றனர். இத்தகைய விலங்கு வாழ்க்கை இன்றைய சமூகத்தில் அங்கீகாரம் பெற்றுள்ளது. இதன் காரணமாக கனடாவிலே பிறக்கின்ற குழந்தைகளிலே ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதியினர் கல்யாணம் ஆகாமல் கூடிவாழ்கின்ற பெற்றோர்கட்குப் பிறந்த பிள்ளைகளாகவே உள்ளனர். *"Common law Union is not a Prelude to Marriage but an Alternative to Marriage"* என்கிறார்கள். சேர்ந்து குடும்ப வாழ்வில் ஈடுபடுதல், கல்யாணத்திற்கு முன்னோடியல்ல; அதற்குப் பிரதியாக என்பார்கள்.

1970களில் கூடி வாழும் ஆண் பெண் தொகை 17 வீதமாகவே இருந்தது. ஆனால் 90-95ல் இது 57 வீதத்துக்கு ஏறியுள்ளது. அனேகமாக இப்போ நடைபெறுகின்ற திருமணங்களில் பெரும்பாலும் கூடி வாழ்ந்த இருவரையும் சட்டபூர்வமாகப் பிணைப்பது மாத்திரமே. இதனால் பெண்களுடைய நோக்கம், எண்ணம், விழுமியம் எல்லாம் பெரிய அளவிலே மாறியிருப்பதை உணரலாம். கல்வி இத்தகைய நடத்தைகளுக்குச் சாதக-மாகவும் சிலவேளை பாதகமாகவும் அமையலாம். முன்னைய காலங்களிலே சிறிதளவு கல்வியறிவுடன் நல்ல தொழில் வாய்ப்பிருந்தது. இப்போது அதிகம் கற்க வேண்டியுள்ளது. எனவே கல்வி கற்கும் வருடங்கள் அதிகரிக்கன்றன. சாதாரணமாக 25, 26 வயது வரை கல்வி. அக்கால கட்டத்திலே திருமணம் செய்து வாழ்க்கைப் பளுவினை அதிகரிப்பதிலும் பார்க்க, பொருளாதார ஸ்திர நிலை வரும் வரை கூடி வாழ்ந்தால் என்ன என்ற எண்ணமுண்டு.

மறுபுறத்தில் சமய ஈடுபாடு உள்ளவர்கள் இது பாவமான செயல் என எண்ணி அத்தகைய நிலைப்பாட்டினை எடுக்காது விடுகின்றனர். இங்ஙனம் கூடி வாழ்கின்றவர்கள் புலம் பெயர்ந்து வந்தவர்களிலும் பார்க்கக் கனடாவிலே பிறந்தவர்களில் இருமடங்கு அதிகமாக உள்ளனர். இந்த நிலைப்பாடு எமது சமூகத்திற்கு வேண்டாம் என்றே வேண்டுகின்றேன்.

குடும்பம் ஒரு ஆலயம் என்பது எமது பண்பாடு, மாதா, பிதா தெய்வமாக மதிக்கப்படுவது எமது குடும்ப விழுமியங்களில் ஒன்று. பிள்ளைகள் பெற்றோரைப் பூசிப்பவர்களாக, பக்தர்களாக அமைந்தது எமது குடும்ப நெறிமுறைகள். ஆனால் இன்றைய சமூகம் குடும்பத்தை ஒரு வியாபார நிறுவனமாக அமைக்குமாறு பணிக்கிறது. மஜ்ஜி மாமென் (Maggie Mamen) எனும் உளவியல் அறிஞர் குடும்பத்தை அவ்விதம் கணிக்குமாறு பணிக்கிறார். பெற்றோர்கள் முகாமையாளர்கள், பேரன் (Grand Parents) பேத்திகள் ஆலோசகர், பிள்ளைகள் தொழில் பயிற்சி பெற வந்தவர்கள் என்ற முறையிலே குடும்பத்தை வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுடன் நடத்தச் சொல்கிறார். எமது பெற்றோர்கள் இது பற்றிச் சிந்திக்க வேண்டும்: ஆலயமா? அல்லது வியாபார நிறுவனமா?

(ஜுன் 1997)

Are We Failing As Parents!

பெற்றோர்கள் தமது கடமையிலிருந்து தவறுகின்றனரா?

சென்ற ஒக்டோபர் மாதம் 24ம் திகதி *'The Toronto Star'* பத்திரிகையில் *"Are we Failing as Parents?"* என்ற தலைப்பிலே கட்டுரை ஒன்று பிரசுரமானது. நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சில உண்மைகள் இக்கட்டுரையிலே பிரசுரமாகியிருந்தன. தமது பிள்ளை வளர்ப்பு முறைகளை சுய மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன.

வளரிளம் பருவத்திலேயே கருத்தரித்தல், இளைஞரிடையே வன்முறை, இளம் பிராயத்திலே தற்கொலை ஆகிய யாவும் அதிவேகமாக அதிகரித்துள்ளன.

"1980இற்கும் 1993இற்கும் இடைப்பட்ட காலத்திலே இளைஞரிடையே வன்முறை ஐந்து மடங்கு அதிகரித்துவிட்டது. இதே காலத்தில் இளைஞர் தற்கொலை இருமடங்காகியுள்ளது. உலக நாடுகளிலே நியூசிலாந்து ஆகிய நாடுகளைத் தொடர்ந்து கனடா மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. வளரிளம் பருவத்தவர் கருத்தரித்தலும் சென்ற பத்து வருடங்களில் இருபது வீதம் அதிகரித்துள்ளது" என ஆதார பூர்வமாக கட்டுரையாளர் பொப் ஹார்வி கூறியுள்ளார். எமது சமூகத்தைப் பொறுத்த மட்டிலே அதிகரிப்பு வீதம் இந்த அளவிற்கு இருக்க மாட்டாது என்றாலும் கவலைப்படக் கூடிய அளவினுக்கு அதிகரித்துள்ளது என்பது ஏற்க வேண்டிய உண்மையாகும்.

உலக நாடுகள் எங்கணுமே இப்பிரச்சனைகள் ஏற்படவே தான் செய்கின்றன. எனவே இது காலத்தின் கோளாறு என்று கூறிப் பிரச்சனையிலிருந்து விலகியோ அல்லது தள்ளிப் போவதோ நாம் நமது வருங்கால சந்ததியினருக்குச் செய்யக்கூடிய பெரும் துரோகமாகவே அமையும்.

கனடாவின் நிலை பற்றிக்கூறுகின்ற றொபேர்ட் குளொசொப் என்பவர், கனடிய சமூகத்திலே நல்லொழுக்கம் நற்பண்புகள் குறைந்தமையும், நற்பண்புகள் பற்றிய தெளிவான அறிவு இன்மையுமே காரணங்களாகின்றன என்று கூறுகின்றார். நாம் அதிக சிக்கல் நிறைந்த ஒரு சமூகத்திலே வாழ்கின்றோம். இங்கு பல்லின கலாசாரச் சேர்க்கையான கலாசாரம் நிலவுகின்றது. இங்கே பின்பற்ற வேண்டியது உகந்தது என்று தேர்ந்தெடுப்பதற்கென்ற சீரான ஒரு ஒழுக்க விதிமுறை இல்லை. மனதை ஈர்க்கக்கூடிய எத்தனையோ கவர்ச்சிக் கூறுகளில் இருந்து தப்பி நல்ல பாதையில் செல்வதற்கு மனம் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியது அவசியம்.

பிறவுன் பல்கலைக்கழக மனித அபிவிருத்தித்துறை இயக்குனர் டேமன் அவர்கள் இன்றைய இளைஞரின் சீரழிவிற்கு ஆலயங்களையும் பாடசாலைகளையுமே குறை கூறுகின்றார். இளைஞர்களை நல்வழிப்படுத்திச் சீரிய

வாழ்விற்கு வழிவகுக்கும் நிறுவனங்களாய் அன்றொரு காலத்தில் பெரும் பணியாற்றிய தேவாலயங்களும் பாடசாலைகளும் இன்று மாணவர் சுய கௌரவம் பேணுவது பற்றியே அறிவுரை கூறிக் கொண்டிருப்பதால் அவர்களின் எதிர்பார்ப்புகளின் தரங்கள் பெரும் அளவிலே கீழிறங்கி விட்டன. சைவக் கோவில்களைப் பற்றி இவ்விதம் குறைகூற முடியாது. அங்கு போகின்ற நமது இளைய தலைமுறையினர் பெரும்பாலானோருக்கு அங்கே என்ன நடக்கிறது என்றே தெரிவதில்லை.

டேமன் 'Greater Expectation' என்ற தனது நூலிலே பெரும் அளவு தன் மனவிரக்தியை எடுத்துக் கூறியுள்ளார். அவர் பாடசாலைகளையும் பிள்ளை வளர்ப்பு முறை பற்றி எழுதப்பட்ட நூல்களையும் அதிகமாகவே சாடியுள்ளார். மாணவர்களுக்கு அவர்கள் சுய கௌரவத்தைப் பேணுவது முக்கியமானது என்று கூறுவோமானால் அவர்களுக்கு இந்த அண்ட சராசரத்திலே தாம் தான் முக்கியமானவன் என்ற தப்பான கருத்தினைப் புகுத்தி விடுவோம். இதனால், பொறுப்புணர்ச்சியுள்ள சுயநலமிக்க ஒரு இளைஞனையே உருவாக்க முடியும்.

ஆறுவயதுப் பிள்ளை ஒன்று, தனது சகோதரன் தன்னை கௌரவமாக நடத்தவில்லை என்று குறை கூறுகிறது. "நீ எனது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை" எனக் குற்றம் சாட்டுகிறது. 11 வயதுப் பையன் ஒருவன் வீட்டில் ஏதேனும் வேலை ஏவப்பட்டதும் சுற்றாடலில் உள்ள வேறு பிள்ளைகள் இப்படிச் செய்யவில்லையே நான் ஏன் செய்ய வேண்டும், எனது கௌரவம் பாதிக்கப்படுகிறது என்று பேசுகிறான். இவை எல்லாவற்றையும் பிள்ளைகள் எங்கிருந்து பெற்றனர். பிள்ளைவளர்ப்பு மேதைகள் அறிவுரையைக் கேட்டு பாட-சாலைகளும், பெற்றோரும் எடுத்தாண்ட வளர்ப்பு முறைகளால் வந்த பெறுபேறுகள் என்கிறார் டேமன்.

பாடசாலைகளைக் குறை கூறுவதில் முன்னிற்கும் இன்னொருவர் ரொறன்ரோவில் உள்ள ஒன்ராறியோ கல்வி ஆய்வு நிறுவனத்தைச் சார்ந்த ஜாக் மில்லர் ஆவார். "மாணவர்களை உலகளாவிய பொருளாதார முன்னேற்றத்தில் போட்டி போட தயார் நிலையில் நிற்கக் கூடிய கல்வி அறிவு புகட்டப்பட வேண்டுமென்றே பாடசாலைகளுக்கு ஆக்ஞைகள் பிறப்பிக்கப்படுகின்றனவே அன்றி நல்ல குடிமக்களாக்கப்பட வேண்டுமென்று கூறப்படவில்லை. திறன்கள் ஆற்றல்கள் எந்த அளவினுக்கு விருத்தி செய்யப்பட வேண்டுமோ அதே அளவினுக்கு மனித உணர்வுகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்பதைப் பாடசாலைகளோ, நிர்வாகிகளோ சிந்திக்கவில்லை.

ஜாக் மில்லர் அவர்கள் காலை வேளையில் பிரார்த்தனை பாடசாலைகளில் நிறுத்தப்பட்டமை பிழையெனக் கூறுகின்றார். காலை வேளைப் பிரார்த்தனைகள் பாடசாலைகளிலே நடைபெற்ற காலங்களிலே நல்ல விழுமியங்கள் சமய போதனைகளுடன் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன. பாடசாலைகளிலே பல்லின கலாசாரமும், பல்வேறு மத நம்பிக்கையோடும் உள்ளமையால் அவர்கள் மனதைப் புண்படுத்தும் என்ற காரணத்தினால் காலை நேரப் பிரார்த்தனை நிறுத்தப்பட்டது பாதகமே விளைவித்துள்ளது.

எமது பெற்றோர்கள் பலர் ஜாக் மில்லரின் கருத்தினை ஏற்கவே

செய்வர். எமது நாட்டிலே எந்த ஒரு பாடசாலையிலுமே காலையில் தேவாரம் வகுப்பறைகளிலோ ஆலயத்திலோ நடந்த பின்னரே பாடசாலைகள் நடைபெறுவதுண்டு. கனடாவில் இது சாத்தியமில்லை. ஒரு பாடசாலையிலே சாதாரணமாக 15 வெவ்வேறு மொழி பேசும் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களின் சமய நம்பிக்கைகளும் வேறுபட்டே உள்ளன. எனவே காலை வேளையில் பிரார்த்தனை சாத்தியமில்லை. எனினும் பாடசாலைகள் நல்ல விழுமியங்கள் நற்பண்புகள் கற்பிப்பதற்குரிய புதிய வழிமுறைகள் பற்றி முயற்சி எடுக்க வேண்டுமென திரு. மில்லர் கூறுகின்றார். அன்புடமை, நீதியுடமை, நேர்மையுடமை போன்ற விழுமியங்கள் எல்லா மதத்தினருக்கும் எல்லா இனத்தவருக்கும் பொதுவான விழுமியங்களே. எனவே இவை பற்றி மாணவர்களுக்குப் போதிப்பதற்கும் பாடசாலைகள் வழிவகுக்க வேண்டும் என்கிறார் மில்லர்.

'Jenet Daley' என்பவர் செப்டெம்பர் 3ம் 9ம் திகதிய 'The Daily Telegraph' என்ற இங்கிலாந்து தினசரியில் 'The People Guilty of Making Our Children Ungovernable" என்ற கட்டுரையிலேயும் இன்றைய பிள்ளைகளின் சீரழிவிற்குப் பாடசாலை நிர்வாகத்தையே குறை கூறுகின்றார். பல வருடங்களுக்கு முன் ஒரு பாடசாலையிலே நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றிக் கூறுகின்றார். ஆசிரியர் ஒருவர் வகுப்பு நோக்கி வருகின்ற பொழுது இரு மாணவர்கள் மாணவிகள் இருவரைச் சீண்டித் துன்புறுத்திக் கொண்டு நிற்பதைக் காண்கிறார். ஏனைய மாணவர்களுக்கு முன்னாலேயே வைத்து அவர்கள் இருவரின் கன்னங்களிலும் விளாசி விட்டுப் போய்விடுகிறார். அம் மாணவர்கள் அன்று ஏனைய மாணவர்களுக்கு முன் பட்ட அவமானம், அவர்கள் வாழ்க்கையையே மாற்றி விட்டதாம். (அதில் ஒருவரே இதைக் கூறியுள்ளார்). வீணே மற்றையோரை வம்புக்கிழுப்பதை விட்டுவிட்டு கல்வியில் அதிக அக்கறை காட்டத் தொடங்கி வாழ்வில் முன்னேறியுள்ளனர். ஆசிரியர் அன்றுதான் பாட- சாலைக்கு புதிதாக வந்தவர். ஆனால் மாணவர்களுக்கு அவர் எபபடிப்பட்டவர் என்பது புரிந்தமையால், மாணவர் பிரச்சனைகள் பாடசாலையில் பின்னர் ஏற்படவில்லை. நான் அதிபராக இருந்த இரு பாடசாலைகளிலேயும் அதே யுக்தியைக் கையாண்டேன். ஓரளவு வெற்றியும் பெற்றேன் என்றே எண்ணுகிறேன். நான் பதவி ஏற்ற முதல் நாளே சற்று ஏறுக்கு மாறாக நடந்த மாணவன் ஒருவனுக்கு மற்றையோர் பார்க்கும் வண்ணமே விளாசி விட்டேன். (இது சரியான முறை என்று நான் கூறவில்லை). அது மாணவரிடையே நான் ஒழுங்காட்சியில் நம்பிக்கை உடையவன், மீறுபவர்களைத் தண்டிப்பேன் என்ற உணர்வை ஏற்படுத்தியமையால், என் தலை தெரிந்தால் மாணவர்கள் கப்சிப்! இங்கு இது சாத்தியமா...? உடனே வேலை காலி - சிறையில் வாசம்.

பாடசாலைகளில் மாத்திரமல்ல பெற்றோர்களின் வளர்ப்பு முறையிலும் குற்றம் உள்ளது என்கிறார் ஒற்றாவா. பெற்றோர் மூலவள மைய இயக்குனர் ஜனிஸ் மக்குலே என்பவர். பல பெற்றோர்கள் தாம் வளர்க்கப்பட்ட முறையை நிராகரித்து விட்டார்கள். இதற்கு மாற்றீடு என்ன என்பதைத் தெரியாததால் அவதியுறுகின்றனர். அவர்களுக்கு ஆதிக்கம் செலுத்தும் முறை மாத்திரமே தெரிந்துள்ளது. இதை விடுத்து நல்லொழுக்கத் தலைமைத்துவம் காட்டும் திறன் அற்றவர்களாகத் திண்டாடுகிறார்கள். இந்த இடை மாறுபாட்டுக் காலத்தில்

நின்று அல்லாடுகிறார்கள். இதுவே தான் இங்கு வாழும் நம் பெற்றோர்களின் பலரினது நிலை. அவர்களுக்குத் தெரிந்த ஆயுதம் ஒன்றே ஒன்று! அது வன்முறை. அதாவது அடி. இதை நிராகரித்தால் கையாலாகாத அவதி நிலை.

ஜோன் கிறிஸ்போ என்பவர் ரொறன்ரோ பல்கலைக்கழக அரசியல் பொருளாதாரப் பேராசிரியர். இவர் *'Parents must be Accountable for Kids Acts'* என ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகையில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அதில் அவர் இன்றைய இளைஞர் வன்முறையில் ஈடுபடுவதற்கு இரண்டு பிரதான காரணிகள் உண்டு என்கிறார்.

1. பிழையான வளர்ப்பு முறை
2. வளரிளம் பருவத்தினர் பலரினது தாழ்வான சுயமதிப்பு

பிழையான வளர்ப்பு முறையுடன் மேலும் இரு முக்கிய அம்சங்கள் ஒன்றி நிற்கின்றன. அவை பெற்றார் மணமுறிவும், ஒரு உதாரண தந்தை மாதிரி உரு அமையாமையும் (Father role model) ஆகும். மணமுறிவுபற்றிய சில ஆய்வு முடிவுகளைப் பார்க்கும் போது திகைப்பாகவே உள்ளது.

இந் நாட்டிலே 40-45% திருமணங்கள் விவாகரத்திலே முடிவுறுகின்றன. அப்படிப் பார்க்கும் இடத்து பெருந்தொகையான சிறார்கள் தமது 18வது வயதினை அடைய முன்னர் தமது பெற்றோர் பிரிந்து செல்வதைக் காண வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

5 இலட்சம் பிள்ளைகள் வரை வெறுமனே தாய்மாருடன் தான் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் 41 வீதத்தினர் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர். அவை மனக்கிளர்ச்சித் தாக்கம் (Emotional), நடத்தையில் பிரச்சனை, கல்வி அறிவுக் குறைபாடு, சமூக வளர்ச்சிப் பிரச்சனை போன்றவை. இப் பிள்ளைகள் உதாரண தந்தை மாதிரி உருவை எங்கே காண்பர்? யாரிடம் காண்பர்?

ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் சென்ற 30 ஆண்டுகள் 11 வீதத்திலிருந்து 20 வீதத்திற்கு அதிகரித்துள்ளது.

எமது சமூகத்திலே திருமணங்கள் மேற்குறிப்பிட்ட வீதத்தில் முறிவதில்லை. ஆயினும் கணிசமான அளவு அதிகரித்திருப்பதை எவரும் மறுப்பதற்கில்லை. திருமணங்கள் ஆண்டவனால் நிச்சயிக்கப்பட்டுள்ளவை என்ற நம்பிக்கையில் நம்மில் பலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதால் சகிப்புத் தன்மையும், பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் நல்லுணர்வும் எமது திருமண வாழ்க்கையை நடத்திச் செல்வதால் எமது தாம்பத்திய வாழ்க்கை சிறு பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அதைப் பெரிது படாமல் பண்ணி தாம்பத்தியம் பொலிவுடன் நடைபெற வைக்கிறது. நாம் பொதுவாகவே பிள்ளைகளுக்காக வாழ்பவர்கள். அவர்களின் நல்வாழ்விற்காக நம்மையே வதைக்கும் பக்குவப்பட்டவர்கள். எனவே தான் எத்தனையோ பெண்மக்கள் இவர்களுக்காக என்று பிள்ளைகளைக் காட்டி, வாழ்வின் அல்லல்களையும், அவமானங்களையும், அடி உதைகளையும் கூடப் பொறுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலைப்பாடு கனடாவில் வாழும் நம்மவரில் சிறிது ஆட்டம் காண்பது போலத்

தெரிகிறது. மற்றைய சமூகங்கள் குடும்ப வாழ்வு பற்றி வைத்திருக்கின்ற உயர் தகவுகள் நம்முடையவற்றிலிருந்து வேறுபட்டவை. அவர்கள் செய்கிறார்கள் என்பது எமக்கு முன்மாதிரியாகப் படாது. எனவே பெற்றோர்கள் தமது உயிரினும் இனிய பிள்ளைகளுக்காவேனும் பிரிந்து செல்லக்கூடாது. பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு தியாக வாழ்வு என்று முன்பும் நான் கூறியுள்ளேன். எமது பிள்ளைகளுக்காக இந்தத் தியாகத்தையும் நம்மவர் செய்ய வேண்டும். மணமுறிவு வரவேண்டாம்.

தற்கொலை பற்றி அண்மையில் ஐக்கிய அமெரிக்காவிலே எடுக்கப் பட்ட புள்ளி விபரத்தின்படி உயர்தர பாடசாலை மாணவர்களிலே 27வீதத்தினர் தற்கொலை செய்வதற்கு எண்ணுவார்களாம். இவர்களில் 16 வீதத்தினர் செயற்படுவதற்குரிய திட்டத்தையும் தீட்டி விடுவார்களாம். 8 வீதத்தினர் தற்கொலை செய்தே விடுவார்களாம். பொதுவாகவே தற்கொலைக்கு மனஉளர்ச்சி அல்லது தளர்வே காரணமாகிறது. இதற்கு இளைஞரிடையே காரணமாய்அமைவது

1. பெற்றோர் பாதுகாப்பின்றி தனியே வாழுதல்.
2. குடும்பங்களிலே ஏற்படக்கூடிய தற்காலிக, நிரந்தர பிரிவு
3. பாடசாலைக் கல்வி அவரது ஆற்றலுக்கு மேற்பட்டதாய் அமைதல்
4. சமூக வாழ்க்கையின் பாதிப்பு
5. சடுதியாகத் தன் அன்பிற்குரிய பெற்றோர் உற்றார் ஆகியோரின் மரணம்
6. சிநேக முறிவு - ஒத்த இனமாயிருந்தாலென்ன, ஆண்பெண் உறவாயிருந்தாலென்ன

இவை தவிர வேறுபல காரணங்களும் இருக்கலாம். பொதுவாக வளரிளம் பருவத்தவர் சடுதியாகவே தீர்மானம் எடுத்து அதனை உடனடியாகவே நிறைவேற்றும் தன்மையுடையவர்கள். எனவே, மிகச் சிறிய அற்ப காரணம் கூடத் தற்கொலைக்கு அவர்களைத் தூண்டிவிடலாம்.

எமது சமூகத்திலே 8 வீதமளவிற்குத் தற்கொலை இல்லை என்றால், அதற்குப் பிரதான காரணம் எமது குடும்ப வாழ்வின் உன்னதமான நெறிமுறைகளே. பிள்ளைகளை அரவணைத்துச் செல்கின்ற தாய், தந்தையர், நெருக்கமாகப் பாசப்பிணைப்புடன் வாழும் சகோதரங்கள் அல்லற்படும் மனதுக்கு ஆறுதலாய் அமைவதால் எந்த மன அழுத்தத்தையும் தாங்கும் மனோ பக்குவத்தை வளரிளம் பருவத்தினர் பெற முடிகிறது. நாம் இதனையிட்டு பெருமையடையலாம். ஜேம் யங் என்னும் பிரதான மரண விசாரணை அதிகாரி, சில வளரிளம் பருவத்தினர் வயதானோரிடம் எதனையும் கூற விரும்புவதில்லை என்கிறார். இவர்கள் தமது பெற்றோரிடம் கூறுவதற்குப் பயந்தோ, கூச்சப்பட்டோ தமது பிரச்சனைகளை எடுத்துக் கூறாமல் தமது மனதினுள்ளேயே வைத்து மருகுவர். வெளிப்பார்வைக்கு ஏதும் பிரச்சனையில்லாதது போலக் காண்பித்-தாலும், உளத்திலே நித்தம் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கின்றது. இவர்கள் அனுதாபத்திற்குரியவர்கள். பெற்றோருக்கும் இவர்களுக்குமிடையில் ஒரு இடைவெளி ஏற்பட்டு விட்டது. இத்தகைய இடைவெளி எல்லாக்

குடும்பங்களிலும் உள்ளது என்று கூறவில்லை. ஆனால், இது வராமல் ஆரம்பத்திலிருந்தே தவிர்க்க வேண்டும். மிக்க இளம்பிராயம் தொடக்கம் பெற்றோர் நாளாந்தம் தம் பிள்ளைகளும் பொதுவான விஷயங்கள் - விளையாட்டு, சினிமா, கல்வி, உலக விவகாரம் ஏன் பாலியல் பற்றிக்கூட அளவளாவிக் கொண்டு வந்தால் இப்படி ஒரு நிலை ஏற்பட வாய்ப்பிருக்காது. தாய் தந்தையரைப் பிரிந்து இங்கு வாழ்கின்ற வளரிளம் பருவத்தினர் உண்மையிலேயே அனுதாபத்திற்குரியவர்கள். பெற்றோரின் அணைப்புக்கு ஏங்குகின்ற அவர்கள் மனம் சில சமயங்களிலே புகைத்தல், மது அருந்துதல், போதைப் பொருள் பாவித்தல் என்கிற செயற்பாடுகளில் மனநிறைவு காண எத்தனிக்கிறது. எல்லோரும் அல்ல ஒரு சிலர்தான். ஆனால் அவர்களுக்கு எமது சமூகம் ஆதரவுக்கரம் நீட்ட வேண்டும். அவர்களின் இழப்பை நிவர்த்திக்கும் வகையில் எமது சமூகம் செயற்பட வேண்டும். எமது சமூகம் அத்தகையோரைப் பொறுப்பேற்று வழிநடத்த வேண்டியது அவசியம்.

எமது வளரிளம் பருவத்தினரின் பிரச்சனைகள், அவர்களின் எதிர்காலம் சுயமதிப்புப் பற்றிய விரிவான கருத்தரங்குகள் இதுநாள்வரை நடந்ததில்லை. அப்படி ஒன்று விரைவிலேயே நடத்தப்படுதல் வேண்டும்.

(ஜனவரி, 1997)

பிள்ளை வளர்ப்பு முறை

பிள்ளைகள் சுதந்திரமாகச் செயல்படுதல் பற்றி முதலில் பார்ப்போம்

இன்று குளிர்நாள் எது நல்ல "புள் ஓவர்"
என்றாய்ந்த பத்து வயதினளை
சென்றணைத்து அன்னை தனதன்பால்
"ஆஷா இதைப் போடேன்" என்று சொன்ன
சொல்லைச் சகியாமல் - சின்னவளோ
"லெற்மீ எலோன் மம்மி, லெற்மீ டிசைட்"
என்றாள்.
சற்றே மயங்கினாள் தாய்.

இது ஈழத்தின் பிரபல கவிஞர் அம்பி அண்மையில் எழுதிய கவிதை. இன்றைய இளவட்டங்களின் சுதந்திரமாக இயங்கத் துடிக்கும் மனப்பான்மையை தத்ரூபமாக விளக்கும் அற்புதக் கவிதை. பத்து வயதுப் பாலகி, குளிர்காலத்தில் போடவுள்ள உடுப்பைத் தானேதான் தீர்மானிக்க வேண்டும் என்று தீர்க்கமான முடிவு எடுக்கிறாள். தாயின் தலையீடு வேண்டாமென்கிறாள் தனையி.

நம்மவர்களிலே உள்ள பொதுவான ஒரு குறைபாடு தீர்மானங்களை நாமே எடுப்பது, எதனைப் படிப்பது, எதனை உடுப்பது, எங்கே செல்வது, எவற்றை உண்பது என்ற பல தீர்மானங்களை நாமே எடுத்து விட்டு, பிள்ளைகளை அவற்றைச் செயற்படுத்துமாறு வேண்டுவது. நிலைமை பெருமளவிலே இங்கு மாறிவருகின்றது என்பதையும் நான் அறிந்துள்ளேன். ஆனால் மிகையான சுதந்திரம் உகந்ததல்ல.

சுதந்திரமாகச் செயற்படப் பிள்ளைகளை விடுகின்றபொழுது அவர்களது உளவிருத்தி வலுப்பெறுகிறது. வெற்றி தோல்வியை ஏற்கும் மனப்பக்குவம் ஏற்படுகிறது. முயற்சி செய்யும் தற்றுணிபு வருகிறது. ஆனால் முழுவதும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் வரவேற்கத்தக்கதல்ல. அவர்களை வழிநடத்த வேண்டியது அவசியம். "நயம்பட உரை" என்கிறார் ஒளவையார் ஆத்திசூடியில். கனிவான முறையிலே எதையும் கூறியே செய்வித்தல் அவசியம். மூன்று முக்கியமான விதிமுறைகளை கையாளுங்கள்.

1. கட்டளையிடுவதிலும் பார்க்க விருப்பத் தேர்வுக்கு விடுங்கள் *(Give choices instead of orders):*

போய்க் குளித்து விட்டு வா என்று கூறுவதிலும் பார்க்கச் சாப்பிட முன் குளிக்கப்போகிறாயா? சாப்பிட்ட பின் குளிக்கப்போகிறாயா? என்று வினவுவது சாதுரியம் மிக்க முறை. பிள்ளையைக் குளிக்க வைப்பதே எமது எண்ணம். அதனைச் செயற்படுத்துகின்ற பொழுது முதலாவது அணுகுமுறை நாம்

தீர்மானித்து அவரைச் செயற்படுத்த ஏவுவது போன்று உள்ளது. இரண்டாவதிலோ அவரே தீர்மானிப்பது போன்ற தோற்றப்பாட்டைத் தருவது.

2. குற்றம் காண்பதிலும் பார்க்க வெறும் கூற்றுக்கள் சிறந்தவை (*Make statements instead of criticisms*):

இன்னும் வெளிக்கிடவில்லையா? எப்பொழுதும் உன்னால் பிந்துகிறோம் என்பது ஏற்படுத்தக் கூடிய விளைவிலும் பார்க்க, "இன்னும் 15 நிமிடங்களில் பஸ் வந்துவிடும்" என்று கூறுவதால் பெறக்கூடிய விளைவு சிறந்ததாகவே அமையும். முன்னையது அவரது சுயமதிப்பினைப் பாதிக்கிறது. பின்னையது அவருக்கு ஒரு அறைகூவல் விடுவது போன்று அமைவதால் அவர் நேரத்தோடு போட்டி போட்டு ஒரு சாதனை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படவே முனைவார்.

3. சுருங்கச் சொல்லல் ஆணையுரிமையை நிலைநிறுத்தும் (*Brevity is authority*):

பிள்ளைகள் மிகவும் குள்ளத்தனம் மிக்கவர்கள். எங்கே, எம்மை மூலையிலே முடக்கலாம் என்பதை நன்கு தெரிந்து வைத்துக் கொள்வார்கள். ஆகவே நீண்ட உபதேசம் செய்ய முனைந்தோமாயின் மாட்டிக்கொண்டு விழிப்பது நாமாகவே இருக்கும். எனவே சுருங்கச் சொல்வதே சிறந்தது.

வேறொரு விதமான நேர்மாறான வளர்ப்பு முறை ஒன்றினை சில நாட்களுக்கு முன்னர் ஒரு தாயார் பாடசாலையில் கூறினார். பையன் மூன்றாம் தரம் படிக்கிறான். "காலையில் எழும்புகிறான் இல்லை. நானே பல்தீட்டி, குளிக்க வார்த்து, சாப்பாடு கொடுத்து வெளிக்கிடுத்தி அனுப்ப வேண்டியிருக்கிறது" என்கிறார் தாய். "ஏன் அப்படிச் செய்கிறீர்கள், அவனாகவே எல்லாவற்றையும் செய்ய விடுங்கள். பாடசாலைக்குப் பிந்தி வரட்டும்" இது ஆசிரியர். "அவைக்கென்ன சொல்லுவினம், அவனை அனுப்பிவிட்டு நான் E.S.L வகுப்புக்கு ஓடவேணும். போகாவிட்டால் வெல்பெயர் காரனுக்கு (*Welfare*) யார் பதில் சொல்லுவது". இது தாயின் முணுமுணுப்பு. உண்மை! இந்த நிலையில் நம்மில் பலர் இருப்பதுதான் யதார்த்தமான உண்மை. பிள்ளைவளர்ப்புமுறை பெற்றோரிடமிருந்து எவ்வளவோ தியாகங்களை எதிர்பார்க்கிறது. ஆனால் நம்மால் எந்த அளவினுக்கு அதனைச் சாதிக்க முடிகிறது?

பிள்ளைவளர்ப்பு முறை அவ்வளவு சுலபமில்லை என்பது உண்மையே. ஆனால் தரமான பிள்ளைவளர்ப்பு முறையில் நாம் எதனை எதிர்பார்க்கிறோம் என்று புரிந்து கொண்டு அதன்படிக்குத் திட்டமிட்டுச் செயற்படுவோமாயின் அது ஒன்றும் கஷ்டமானதல்ல.

* பிள்ளையின் மொழிவிருத்திக்கு அனுகூலமாய் செயல்படல்

* உணவு, உடல் நல பாதுகாப்பு போன்றவற்றிற்குத் தேவையான வழிகாட்டல் அறிவுரை தருதல்

* பிள்ளையினது அறிவு விருத்திக்கு அனுசரணையாகச் செயல்படுதல்

* தீர்மானம் எடுத்தல், பிரச்சனைத் தீர்வு போன்ற திறன்களை விருத்தி செய்ய உதவுதல்

* நற்பண்புகள், உயர்ந்த விழுமியங்கள் போன்றவற்றை பிள்ளை பெறக்கூடிய வகையில் நடந்து காட்டலுடன், வழிகளையும் வகுத்துக் கொடுத்தல்

* சுயமதிப்பை எப்பொழுதும் உயர்நிலையிலேயே வைக்கக் கூடியவாறு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், சமயோசிதமாக நடந்து கொள்ளல்.

* கற்றலின் அடிப்படைத் திறன்களாகிய எழுதுதல், வாசித்தல் போன்றவற்றுடன் உலக விடயங்கள் பற்றிய ஆரம்ப அறிவைத் தருதல்

* எமது கலாசார பின்புலத்தைப் பற்றியும், இனத்தின் வேர்கள் பற்றியும் தெரிய வைத்தல்

* தொலைக்காட்சி, வானொலி, நூல்கள், சஞ்சிகைகள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற கல்வி மூல வளங்களை சிறந்த முறையிலே பிள்ளையின் முன்னேற்றத்திற்கு அனுசரணையான முறையிலே உபயோகித்தல்.

மேற்படி எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யக்கூடிய வண்ணம் பிள்ளைகளை வளர்ப்போமாயின் வெற்றி நமக்கே.

ரொறன்ரோ கல்விச் சபையினைச் சார்ந்த மேரி கோர்டன் (MARY GORDON) குழந்தை வளர்ப்பு முறையிலே தவிர்க்க வேண்டிய சில செயல்முறைகளை கூறுகிறார். அவற்றை கவனத்தில் கொள்ளல் சாலச் சிறந்தது.

1. உதாசீனம் - "இது சின்னச் சின்ன விஷயம். இதைப்போய் பெரிது படுத்துகிறாயே" என்று நீங்கள் கூறினால் தனது பிரச்சனை பெற்றோர்கட்கு மிக அற்பமாகத் தெரிகிறதே என்ற எண்ணம் பிள்ளைக்கு விரக்தியையே தரும். எனவே பொறுமையாக அவர் கூறும் பிரச்சனையைக் கேட்க வேண்டியது அவசியம்.

2. அறிவுரை - பிள்ளைகள் பிரச்சனையுடன் வரும்பொழுது அறிவுரை கூற முனைந்தால், தீர்வு தற்காலிகமானதாகவே இருப்பதோடு எப்போதும் அப்படிச் செய்வோமாயின் பிள்ளை எதிர்மறையான செய்தியைப் பெறுகிறார். "நான் எனது பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளும் தகுதி அற்றவன்" என்ற உணர்வையே பெறுகிறார்.

3. வினாவிடுத்தல்- "ஏன் அப்படிச் செய்தாய்? என்று கூறுவதிலும் பார்க்க "என்ன நடந்தது என நான் அறியலாமா" என வேண்டுகோள் விடுப்பது சிறந்தது. வினாவும் பொழுது அவர் தன்னைப் பாதுகாக்கும் அணுகுமுறையையே கையாள்வார்.

4. குறை கூறுதல்- "நீ படிக்காமல் இருந்ததால்தானே இப்படிக் குறைந்த புள்ளிகள் பெற்றாய்" என்பதிலும் "உனது முயற்சி பயனளிக்கத் தொடங்கியுள்ளது, எனவே இன்னும் கூடிய சிரத்தை எடு" எனலாம்

5. கழிவிரக்கம்- *"ஐயோ பாவம்" என்று அனுதாபம் காட்டுவதோ, "பாவம் நீ என்ன செய்வாய்" எனப் பரிந்து கூறுவதோ அவரை முயற்சியற்றவராக ஆக்கும். பொறுப்புணர்வு ஏற்பட மாட்டாது.*

6. எரிச்சல்- *எரிச்சலை மூட்டுமேயன்றி, எந்தவிதமன நல்ல விளைவுகளையும் ஏற்படுத்த மாட்டாது.*

7. தவிர்த்தல்- *பிள்ளை எடுத்துக்கூறும் பிரச்சனையைத் தவிர்ப்பது தவறு. இதை மறந்து விடு, சரி இப்போ நாம் மக்டொனால்ட் போய்விட்டு வருவோம்" என்று கூறினால் அவர் நடந்ததை மறந்து சந்தோஷப்படுவார் என நாம் எண்ணுவது தவறு. பெற்றோருக்கு இப்பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியவில்லையே என்ற ஆதங்கம் அவர் அடிமனதில் எழவே செய்யும். அவருக்கு இப்படி அடிக்கடி சொல்வோமானால், பிரச்சனையை உங்களிடம் சொல்லாமல் தானே தீர்வு காண முனைவார். எனவே அவர் கொண்டு வரும் பிரச்சனை பற்றி நன்கு கலந்துரையாடி அவர் ஒப்புதலுடன் தீர்வு காணல் அவசியம்.*

பிள்ளைவளர்ப்பு முறை கலாசாரத்திற்குக் கலாசாரம் மாறுபடும் என்பது உண்மையே. ஆனால் எல்லா கலாசாரப் பின்னணியிலும் பிள்ளையின் முழுமையான விருத்தி என்பதே முதன்மை வகிக்கிறது. நாம் இந்நாட்டின் குடிமக்களாகிவிட்டோம். எனவே இந்நாட்டில் வளங்கி வரும் வளர்ப்பு முறைகளை அனுசரித்து எமது குறிக்கோள்களை எய்தலே சிறப்புடையது.

(ஜுலை 1996)

Parenting and Discipline

பிள்ளை வளர்ப்பும் ஒழுங்காட்சியும்

Parenting' எனும் அருமையான ஆங்கிலச் சொல்லின் உள்ளார்ந்த கருத்தினைப் புலப்படுத்தக் கூடிய தமிழ்ச் சொல் ஒன்றினை நான் தேடினேன். மொழிவாணர் பலரையும் கேட்டேன். எதுவுமே நிகர்த்த சொல்லாக எனக்குப் படவில்லை. தமிழ் பதங்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்கள் இல்லாமல் இருப்பது ஆச்சரியமன்று. ஆங்கிலம் சென்ற இடமெல்லாம் அங்கங்கே உள்ள மொழிகளிலிருந்து பெற்ற சொற்களை வைத்தே தன் சாம்ராஜ்யத்தை அமைத்தது. ஆனால் தமிழ் அப்படியல்லவே. மூத்த மொழி. தொன்று தொட்டே சொல்வளம் மிக்க மொழி. எனவேதான் வேதனை. "பிள்ளைவளர்ப்பு முறை" என்றே நான் மொழிபெயர்த்துள்ளேன். யாராவது சிறந்த பதமொன்று கூறினால் நன்றி.

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சாற்றோனாக்குதல் தந்தைதன் கடனே

என்கிறார் ஔவையார். இந்த இரண்டையும் ஒன்றாய் செயற்படுத்துதலே பிள்ளைவளர்ப்பு முறை எனலாம்.

இன்றைய காலகட்டத்திலும் பெரும்பாலான பிள்ளைகள் குடும்பப் பின்னணியிலேதான் வளர்கின்றனர் என்பது உண்மை என்ற போதிலும் 'குடும்பம்' என்பது இன்று இந்நாட்டிலே எத்தகைய வரைவிலக்கணம் பெற்று நிற்கின்றது என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். முன்னைப் போன்று விரிவான குடும்ப அங்கத்தவர்களான பேரன் பேத்திகளோ, மாமன் மாமிகளோ, சித்தப்பா சித்தியோ இன்று குடும்ப அங்கத்தவராக இல்லை. எனவே மூன்று தலைமுறைகளை உள்ளடக்கும் குடும்பங்கள் இங்கு பெரும்பாலும் இருப்பதில்லை என்றே கூறவேண்டும்.

அண்மையிலே உலகளாவிய கருத்துக்கணிப்பு ஒன்றிலே அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள பெற்றோர்களில் பெரும்பான்மையானவர்கள் குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் உழைத்தால் போதும், மற்றவர் வீட்டிலிருந்து பிள்ளைகளை வளர்ப்பதே நன்று என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். பொருளாதார தேவை நிவர்த்தியிலும் பார்க்க குடும்ப விழுமியங்கள் பேணப்படுவது அவசியமென்றே இவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த விதமாய்ச் சிந்தித்துப் பார்ப்பதாயின் வீட்டிலிருந்து பிள்ளை வளர்ப்பது பெண்ணின் வேலையாகவே அமைந்து விடுகிறது. எமது பழைமை விரும்பும் சமூகம் அந்த வகையிலேதான் சிந்திக்கிறது. பெண்கள் வேலை பாத்தாலும் கூட பிள்ளை வளர்த்தலின் பெரும் பகுதி நடவடிக்கைகள் தாயினைச் சார்ந்து விடுகிறது அல்லது அவர்களாகவே அதனை எடுத்துக் கொள்கின்றனர். சூடி சிவராம்

என்பவர் *'HINDUISM TODAY'* என்ற சஞ்சிகையில் இந்தியப் பெண்கள் சிலரின் கருத்துக்களைத் தெரிவிக்கிறார். "எனது கணவன் நான் செய்ய வேண்டிய வேலையைச் செய்வதா, வேடிக்கைதான். நான் கற்பனையில் வைத்துப் போற்றும் ஆண் அப்படிப்பட்டவராய் இருக்க வேண்டாம்" என்கிறார் ஒரு பெண். "பிள்ளை வளர்ப்பு ஒரு பெண்ணின் தொழில். அதில் ஆண் பங்கு கொண்டு தன் சுயகௌரவத்தை இழக்கலாகாது" என்கிறார். இன்னொருத்தர். இத்தகைய ஒரு நிலை கனடாவில் வாழும் நம்மவரிடையே பெரும்பாலும் இல்லை என்றே எண்ணுகின்றேன். பிள்ளை வளர்ப்பினிலே தந்தைமாரும் பெரும் அளவிலே பங்கு கொள்கின்றதைக் காண முடிகின்றது.. ஆயினும் இங்குத் தாய்மார் கூடுதலான பொறுப்புகளை ஏற்கவே செய்கின்றனர்.

பிள்ளைவளர்ப்புத் திறன்கள் மொத்தமாகவே எல்லாப் பெற்றோர்-கட்கும் இருப்பதில்லை. தாய்மாரில் சில திறன்கள் மிகையாகவும் தந்தைமாரில் சற்றுத் தூக்கலாகவும் காணப்படலாம். அதே போன்று வேறு சில திறன்கள் தந்தைமாரில் தாய்மாரிலும் பார்க்க பெரும் அளவிலே ஓங்கி நிற்பதைக் காணமுடியும். எனவேதான் பிள்ளைவளர்ப்பு கூட்டுமுயற்சியாகின்றபோது வெற்றியீட்டுதல் மிகவும் சுலபமாகிறது. எல்லாம் நல்லபடியாகப் போய்கொண்டிருந்தால் இரு பெற்றோரும் நான் முந்தி, நீ முந்தியென வாயாரப் பெருமை சாற்றுவார். ஆனால் பிரச்சனை தோன்றிற்று என்றால் இது யார் குற்றம் என்று ஒருவரையொருவர் குறைகூறத் தொடங்கிவிடுவர். பிள்ளை வளர்ப்பின்போது பிரச்சனைகள் ஏற்படக்கூடிய பிரதேசங்கள் நான்கு

1. ஒழுங்காட்சி
2. சுதந்திரமாக இயங்குதல்
3. அதீதமான எதிர்பார்ப்புகள்
4. சமூக நடத்தை

ஒழுங்காட்சி

ஒழுங்காட்சி என்பது முற்றாகவே புரிந்துகொள்ள முடியாத பிரச்சனையாகிறது. ஒரு செயலை முடிந்தபின் பல பெற்றோர்கள் நாங்கள் கடினமான முறையிலே நடந்து விட்டோமா? சரியான அணுகுமுறையைக் கையாண்டோமா என மனதில் கனல்வதும் உண்டு. இத்தகைய உணர்வு ஏற்படுவதற்குக் காரணமாவது பெற்றோர்கள் ஒழுங்காட்சி பற்றி வைத்திருக்கும் சித்தாந்தமே. ஒழுங்காட்சி என்பது தண்டனை முறை என்ற கணிப்பே பிழையானதொன்றாகும். தண்டனை ஒழுங்காட்சியின் ஒரு பரிமாணமேயன்றி அதுவே முழுமையானதன்று. தண்டனை குற்றமிழைத்தவருக்கு வழங்கப்படுவது.

ஒழுங்காட்சி குற்றம் செய்யாது தடுப்பதற்கு வழிவகுக்கும் வழிகாட்டல் தொழிற்பாடு. உங்களது பிள்ளையின் நடத்தையானது எதிர்பார்ப்புக்கு மாறாக குறையுடைதாய் அமையின் அதனை உடனடியாக மேற்கொண்டு செல்லாமல் நிறுத்துதல் முதற்படி. பின்னர் அதற்கு நேர்மாறான முறையில் அமைந்த விரும்பத்தக்க நடத்தை காட்டுமாறு வழிகாட்டுதல் இரண்டாவது படி. இவ்விருபடிகள்தான் ஒழுங்காட்சி. முதலாவது படியுடன் நிறுத்துதற்கு தண்டனையை உபயோகிப்பர் சிலர். அதுதான் சிறந்தமுறை என்பது பேதமை.

பல பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுங்காட்சி செய்தமைக்காகப் பின்னர் மனவிரக்தியடைவதும் உண்டு. வேறு சிலர் தமக்கு விருப்பமில்லாத செயல்களைப் பிள்ளைகள் செய்யும்பொழுது அதனைத் தடுத்து நிறுத்துவதால் உளவியல் ரீதியாக அவர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்ற பயத்தினால், அனுசரணை காட்டுவதையும் காணலாம். இன்னும் சிலர் பிள்ளைகளைக் கோபிப்பதே பிழையான அணுகுமுறை எனத் தப்புக்கணக்குப் போட்டு நடப்பதும் உண்டு. உண்மை என்னவென்றால் பிள்ளைகளுடன் ஒத்துப் போதல் என்பது அவ்வளவு சுலபமான ஒரு விஷயமல்ல. எனவே இடையிடையே நமக்கும் கோபம் வருவது சர்வ சாதாரணம். ஆனால் அக்கோபத்தின் வடிகாலாய் 'அடி' இருக்கக் கூடாது என்பதே எனது வேண்டுகோள்.

பாடசாலைக்கு சென்ற பிள்ளையின் உடலில் அவதானிக்கக் கூடியவாறு புதிய காயம் காணப்படுமாயின், அது எப்படி ஏற்பட்டதென ஆசிரியர் கேட்கவேண்டியது கட்டாயம். பெற்றோர் அடித்ததனால் அக்காயம் ஏற்பட்டதென பிள்ளை கூறுமாயின், ஆசிரியர் 'குழந்தைகள் உதவு சமூகத்திற்கும்' பொலிசிற்கும் அறிவிக்க வேண்டியது ஆசிரியர் கடமை. அறிவிக்காமல் விடுவது தண்டனைக்குரிய குற்றம். அண்மையில் இது பாடசாலை ஒன்றில் நடைபெற்றது. பெற்றோர்களைத் தேடி பொலிஸ் சென்றது. பெற்றோர்கட்கு ஆசிரியர் மீது மிகக் கோபம். அவருடன் கதைக்கவே முடியாது என்று விட்டனர். நான் இடையில் புகுந்து சமரசம் பேசி இருவரையும் சந்திக்க வைத்தேன். 'அவர்களுக்கென்ன சொல்லி விட்டினம், இப்ப என்னடா என்றால் எதற்கெடுத்தாலும் பொலிசைக் கூப்பிடுகின்றேன்" என்று ரெலிபோனை நோக்கியல்லோ ஓடுகின்றான்" பெற்றோர். "ஓட்டுமே பொலிஸ் வந்து அவரைக் கேட்டால் அவர் பிடிபடுவார்" ஆசிரியர். "அவைக்கென்ன சொல்லுவினம், எங்கடை ஆட்கள் பொலிஸ் வருவதைக் கண்டால் எப்படியெல்லாம் கதைப்பினம். அப்ப பெடியனை எப்படித் திருத்துவது என்று கேளுங்கோ". "அடியாமல் திருத்துதற்குப் பல வழிகள் உள்ளன '*Parenting Course*'க்குப் போகுமாறு சொல்லுங்கள்". "எங்களுக்கு அதுக்கு நேரமில்லை, வேறு ஏதேனும் வழி சொல்லுங்கோ".

பிள்ளையினை ஒழுங்காட்சி செய்யும் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய சிலவற்றையும் கூறுகின்றேன்:

1. ஒழுங்காட்சி என்பது பிள்ளையைத் திருத்தி நல்ல முறையான நடத்தைகளை செய்ய வைப்பதற்காகவே கைக்கொள்ளப்படுகின்றது. எனவே அவருக்கு எந்தவிதமான தண்டனையோ, உடலின்மேல் ஊறு ஏற்படக்கூடிய நடவடிக்கையாகவோ இருத்தல் கூடாது.

2. அடிக்கடி ஒழுங்காட்சி செய்ய முனையக்கூடாது. அது பிள்ளைக்குச் சலிப்பினை ஏற்படுத்துவதுடன் எதிர்பார்க்கும் விளைவுகளை ஏற்படுத்தாமல் போவதற்கும் வழிவகுக்கும். ஒழுங்காட்சியை மிகவும் குறைந்த சந்தர்ப்பங்களிலேயே உபயோகித்தல் அவசியம்.

3. ஒழுங்காட்சி செய்கின்ற பொழுது, அது நியாயமானதா, தர்க்கபூர்வமானதா, அங்கீகரிக்கலாமா என்பதை உணர்ந்து செய்வது உகந்தது. எந்த ஒரு சூழல் அல்லது சந்தர்ப்பத்தில் பிள்ளை ஒவ்வாத நடத்தை

காண்பிக்கின்றார் என்றால் அவரை உடனடியாக அவ்விடத்திலிருந்து அகற்றுதல் அவசியம். (அடித்துவிட்டு அதே குழுவினருடன் விடுவதிலும் பார்க்க, அடிக்காமலே அவ்விடத்திலிருந்து விலக்கி விடுதல் வெற்றியளிக்கும்.)

4. பிள்ளை குற்றம் செய்தால், அது தண்டிக்கப்பட வேண்டுமென்று உணர்ந்தீர்கள் என்றால் அதை உடனடியாகவே செய்யுங்கள். "அப்பா வரட்டும் இன்றைக்குச் செம்மையாய் வாங்குவாய்" போன்ற வாசகங்கள் பயன்தரமாட்டா. 'ஆறின கஞ்சி பழங்கஞ்சி' என்பதுபோல், அப்பா வந்து விஷயத்தை எடுத்துச் சொல்கின்ற பொழுது எல்லாமே பழசு ஆகிவிடும். பிள்ளைக்கும் தாயின்மேல் உள்ள நம்பிக்கை குறையக்கூடும். உடனடியாக ஒழுங்காட்சி செய்தபின் அவரை மன்னிப்போம், மறப்போம் என்ற மாதிரி விட்டுவிடவேண்டும். கணவனிடமோ அல்லது மனைவியிடமோ நடந்ததைச் சொல்லலாம். ஆனால் அது பற்றித் தமக்குத் தெரிந்ததாக அவர்கள் பிள்ளைக்குக் காட்டவேண்டிய அவசியமில்லை.

5. ஒழுங்காட்சி செய்கின்றபொழுது, பிள்ளைகட்கு அதிகம் விளக்க முனைய வேண்டாம். மிகக் குறைவாக ஆனால் கறாராகப் பேசவேண்டும். நீண்ட உரையாற்ற முனைந்தால், நிலைமையின் காரிய சித்தி குறைந்துபோக வாய்ப்புண்டு.

6. கொடுக்கப்படப் போகின்ற தண்டனைபற்றி நன்கு ஆராய்ந்து, இதனை நிறைவேற்றுதல் சாத்தியமா என்பதை உணர்ந்தே அதற்கு ஏற்ப வழங்க வேண்டும். கொடுக்கப்பட்ட தண்டனையைப் பின்னர் மாற்றினோமாயின், எமது ஸ்திரமற்ற மனப்பான்மையை பிள்ளைக்குக் காட்டுகிறது. அவர் அதையே தனக்குச் சாதகமாக்குவார். "உனக்கு அடுத்த இரண்டு நாட்களுக்கு T.V கிடையாது" என்று கூறிவிட்டு, அவர் முதல்நாள் முகத்தைப் பரிதாபமாக வைத்திருக்கக் கண்டதும் தாய் அன்பு மேலோங்க இரண்டாம்நாள் தண்டனையை இரத்து செய்வது, மிக்க பிழையான முறையில் அன்பைக் காண்பிக்கும் முறை. அதனிலும் பார்க்க தண்டனை வழங்கும் போதே சிந்தித்து ஒருநாள் என்றிருக்கலாம். அடுத்து தண்டனை ஓரளவு கண்காணிக்கப்படல் வேண்டும். T.V பார்க்க்கூடாது என்று கூறிவிட்டு பெற்றோர் இருவரும் வெளியே போய்விட்டால், பிள்ளை அச்சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கலாம்.

7. ஒழுங்காட்சிமுறை கையாளப்படும் பொழுது ஒரே சீராக இருத்தல் அவசியம். சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறோ அல்லது உங்கள் மனநிலைக்கு ஏற்றவாறோ எதிர்பார்ப்புகள் மாறுபட்டுக்கொண்டு போகக்கூடாது. சில சந்தர்ப்பங்களிலே பாராமுகமாய் இருப்பதும் வேறுசில சந்தர்ப்பங்களிலே வெடித்து சத்தம் போடுவதும் நம்மில் பலரில் காணப்படும் குறைபாடு. இது பிள்ளையைப் பொறுத்தமட்டிலே அனுசரணையாகாது. எது சரி எது பிழையென்று அவர் தீர்மானம் எடுப்பதற்கு உதவமாட்டாது.

8. எப்படியாக தகாத நடத்தையைக் கண்டிக்கிறோமோ, அதேபோன்று சிறந்த நடத்தையைப் போற்றி வலுவூட்டுதல் அவசியம். இங்குகூட நாம் எதிர்மறையாகப் பேசுதலைத் தவிர்க்க வேண்டும். "மிக்க மகிழ்ச்சி. இதை நான் உன்னிடம் எதிர்பார்க்கவேயில்லை" என்பது பிழையான கூற்று. "மிக்க மகிழ்ச்சி.

நீ மிகச் சரியான முறையில் நடந்துள்ளாய்" என்பது சிறந்த முறையான அங்கீகாரம்.

9. பிள்ளைகள் முன்உதாரணங்களாலேயே சிறந்த கோட்பாடுகளைப் பெறுகிறார்கள். எனவே கூடுதலாகப் பெற்றோர்களின் கண்ணியமான பேச்சு கனிவான அணுகுமுறை, கோபத்தைப் போதிய அளவில் குறைத்தல் பிள்ளைகளுக்கு நற்பண்புகளைப் பெறக்கூடிய சூழலாக அமையும்.

10. அடித்து வளர்ப்பதிலும் பார்க்க சிறந்த தண்டனை முறைகளாக அச்சிறுவர்கள் விரும்புகின்ற, ஈடுபாடுகாட்டுகின்ற செயல்களிலிருந்து நிறுத்துவது நல்ல பயனைத் தரும். T.V பார்ப்பதை நிறுத்துதல், விளையாடப்போவதை நிறுத்துதல், அல்லது ஒரு இடத்தில் உட்காரவோ நிற்கவோ வைத்தல் போன்ற தண்டனை முறைகளைக் கையாளலாம். ஏன் ஒரு அன்பான குடும்பத்திலே "என்னோடு நீ பேசவேண்டாம்" என ஒருதாய் கூறினால், அதுவே பெரிய தண்டனை போன்று பிள்ளைக்குப் புலப்படவே செய்யும். நான் என் சொந்த அனுபவத்தில் சொல்கிறேன், ஒரு சமயம் நான் என்னையே தண்டிக்க முனைந்தபோது எனது குற்றம் செய்த சிறுபிள்ளை கதறித் துடித்து நான் இனிமேல் குற்றம் செய்யமாட்டேன்" என்று கூறினார். நானறிய இன்னும் செய்யவில்லை.

சுதந்திரமாக இயங்குதல்:

குழந்தைகள் தமது ஒவ்வொரு சிறிய தேவையினையும் ஈடு செய்வதற்குப் பெற்றோரை எதிர்பார்த்த நிலைமை சிறிது சிறிதாக மாறிக்கொண்டு போகின்றது. சிறுகச் சிறுக பிள்ளைகள் சுதந்திரமாக இயங்குகின்றனர். பொருளாதாரம் சார்ந்த தேவைகளுக்கு இப்பொழுதும் பெற்றோரையே எதிர்பார்த்து நிற்கின்றபோதும், எதனை உடுப்பது எந்தவிதமான பொழுதுபோக்கினைத் தெரிவு செய்வது என்பன போன்றவற்றில் தாமாகவே தீர்மானம் எடுப்பதற்கு வளரினம் பருவத்தினர் விரும்புவர். இத்தகைய சுதந்திரமாக இயங்கும் மனப்பான்மையை ஒத்த வயதுடையோருடன் இடைத்தாக்கம் செய்கின்றபொழுது தெரிந்து கொள்கின்றனர். அவர்கள் சுதந்திரமாக இயங்குவதற்குப் பெற்றோர் ஆதரவு கொடுக்காதவிடத்து வளரினம் பருவத்தினருக்கும் பெற்றோருக்கும் பிரச்சனை ஆரம்பமாகின்றது.

அதீத எதிர்பார்ப்பு

அண்மையிலே நடந்த ஒரு துயரச் சம்பவம். எல்லோருடைய மனதிலும் துயரச்சுமையைத் தந்துவிட்ட நிகழ்ச்சி. ஜெசிக்கா டுவ்றொவ் என்னும் ஏழு வயதுச் சிறுமி ஒருத்தி பெற்றோர்களின் தூண்டுதலின் பேரிலும் அதீதமாக உற்சாகப்படுத்தியதாலும் ஒரு முயற்சியில் ஈடுபட்டு இறந்தாள். ஐக்கிய அமெரிக்காவை வான் மூலம் கடக்கும் மிக்க இளம் வயது விமான ஓட்டி என் பெயரெடுக்க, தந்தையாருடனும், பயிற்றுனருடனும் பறக்க முயன்ற பொழுது விமானம் நொருங்கி மூன்று பேருமே இறந்தனர். இந்த விபத்து ஏன் ஏற்பட்டது? இதற்கு யார் காரணம். யாருடைய அபிலாஷையை செயற்படுத்த அந்த ஏழு வயதுக் குழந்தை முனைந்தது? அதற்கு இதன் உண்மையான

தாற்பரியம் புரிந்திருக்குமா? பெற்றோர்கள் கொடுத்த உற்சாகம் அந்தக் குழந்தைக்கு போலித்தனமான துணிவை ஏற்படுத்தியதால் வந்த வினையேதான் இந் நிகழ்ச்சி. சரி அப்படித்தான் அக்குழந்தை தனது அபிலாஷையை செயற்படுத்த முனைந்திருந்தாலும் கூட பெற்றோருக்கென ஒரு நெறிமுறை கட்டுப்பாடு இல்லையா? குழந்தை வளர்ப்பு முறையில் அவர்கள் தவறிவிட்டார்கள். அக்குழந்தையின் வயது மீறிய செயற்பாடுகளைச் செய்யுமாறு தூண்டியது பாரிய குற்றமே. அக் குழந்தையின் வயதிற்கேற்ற ஒரு வரைமுறையை வகுத்து அதனையே பிள்ளை எய்துதற்கு வழிவகுத்துக் கொடுத்தலே உண்மையான குழந்தை வளர்ப்பு முறையாகும்.

மைக்கேல் ஜோர்டேன் உலகறிந்த கூடைப் பந்தாட்ட வீரர். CHICAGO BULLS இம்முறை கூடைப்பந்தாட்ட வெற்றி வீரர்கள் ஆவதற்குக் காரணமாய் M.V.P விருதையும் பெற்றுள்ளார். இவரது தாயார் டெலோறிஸ் ஜோர்டன் சொல்வதைக் கேளுங்கள். "நம் பெற்றோர் யாபேரும் எமது பிள்ளைகள் சாதனை புரிய வேண்டுமென்ற பெரும் எதிர்பார்ப்புக்களை கொண்டவர்களே. ஆனால் நான் என்றுமே எனது பிள்ளைகளை சாதனை செய் என்று தூபமிட்டதோ தூண்டி விட்டதோ இல்லை. தம்பாட்டிலேயே சுயமாக விருத்தியடையுமாறு உற்சாகமூட்டினேன்" என்கிறார். மைக்கேல் ஜோர்டேன் பாடசாலை கூடைப்பந்து கோஷ்டிக்கு தேர்வு செய்யப்படவில்லை. அவரது தரம் போதாதென்று பாடசாலை நிர்வாகம் கூறியது. அப்போது கூடத் தாயார் கோபமோ, விரக்தியோ காட்டாமல், "நீ உன் திறமையைக் காட்டி விளையாடினாய், எனவே உன்னைத் தேர்வு செய்யா விட்டாலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். வேணுமானால் இன்னும் சற்று கூடப் பயிற்சி எடு" என்றாராம். பின்னர் பெற்றோர் கொடுத்த உற்சாகம் வரையறையுள்ள எதிர்பார்ப்பு மைக்கேல் ஜோர்டனை இன்றைய நிலைக்கு உயர்த்தி உள்ளது.

பெற்றோர்கள் ஒரு பொழுதும் அதீதமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிராமல் பிள்ளையின் அறிவுக்கு தீனிபோடக்கூடிய எல்லைகளை வகுத்து அவற்றினை அடையத் தூண்ட வேண்டும்.

சமூக நடத்தை *(Social Behaviour):*

சமூக நடத்தை என்கின்ற பொழுது பிள்ளையின் சமூகத்தின் அங்கீகாரம் பற்றியது. ஒத்த வயதுடையோர் அங்கீகாரம், பெற்றோர் அங்கீகாரம் இரண்டுமே இங்கு முக்கியம். இதனால் பிள்ளையின் சுயமதிப்பு உயர்கிறது. தற்றுணிபு ஏற்படுகிறது. கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை ஒன்றில் சில வரிகள் தருகிறேன் வாசியுங்கள்

நீ பிறந்தவுடன்
தொடங்கி விடுகிறது
நீ யார் மாதிரி
இருக்கிறாய் என்று
அப்பா மாதிரியோ
அம்மா மாதிரியோ
குறைந்த பட்சம்

தாத்தா மாதிரியாகவே
நீ இருந்தாக வேண்டும்
இங்கே நீ நீயாக இருப்பதை
யாரும் விரும்புவதில்லை
சமூகத்தின் தேவை
ஜெராஸ் பிரதிகள்
ஏனெனில்
பிரதிகள் தொந்தரவாய்
இருப்பதில்லை
வழக்கமானதைக் குலைப்பதில்லை
வளரும்போதும்
உலகம் விரும்பும் மாதிரிகள்
உனக்குக் காட்டப்படுகின்றன
நீயும் உன்னைக் கவரும்
ஒரு மாதிரியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறாய்
பிறகு
உன் சாயத்தை உருக்கி
அந்த வார் படத்தில்
ஊற்றிக் கொள்கிறாய்

"நீ நீயாக இருக்க வேண்டும்" என்பதை நம்மில் பலர் சிந்திப்பதில்லை. ஒவ்வொரு சிறுபிள்ளையின் மனப்பாங்கு, உளவிருத்தி, உடல் வளர்ச்சி வேறுபட்டேயிருக்கும். ஆனாலும் இந்த வயதில் இந்த அளவு என ஒரு இயல்பு அடைவு உள்ளது. சிலர் இதற்கு மேலும், வேறு சிலர் இதற்குக் கீழும் இருப்பார்கள். எனவே முக்கியமாக நாம் ஒத்தவயதுடைய பிள்ளைகளின் செயற்பாடுகளை குறிப்பாக அவர்கள் முன்னிலையில் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. அனாவசியமான போட்டி மனப்பான்மை ஏற்படக்கூடிய செய்கைகளை செய்யுமாறு தூண்டுவதோ அல்லது அங்கீகரிப்பதோ கூடாது.

(ஜூன் 1996)

Our Parents need to help Children to be broadly Intelligent

விரிவான புத்திக் கூர்மை! பெற்றோர் பங்களிப்பு

சாதாரண மனித மூளை ஒன்றின் நிறை மூன்று இறாத்தல். அது ஆற்றும் தொழில்களோ விந்தை நிறைந்தவை. மூளை நரம்புக் கலங்களாலும் (Neuron) நரம்புப் பசையிழை (Neuroglea)யாலும் ஆனது. நரம்புக் கலங்களின் அடர்த்தியே மூளையின் விந்தைமிகு தொழில்களுக்கு காரணமானது. மனித மூளை கோடிக் கணக்கான நரம்புக்கலங்களைக் கொண்டது. இந்த நரம்புக் கலங்கள் மூளை, முண்ணாண் (Spinal cord - முள்ளந்தண்டின் உள்ளே காணப்படுவது), திரட்டுக்கள் (Ganglia) ஆகியவற்றில் மாத்திரமே காணப்படுகின்றன. நரம்புகள் எமது உடல் எங்கும் பரந்து காணப்படும்.
இநத் நரம்புகள் நரம்புக்கலங்களிலிருந்து தோன்றும் நரம்பு முளைகளால் (Neurite) ஆனவை. எனவே, எமது உடலில் காணப்படும் பல்வேறு வகையான கலங்களில் (Cells) மிக நீளமானவை நரம்புக் கலங்களே. ஒரு மனித மூளையில் உள்ள நரம்புக் கலங்கள் யாவற்றையும் ஒன்றோடொன்று இணைத்தோமென்றால், அதன் நீளம் 1000,000 கிலோமீற்றர் அல்லது 62,150 மைல் ஆக இருக்கும்.

மனித மூளையினுடைய விரிவான கட்டமைப்பும் தொழிற்பாடுகளும் மனித இனம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை ஒரே மாதிரியானதாக இருந்ததில்லை. காலத்துக்குக் காலம் எதிர்கொண்ட சிக்கலான சூழல் காரணிகள் அதன் மாற்றத்தை நிர்ணயித்தன. கடந்த ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வரை மனித மூளை பரிணாம (Evolution) அல்லது கூர்ப்பு விதிக்கு அமையவே மந்த கதியிலே படிப்படியான மாற்றங்களைப் பெற்றது. மனித இனம் பேசத் தொடங்கிய பின்னர், மாற்றங்கள் சற்று வேகமாக நடைபெறத் தொடங்கின. எனினும் கடந்த 30 தொடக்கம் 60 ஆயிரம் ஆண்டுகளிலேதான் விரிவான புத்திக்கூர்மை உள்ள ஒன்றாக மூளை மாற்றம் பெற்றுள்ளது.

விரிவான புத்திக்கூர்மை (Broad Intelligence) என்றால் என்ன?

நுணுக்கமான வேறுபாடுள்ள பல திறன்களை சென்ற 100,0000 ஆண்டுகளிலே மனித மூளை பெற்றுள்ளது என்பதை தொல்பொருளியல் மூலமும் (Archeology), பண்பாட்டு மனிதவியல் மூலமும் (Cultural Anthoropology) தெரிந்து கொள்ள முடிகிறது. அத்திறன்களாவன சமூகப் புத்திக்கூர்மை (Social Intelligence) தொழில்நுட்ப புத்திக்கூர்மை (Technological Intelligence), இயற்கைச் சரித்திரப் புத்திக்கூர்மை (Natural History

Intelligence), மொழிப் புத்திக்கூர்மை (Language Intelligence). கடந்த 30,000 வருடங்களிலே தான் நம்மால் மேற்படி புத்திக்கூர்மைகள் யாவற்றையும் ஒருங்கிணைத்து அசாத்திய சாதனைகள் செய்ய முடிந்தது. அதனையே விரிவான புத்திக்கூர்மை என்கிறார்கள். அஜந்தா, எல்லோறா, சித்தன்னவாசல், சிகிரியா குகை ஓவியங்கள் அபார கலை அம்சங்களுடன் மிளிர்வன. தஞ்சைப் பெரிய கோவில், இராஜராஜன் காலத்தின் மேதா விலாசத்திற்குப் பட்டொளி காட்டி நிற்கின்றது. கல்கியின் "சிவகாமி சபதம்" வாசித்தவர்கள், மகேந்திரப் பல்லவன் அஜந்தா ஓவியத்தை வரைந்த பச்சிலை மர்மத்தை அறியவே நாகநந்தியிடம் மாட்டிக்கொண்டு திண்டாடியதை மறந்திருக்க மாட்டீர்கள். மாமல்லபுரத்துச் சிற்பங்களும் கற்பனை வளத்திற்கும், கடின உழைப்பிற்கும் கட்டியம் கூறி நிற்கின்றன. இவை யாவும் இன்னும் பலவும் அன்றைய மக்களின் சமூக தொழில்நுட்ப இயற்கைச் சரிதப் புத்திக்கூர்மையைத் தெள்ளென எடுத்துக் காட்டுவனவாய் அமைகின்றன.

காலத்தால் அழியாத மேற்படி கலைப் பொக்கிஷங்கள் யாவும் ஒரு தனி மனித மூளையின் சாதனை அல்ல. பல மூளைகளின் கூட்டு முயற்சி. அங்கு சில தொழில் நுட்ப புத்திரிக்கூர்மை உடையவையாக அமைய, வேறுசில சமூக புத்திக்கூர்மையுடையவையாகவும் இன்னும் சில இயற்கை சரிதப் புத்திக்கூர்மை கொண்டவையாகவும் இருந்திருக்க முடியும். ஒரு மூளை மற்றையதிலும் பார்க்கக் குறிப்பிட்ட ஒரு திறனை அற்புதமாக நிர்மாணித்திருக்கும்.

எனவேதான் இன்றைய ஆசிரியர்களுக்கும் சிறப்பாக பெற்றோர்களுக்கும் பாரிய பொறுப்பு ஒன்று உள்ளது. அவர்கள் இன்றைய சிறார்களின் வெவ்வேறு புத்திக்கூர்மைகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்க முன்வரவேண்டும்.

மனித மூளைக்கு ஒரே சந்தர்ப்பத்தில் பல்வேறு படிநிலைகளை எதிர்கொள்ளும் தனித்தன்மை உண்டு. செய்கின்ற வேலையில் மிக்க ஈடுபாட்டுடன் உழைக்கும் பொழுது, அதனோடு சம்பந்தப்பட்ட எல்லாமே எமது ஆற்றலுக்கு அடங்கியவையே என்ற புத்துணர்வு ஏற்படுகிறது. இதனையே உளவியல் அறிஞர் ஓட்டநிலை (Flow) என்பர். சிறார்கள் எந்தவேலை செய்தாலும் அதனை உற்சாகப்படுத்தி ஈடுபாட்டுடன் உழைக்க வைப்பது பெற்றோர், பெரியவர்களின் கடமையாகும். இதன் மூலம் அவர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாகவும், தமது சுய ஆற்றலிலே அபரிமிதமான துணிவார்வமுடையோராகவும் வளர்வர்.

புறத்தே தோன்றுகின்ற சவால்களுக்குப் பிரதிவினை காட்டும் நிமித்தமே மூளை தன்னிச்சையாகவும், தன்னியக்க முறையிலும் தொழிற்படுகிறது. மூளையைப் பொறுத்தமட்டிலே ஒவ்வொரு சவாலுக்கும் அது என்ன செய்ய வேண்டுமெனக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. ஆனால் அச் செயற்பாட்டின் தனித்துவம், நேர்த்தி மூளையைச் சென்றடைகின்ற தூண்டல்களாலும் (Stimulation) மீள ஊட்டல்களாலும் (Feed Back) நிர்ணயிக்கப்படுகின்றன. உதாரணமாக, சிறுபிள்ளை ஒன்றினை நாய் ஒன்று குரைத்துப் பயமுறுத்துகிறது என்றால் அக் குழந்தையின் மூளை

தன்னிச்சையாகத் தொழிற்படுகிறது. ஏதோ ஒரு ஆபத்து பிள்ளையை எதிர்நோக்கி உள்ளது என மூளை அறிகிறது. உடனடியாக, பிள்ளை தனது பய உணர்வினைக் காட்ட, பலத்த சத்தமிட்டு அழலாம், அல்லது அழுதுகொண்டே ஓடலாம். இவை இரண்டுமே தன்னிச்சையாக நடைபெறுபவை. அதே சமயம் பிள்ளை இன்னோர் வகையான தற்காப்பு முறையினைக் கையாளலாம். கீழே குனிந்து சில கற்களை எடுத்து நாயை நோக்கி எறிந்து அதனை ஓட ஓட விரட்டலாம். இச் செயற்பாடு மூளையின் தன்னிச்சைச் தொழிற்பாடுடன் தூண்டல்களாலும், மீள ஊட்டல்களாலும் ஏற்பட்ட கற்றறிந்த செயற்பாடு. குழந்தைகளுக்கு *Building Blocks* வாங்கிக் கொடுத்தால், அவர்கள் அதை வைத்து எத்தனையோ ஆக்கங்களைச் செய்யும்போது தூண்டல்கள் மூளையைச் சென்றடைகின்றன.

செயல்விளைவுடைய கற்றல் முழுமையாக உணர்வு உரனையே சார்ந்து நிற்கிறது. நாம் எந்தச் செயல்களைச் செய்யும் பொழுதும் எந்த அளவுக்குத் தர்க்க ரீதியாகச் சிந்தித்து செயற்படுகிறோமோ அந்த அளவினுக்கு எமது உணர்வுகளும் பங்கு கொள்ளவே செய்கின்றன. தம்மைச் சார்ந்த விஷயங்களைப் பிள்ளைகள் மாத்திரமல்ல பெரியவர்களுமே கற்க முனைகின்ற பொழுது காட்டுகின்ற ஆர்வமும், ஓர்மமும் வேறொருவர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் ஏற்படுவதில்லை. பிள்ளைகள் கதை கேட்கும் பொழுது தமது பெற்றோர் சம்பந்தப்பட்டவற்றை மிக்க ஆர்வமாகக் கேட்பார்கள். மனதிலும் வைத்திருப்பார்கள். இதன் விளைவாக அவர்கள் உள்ளார்ந்த செயல் நோக்கம் *(Intrinsic Motivation)* உடையவர்களாக வளர்வர். ஏதேனும் ஒரு பிரச்சனை ஏற்படுகின்ற பொழுது, இத்தகைய மாணவர்கள் அதனைத் தீர்ப்பதற்குப் புதுமையான வழிகள் உள்ளனவா என ஆராய்ந்து செயற்படுவர். உள்ளார்ந்த செயல் நோக்கம் அற்ற பிள்ளைகள் செயற்கூச்சமுடையோராகப் பழியினை யார் தலையில் கட்டிவிடலாம் எனத் தேடித் திரிவர்.

சிறார்கள் வளர்கின்ற பொழுது பல சவால்களை அவர்கள் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் பெற்றோர் ஏற்படுத்திக் கொடுத்தல் மிக்க அவசியம். சவால்கள் கொண்ட உயிராற்றல் நிறைந்த சூழல் மூளையிலுள்ள நரம்புக் கலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அப்படியென்றால் எண்ணிக்கை எப்படி அதிகரிக்க முடியும் எனச் சிலர் கேட்கலாம். உண்மை; நரம்புக் கலங்கள் புதிதாகத் தோன்ற மாட்டா. ஆனால் உயிராற்றல் அற்ற சூழல் பல நரம்புக் கலங்களைச் செயலிழக்கச் செய்வதால், அவை இருந்தும் இல்லாதவையே. இவ்விதம் பல கலங்கள் செயலற்றவையாகலாம். அதேசமயம், சவாலான உயிராற்றல் சூழல் நரம்புக் கலங்கள் பலவற்றை சிறப்பாகத் தொழிற்பட வைக்கலாம். இச் சவால்களின் தூண்டல்களே மூளையின் சிறப்புத் தன்மைக்கு வழிவகுக்கின்றன. பிள்ளைகள் சவால்களை ஏற்று வெற்றிகரமாகச் செயற்படும்பொழுது மனம் திறந்து பாராட்டுதல் அவர்களுக்கு ஊக்கமளிப்பதோடு மேலும் சவால்களை எதிர்நோக்கும் தைரியத்தையும் தரும். எனினும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மிகையான தூண்டல்கள் சவாலாய் அமையாமல் அச்சுறுத்தலாயும் அமைந்து விடலாம். ஆகவே, பெற்றோர் பிள்ளையின் வயது, அதன் தொழித்திறன் பற்றி அனுமானித்தே தூண்டல்கள் தரவேண்டும். அச்சுறுத்தல்களை மூளை மிகச்

சுலபமாகச் சமாளித்துவிடும். தன் செயற்பாடுகளைத் தற்காலிகமாக நிறுத்திக் கொள்ளும் ஒரு சிறுவனுக்கு அவனைக் கவர்ந்திழுக்கக் கூடிய மனதால் செய்யக் கூடிய ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காணும்படி கூறுங்கள். உடனடியாக அவனது மூளையின் பல்வேறு பாகங்களும் ஒருங்கிணைந்து தொழிற்பட ஆரம்பித்துவிடும். தொடர்ந்து அச் சிறுவனை அவமானப்படுத்துங்கள். மூளைஒன்றுமே தொழிற்படாத தற்காப்பு முறை ஒன்றினைக் கையாளும் இதனை உளவியலறிஞர்கள் கீழ்நகர்த்தல் (Down Shifting) என்பார்கள். இதனால் அவனுக்குத் தன் திறன்கள் மீதே சந்தேகம் ஏற்பட்டுவிடும்.

எந்த இருவருடைய மூளைகளும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. எனவே எவ்வளவுதான் ஆக்கபூர்வமான, அதியற்புதமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தாலும் அவை நீண்ட காலத்திற்கு மூளையின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமையமாட்டா. சவால்கள் தேவை. அவை தரமுடையதாக அமைய வேண்டும் சீனப் பழமொழி ஒன்று உண்டு, "எனக்கு ஒன்றைச் சொல்லிக் கொடுங்கள், நான் மறந்து விடுவேன். எனக்குக் காண்பியுங்கள்; நினைவில் வைத்திருப்பேன். என்னைச் செய்யவிடுங்கள், விளங்கிக் கொள்வேன், வாழ்க்கை முழுவதும் நினைவில் வைத்திருப்பேன்".

(அக்டோபர் 1997)

சிறார்களின் மொழி அறிவினை விருத்தி செய்ய வேண்டும்

தமது பிள்ளைகள் மொழி அறிவினைப் பெற்று அதனை சிறந்த முறையிலே பிரயோகிக்கும் ஆற்றல் பெற வேண்டும் என்பதே ஒவ்வொரு பெற்றோரும் வேண்டுவது. மொழியினை நன்கு பேசி, எழுதி, வாசித்து கிரகித்து என அதன் பல்வேறு பரிமாணங்களையும் சிறப்பாக உய்த்தறியும் ஆற்றல் நம் பிள்ளைகள் பெற வேண்டும் என்பது பேராவலாகும். பிறந்த பிள்ளைகள் மொழியினை உபயோகிக்கின்ற பொழுதுதான் அம்மொழியினைக் கற்கின்றார்கள். அவர்கள் ஒரு தேவையின் விளைவாகவே மொழியினைக் கற்க ஆரம்பிக்கின்றனர். தமது தேவைகளை எடுத்துக் கூறுவதற்கு அவர்கட்கு ஒரு ஊடகம் தேவையாகிறது. சிறு குழந்தை தன் தேவையை உணர்த்துதற்கு அழுகை எனும் ஊடகத்தை உபயோகிக்கிறது. அக்குழந்தையின் தேவைகள் மிகக்குறைந்தவையாய் அமைகின்ற காரணத்தினாலே அது அழுகை எனும் மொழி மூலம் தனது தேவையை உணர்த்திவிட தாய் அதன் அர்த்தத்தைப் புரிந்து தேவையை நிவர்த்திக்கின்றார். அதன் தேவை என்னவாக இருக்கும் என்ற ஊகத்தின் விளைவாகவே தாய் செயற்படுகிறார். இது சில சமயங்களில் பிழைத்துவிடுவது சகஜம். அழுகை உணவுத் தேவையை ஈடுசெய்ய வேண்டும் என்ற சைகையா அல்லது உடல் உபாதையின் காரணமாகப் பிள்ளை எழுப்பிய அவலக் குரலா என்பதைத் தாய் அறிந்து கொள்ள நிறைய அனுபவம் தேவை. முயற்சியும் தவறிழைத்தலும் (Trial and Error) என்ற நெறி முறையிலே தொழிற்பட வேண்டும்.

பிள்ளை வளர வளர அதன் தேவைகள் அதிகரித்துக் கொண்டு போகின்ற பொழுது அதன் தேவைகளை எடுத்துக் கூற சிக்கலான மொழி தேவையாகிறது. அழுகை அதற்குப் போதுமாய் அமைவதில்லை. வளர்ந்தபின் அழுகை மூலம் சில தேவைகளை நிறைவேற்றலாம். ஆனால் பெற்றுக் கொள்ள முடியாது!

பொதுவாகச் சிறு பிள்ளைகள் ஐந்து வயதினை அடையும்பொழுது சரளமாகத் தாய்மொழி/ வீட்டுமொழியினைப் பேசும் ஆற்றல் பெற்று விடுகின்றனர். இப்படியாக அவர்கள் வீட்டு மொழியில் சரளமாகப் பேசக் கூடிய ஆற்றலை பெறுவதற்குக் காரணமாக அமைபவை:

மொழி உபயோகிக்கப்படும் சூழலிற்கு அவர்கள் காட்சிப்படுத்தப்படுதல் *(EXPOSURE)*:

குழந்தைகள் வீடுகளிலேயும், சுற்றாடலிலேயும் மொழியின் வெவ்வேறு தரங்களில் காட்சிப்படுத்தப் படுகிறார்கள். அவர்களுடன் பெற்றோர்களும்

உற்றார், உறவினர்களும் பேசுகின்ற பொழுது மிக்க எளிமையான அவர்கள் கிரகிக்கக் கூடிய மொழியிலேயே பேசுகின்றனர். அதே வேளையிலே பிள்ளைகள் உள்ள சூழலிலேயே பெரியோர்கள் தாம் பேசிக் கொள்கின்ற பொழுது சற்றுக்கடினமான சொற்களையே பிரயோகித்துப் பேசிக் கொள்கிறார்கள். குழந்தைகள் பெரியோர் பேசும் பேச்சில் உள்ள சொற்பதங்களின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளாவிடினும் அவற்றையும் உள்வாங்கிக் கொள்கிறார்கள். இவற்றில் சிலவற்றிற்கு பெரியோர்களின் செயல்களையும் பேசப்படும் சந்தர்ப்பங்களை வைத்துக் கொண்டு பிள்ளைகள் புரிந்து கொள்ள முயலலாம். இதே போன்றே வீட்டிலே இயங்கும் வானொலி தொலைக்காட்சி, இசைநாடா, சினிமா போன்றவற்றிலே கேட்கின்ற வார்த்தைகளின் தரம் கடினமானதாக இருந்தபோதிலும், அவை வெளிப்படும் சந்தர்ப்பங்களை வைத்துப் பிள்ளைகள் விளங்கிக் கொள்ள முனைகின்றனர். இதனால் அவர்களின் சொல்லாட்சி *(Vocabulary)* அதிகரிக்கிறது. அது பிள்ளைகளின் மொழி ஏற்புத் திறன்கள் *(Receptive Skills)* முன்னேற அனுசரணையாகின்றது.

குழந்தைகள் சில விதிகளைத் தாமாகவே உருவாக்கி அவற்றினைச் செயற்படுத்துகின்றனர். பெரியவர்கள் பேசுகின்ற பொழுது கால, இட எண், வேறுபாடுகள் தெளிவாய்ப் புலப்படுகின்றன. குழந்தைகள் பேசுகின்ற பொழுது இந்த வேறுபாடுகள் புலப்படுவதும் இல்லை. குழந்தைகள் பேசுகின்ற பொழுது சிலசமயம் சடுதியில் மாற்றங்களை ஏற்படுத்திப் பேசினாலும் கூட உண்மையான கருத்தினைப் பிரதிபலிக்கக் கூடியவாறு அமைவதில்லை. "அக்கா அடிக்கிறான்", "தம்பி கேக்குது" "பாப்பா சாப்பிடுகிறான்" போன்றவை நம் வீடுகளிலே சாதாரணமாகக் கேட்கின்ற மழலை மொழியாகும். குழந்தைகள் தாமாகவே தம்மனதிலே சில இலக்கண விதிகளை உருவாக்கி அவற்றினை தாம் பேச்சிலே பிரயோகிக்கின்றனர். அவர்களது இலக்கணப் பிழைகளுடைய மழலைப் பேச்சிலிருந்து வெளிவந்து இலக்கண சுத்தமாய் அவர்கள் பேசுவதற்குக் காரணமாக அமைவது பெரியவர்கள் பேசுவதை அவர்கள் செவிமடுப்பதாலேயே. எனவே, குழந்தைகளின் பேச்சு சீர்பெற வேண்டுமாயின் அவர்களுடன் பெரியவர்கள் நிறையவே பேச வேண்டும். இங்கே நாம் கருத்தில் கொள்ளவேண்டியவை:

1. அவர்களுடன் பேசுகின்ற பொழுது அவர்களுக்கு விளங்கக் கூடுமென்பதற்காக நாமும் மழலைமொழி பேசுதல் பிழையான முறை. இதனால் அவர்களின் பேச்சில் உள்ள இலக்கணப் பிழைகள் வலு மூலம் *(Reinforce)* பெற்றுவிட முடியும். எனவே, பிள்ளைகளுடன் பேசுகின்ற பொழுது எளிமையான இலக்கணச் சுத்தமான மொழியில் பேசுவது மிக அவசியம் இதனால் பிள்ளைகள் இலக்கணச் சுத்தமான தமிழை உள்வாங்கிக் கொள்கிறார்கள் அவர்கள் அறியாமலேயே தமது பேச்சு மொழியினை திருத்திக் கொள்கிறார்கள்.

2. பிள்ளைகளுடன் கலந்துரையாடும் பொழுது நேரடியாகவே அவர்களைப் பார்த்துப் பேச வேண்டியது அவசியம். *(Eye Contact)* அவர்களை நேரே பார்த்துப் பேசுவதனால் எமது முகபாவம், உதட்டு அசைவு போன்றவற்றின் உதவி கொண்டு அவர்கள் மேலும் பலசொற்களையும் அவற்றினை உச்சரிக்கின்ற முறைபற்றியும் தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு.

3. வேறு வேறு வேலைகள் செய்கின்ற பொழுதும் குழந்தைகள் மொழி அறிவினை விருத்தி செய்து கொள்கிறார்கள். பிள்ளைகள் அர்த்தம் பொதிந்த செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது மொழி அறிவினைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஏதேனும் ஓர் விளையாட்டினை விளையாடப் பழகிக் கொள்கின்றபொழுது அல்லது ஓர் பிரச்சனைக்குத் தீர்வு காணமுயல்கின்ற பொழுது அல்லது இவை எல்லாவற்றிற்கும் மேலாக கதை ஒன்றினைக் கேட்கும் பொழுது அவர்களது மொழி அறிவு விசாலமடைகிறது. சிறுகுழந்தைகள் விளையாடும் பொழுது அவதானித்துப் பாருங்கள். அவர்கள் தாம் செய்கின்ற ஒவ்வொரு படிமுறையினையும் வாயால் சொல்லிய படியே செய்வார்கள். எனவேதான் பிள்ளைகட்கு நிறைய வெவ்வேறு வகையான விளையாட்டுப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதால் அவர்களுடையமொழி அறிவினை விசாலப்படுத்த முடிகிறது. இதனைத்தான் செயல் தூண்டல் உள்ள (Motivating) சூழல் என்போம்.

குழந்தைகட்குக் கதை கேட்பதில் ஓர் அலாதியான இன்பம். கதை கேட்பதால் மொழிஅறிவு மிகச் சுலபமாக விருத்தியடைய முடியும். எமது கலாசாரத்தில் கதை சொல்வது நீண்ட நெடுங்காலமாக ஒன்றிவிட்ட ஓர் நெறிமுறை. கதை சொல்லி உணவூட்டல், கதை சொல்லி உறங்க வைத்தல் பாட்டிமார்களுக்கும் பாட்டாமார்களுக்கும் பவிசு பெற்றுத் தரும் செயற்பாடு. கதை சொல்வதால் பிள்ளைகளின் மொழி அறிவு விருத்தியடையக் கூடிய இரு படிநிலைகள் உள்ளன. கதை கேட்கின்ற பொழுது பிள்ளைகள் திறனாய்வு செய்யக்கூடிய முறையிலும், பயனடையக் கூடிய முறையிலும் அவதானித்துக் கேட்கும் திறன்களைப் பெறுவார்கள். கதை கேட்கின்றபோது கதையின் தன்மை பற்றி உணர்வார்கள். இதன் விளைவாகக் கதையின் அமைப்பையும், மொழி ஆழத்தையும் அறிந்து கொள்வதால் இன்னும் சிக்கலான கதைகளை வாசிக்க வேண்டும் என்ற வேட்கை மேல் எழுவதோடு மட்டுமல்லாது அவற்றை வாசித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றல்களையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

மற்றையோருடன் கலந்துரையாடுவதாலேயேயும் குழந்தைகளின் மொழி அறிவு விருத்தியடைகிறது. தெளிவாகவும், நேர்த்தியாகவும் பேசும் ஆற்றலுடைய மற்றவர்களுடன் கலந்துரையாடுவதால் எம் பிள்ளைகளுடைய மொழி ஆற்றல் உரம் பெறுகிறது. பிள்ளைகள் வெறுமனே சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களாகவோ அல்லது சொல்வதைச் செய்பவர்களாகவோ மாத்திரம் இருக்கப்படாது. தமது கருத்துக்களையும் எடுத்துக்கூறி தமது அறிவாற்றலையும் மொழி அறிவையும் அதிகரிக்க வேண்டும். மற்றவர்கள் பேசுவதைக் கேட்பதால், கிரகித்தல் திறன் (comprehension skill) கூடி ஏற்புத்திறன் (Receptive skill) அதிகரிக்கலாம் ஆனால் சொல்திறன் (Expressive skill) பேசுவதாலேயே அதிகரிக்க முடியும்.

பெற்றோர்கள் சொல் திறனை விருத்திசெய்ய நிறையவே உதவலாம். பிள்ளைகள் உங்களுக்குச் சில விஷயங்களைச் சொல்ல வரும் போது எவ்வளவு அவசர வேலை இருந்தாலும் பொறுமையாக அவர்கள் சொல்ல வந்தது முழுவதையும் சொல்லி முடியுமட்டும் , முழுமையாகக் கேட்க வேண்டும். அவர்கள் இலக்கண சுத்தமாகப் பேசினார்களானால் அதிகமாகப்

பாராட்ட வேண்டும். ஒரு சிறிய முத்தம், எங்கோ கொண்டுபோய் விடும்!

மொழி அறிவு விருத்திக்குத் தளம் அமைத்துத் தருவது வாசித்தல் ஆகும். வாசிப்பு என்பது எழுத்துடன் வாசகர் இடைத்தாக்கம் நடத்தி ஒரு கருத்தினைக் கண்டு கொள்ளமுனையும் உளவியல் மொழி சார்ந்த பொறிமுறை என்று சொல்லப்படுகிறது. வாசிப்பு என்பது ஒரு ஒன்றிணைந்த செயல்முறை.

தமது மொழி அறிவையும் சுய அனுபவங்களையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் மொழி ஏற்கின்ற பங்கினையும் வைத்தேதான் வாசகர்கள் தாம் வாசிப்பதைப் புரிந்து கொள்கிறார்கள். பிள்ளைகளின் வாசிக்கும் முயற்சிகளில் புரிந்துகொள்ளும் திறன் *(Comprehension)* முக்கிய அங்கம் வகிக்கிறது. ஒவ்வொரு பிள்ளையும் வாசிக்க முனைகின்ற பொழுது வெவ்வேறு நிலையில் உள்ள அனுபவங்களையும், மொழிசார்ந்த அறிவு மூலகங்களையும் கொண்டுள்ளனர். எனவே, அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரித்தான முறையிலே வாசிப்பதை விளங்கிக் கொள்கின்றனர். குழந்தைகளின் வாசிப்புப் பற்றி உலகளாவிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் எப்படி வாசிப்புத் திறன்களைப் பெறுகிறார்கள் என இன்று வரை ஒருவருமே திட்டவட்டமாகக் கூறவில்லை. மூன்று வெவ்வேறான முறைகளை ஒருங்கே பிரயோகித்தே பிள்ளைகள் வாசிக்கின்றார்கள் என்பதே பொதுவான கருத்தாகும்.

1. சொற்றொடர்முறை *(Syntax)* அல்லது அமைப்புமுறை *(Structure)* பிள்ளைகட்கு வாக்கிய அமைப்புமுறை தெரிந்திருப்பதாலும் சொற்கள் வாக்கியத்திலே ஏற்கின்ற பங்கு பற்றிய அறிவு உள்ளதாலும் ஆங்காங்கே வரவேண்டிய சொற்களை முன் கூட்டியே சொல்லமுடிகிறது. தம்பி நித்திரை செய்கிறான். இங்கே பிள்ளை தம்பி நித்திரை என வாசித்தபின் ஒரு வினைச்சொல் வரவேண்டும் என்ற வாக்கிய அமைப்பை தெரிந்திருப்பதால் தம்பி நித்திரை கொள்கிறான் என்று கூட வாசிக்கலாம். இரண்டுமே கருத்தில் ஒற்றுமை. முன்னையது வாசித்தல். பின்னையது ஊகம்.

2. சொற்பொருள் *(Semantics)* முறை அல்லது கருத்து முறை பிள்ளைகட்கு வாக்கியங்களிலே உள்ள சொற்களின் கருத்துச் சார்பான தொடர்பினைத் தெரிந்திருந்தால் அவர்கள் வாசிக்கும் பொழுது அந்தவாக்கியம் அர்த்தமுடையதாக அமையும். நான் கடைக்குப் போகிறேன் என்பதை அவர்கள் வாசிக்கின்ற பொழுது கடைக்கு என்பதற்குப் பதிலாக காரில் என்றும் வாசிக்கலாம். அங்கு வாக்கியம் அர்த்தமுடையதாகவே இருக்கும்.

3. ஒலியியல் வரைபுமுறை *(Grapho - phonics)* அல்லது குரலொலி முறை *(Phonics)* வாசிக்கும் குழந்தைகள் ஒவ்வொரு எழுத்திற்கும் அதன் ஒலியினைத் தெரிந்து உச்சரிப்பதால் வாசிப்பது சுலபமாகிறது. நாம் நெடுங்காலமாகப் பின்பற்றி வருகின்ற முறை இதுவேயாகும்.

மேற்படி மூன்று முறைகளில் எது சிறந்தது எதனைக் கைக் கொள்ள வேண்டும் என்று கூறுதல் சாத்தியமில்லை. மூன்றும் கலந்த முறையேதான்

சிறந்தது எனக்கூறலாம். பெற்றோர்கள் பிள்ளையின் வாசிப்புத் திறன்களை அதிகரிக்கச் செய்வதற்குப் பல வழிகள் உள்ளன. நாம் பொறுமை காட்டுவதுடன், நேரத்தையும் ஒதுக்க வேண்டியது அவசியம்.

நாளாந்தம் ஒரு குறிப்பிட்ட நேரம் அவர்களுக்கு, அவர்களுடன், வாசிக்க வேண்டும்.

வாசிப்பதற்குரிய நேரம் எது என்று தீர்மானித்து அதன்படி நடக்க வேண்டும். உதாரணம்: உறங்கப்போகும் நேரம் படுக்கையில் படுத்தபடி ஒரு பத்து நிமிடங்கள் வாசிப்பது, பிள்ளையை மகிழ்ச்சியுடன் உறங்க வைக்கும்.

வாசிக்கின்ற பொழுது ஓசையை மாற்றி நாடகத் தன்மையுடன் வாசிப்பது பிள்ளைக்கு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தும்.

வாரத்தில் ஒரு நாளாவது அருகே உள்ள நூலகத்திற்கு குழந்தையை அழைத்துச் சென்று அவர் விரும்பிய நூல்களைத் தெரிவு செய்து வரல் வேண்டும்.

அனேகமான நூலகங்களிலே சிறுவர்கட்கான நூல்கள் எல்லா மொழிகளிலேயும் உள்ளன. நூலகரிடம் இதுபற்றிய விபரங்களைக் கேட்டுத் தெரிந்து பெற்றுக் கொள்ள முடியும். எம்மில் பலர் கேட்டால் தான் அவர்கள் வாங்கியாவது வைக்க முனைவார்கள். நாமும் வீட்டிலே வாசிக்கவேண்டும். நாம் வாசிப்பதைப் பார்த்தால் அவர்கட்கு வாசிப்பதில் அக்கறை ஏற்படும். தொலைக்காட்சியே கதியென இருக்காதீர்கள். நிறையவே வாசியுங்கள்.

(மார்ச் 1997)

All Children Are Intelligent But In Different Ways

பிள்ளைகள் எல்லோரும் கூர்மதியுடையவரே; அது ஏழு விதமாய் காட்டிக் கொள்கிறது

"ஆடுகிற மாட்டை ஆடிக்கற, பாடுற மாட்டைப் பாடிக்கற" என்பார்கள். சில நாட்களுக்கு முன் 'Seven ways of Teaching" என்ற நூலின் முன்னுரையை வாசித்தபொழுது இப் பழமொழி எவ்வளவு கச்சிதமாகக் கற்பித்தலுடன் பொருந்துகிறது என வியந்தேன்.

டேவிட் லேசர் (David Lazer) என்ற நூலாசிரியர் தன் அனுபவத்தைக் கூறுகிறார். அவரது மகள் நயோமி. அவளுடைய மட்டற்ற சுறுசுறுப்புத் தன்மை பற்றி தினமும் ஆசிரியர்களின் குற்றச்சாட்டு வந்துகொண்டேயிருக்கும். அவள் ஆசிரியர்களுக்குப் பிரச்சனை. வகுப்பு அல்லோலகல்லோலம் அவளால். ஒரு நாள் பிள்ளை 20 சொற்கள் அடங்கிய பட்டியல் ஒன்றுடன் வீடு வந்தாள். அச்சொற்களும் அவற்றிற்குரிய விளக்கங்களும் தெரிந்து கொள்ள வேண்டும். அடுத்தநாள் பரீட்சை உண்டு எனக் கூறினார். உடனே டேவிட் அவர்கள், மகளை அவளது அறைக்குச் சென்று அவற்றை மனனம் செய்த பின் தன்னிடம் வந்து சொல்லிக் காட்டுமாறு பணித்தார். சிறிது நேரத்தின் பின்னர் கீழே வந்த மகள் தன்னைச் சோதித்துப் பார்க்கலாமென்றா. டேவிட் அவர்கள் சோதித்த பொழுது 50%க்கும் குறைவான சொற்களையே மகள் தெரிந்து வைத்திருந்தார். "மகளே நீ மிக்க மூளைசாலி, கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கிறாயில்லை, அதுவேதான் உனது குறை. எனவே, இம்முறை நீ உனது அறைக்குப் போய், ஒவ்வொரு சொல்லையும் ஐந்து முறை எழுது அவற்றின் கருத்தையும் எழுது. எழுதுகின்ற பொழுது எழுதுவதில் மனதை லயப்படுத்து" என்று கூறி மகளை மீண்டும் அறைக்கு அனுப்பிவிட்டார். கணிசமான அளவு நேரம் சென்றதும் நயோமி மீண்டும் வந்து சோதித்துப்பார்க்குமாறு பணித்தா. டேவிட் அவர்களும் மகள் இம்முறை அதிகம் முன்னேற்றம் காண்பிப்பா என்ற நம்பிக்கையில் சோதித்த பொழுது அவர் எதிர்கொண்டது பெரும் ஏமாற்றமே. மிகச் சிறிதளவே முன்னேற்றம் இருப்பதைக் கண்டு அவர் சோர்ந்து விட்டார். நயோமிக்கோ அப்பாவினைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "அப்பா எனக்கு இப்படி இருந்து படிக்க முடியாது. நான் ஓடி ஆடித் திரிய வேண்டும். நான் எனது உடல் மூலமாகத்தான் கற்க முடியும்" என்றாள். நயோமி. அடுத்த 20 நிமிடங்கள் வீடு அல்லோல கல்லோலப்பட்டது. நான் ஒரு சொல்லைக் கூறி அதன் கருத்தைக் கூறுவேன். அவள் தனது உடலின் அசைவுகளாலும், அபிநயங்களாலும்

அக்கருத்தைத் தன் மூளையில் பதிய வைத்துக் கொண்டாள். நாம் வீட்டில் தவழ்ந்தோம், அந்தரத்தில் தொங்கினோம், கதிரைகளுக்கு மேலாகப் பாய்ந்தோம், இன்னும் பல விதமான செயல்களைச் செய்தோம். முடிவு விளைவு, எனக்கு ஆச்சரியகரமானதாக இருந்தது. எந்த விதமான பிழைகளுமின்றி அவ்வளவு சொற்களையும் நயோமி ஒப்படைத்தாள். அவள் தனது உடல் மூலமாகக் கற்றுக் கொண்டாள்.

"என்னப்பா, நீ, நாங்கள் எங்கள் வீடுகளிலே இந்த முறையிலே எப்படிக் கற்பிப்பது, பாடசாலை அல்லவா இதற்குரிய செயற்திட்டங்கள் வகுக்க வேண்டும்" என உங்களிற் பலர் என்னைப் பற்றி வசை பாடுவது எனக்குக் கேட்கவே செய்கின்றது. ஒத்துக் கொள்கின்றேன் பாடசாலைகளே செயற்திட்டங்கள் உருவாக்க வேண்டும் என்பதை. இன்று ஐக்கிய அமெரிக்காவிலே பல பாடசாலைகள் இவ் வகையான கற்பித்தல் முறையினைக் கையாண்டு பிரமிக்கத்தக்க பெறுபேறுகளைப் பெற்றுள்ளன. நான் இங்கு கூறமுன்வந்தது எல்லாப் பிள்ளைகளுக்கும் ஏதோ ஓர் வகையான புத்திக் கூர்மை இருக்கும். மூளையை வந்தடையும் செய்தி அங்கே பதிந்து விடுகிறது. கனடாவிலே இத்தகைய பாடசாலைகள் இருப்பதாகத் தெரியவில்லை. சென்ற வருடக் கோடை விடுமுறையில் ஒரு பயிற்சி வகுப்பு நடத்தினார்கள். நானும் பங்குபற்றியிருந்தேன். ஆகவே ஆசிரியர்களுடையதும், கல்விச் சபையினதும் கவனம் இத்திசையில் ஈர்க்கப்பட்டமையால் விரைவில் இதற்கான செயற்திட்டம் உருவாகலாம்.

எமது மனதில் பதிந்துள்ள சில போலிவாதங்கள் *(Fallacies)* பிழையானவை. நீண்ட காலமாக மதிநுட்பம் அல்லது கூர்மதி என்பது பிள்ளைகள் பிறக்கையிலேயே அவர்களுடன் கூடப் பிறந்தது, நிலையானது என்று கருத்து இருந்து வந்துள்ளது. *Dr. Ruven Feverstein* போன்ற பல உளவியல் அறிஞர்கள் இத்தகைய அபிப்பிராயம் பத்தாம் பசலியானது எனக் கூறுகிறார்கள். எந்த ஒரு வயதிலேயாயினும் எத்தகைய செயற்திறன் உள்ளவராயினும் அவரது நுண்மதி இயக்கத்தை விரிவு படுத்தும் வாய்ப்பு உண்டு என அவர் கூறுகிறார். எனவே நாம் ஒவ்வொருவரும் தகுந்த முறையிலே உணர்வூட்டப்பட்டால் எமது கூர்மதி விரிவடையும் வாய்ப்பு உண்டு. எனவே எந்த ஒரு பிள்ளையையும் கூர்மதியற்றவர் என நாம் நிந்திக்க முடியாது. அவரது கூர்மதியை உணர்வூட்டி விரிவுபடுத்தும் வகை எது என்பதை அறிந்து கொள்ள முடியாத ஆகாத்தன்மை எம்முடையதே.

பொதுவாகவே நாம் ஒரு பிள்ளையினுடைய கூர்மதியினை அளவிடுவதற்கு *"I Q (Intelligence Quotient)* என்கிற கூர்மதி ஈவு எனும் பரீட்சையைக் கொண்டே மதிப்பிடுவோம். ஹாவர்ட் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த *Dr Howard Gardner* உம் அவரது ஆய்வுக் குழுவும் இத்தகைய முறை மிகவும் பாதகமானது என்கிறார்கள். ஒரு பிள்ளையின் கூர்மதியின் வியாபகம் இப் பரீட்சையின் பரப்பெல்லைக்கு அப்பாற்பட்டது என்று கூறுகிறார்கள்.

நாம் வாழும் உலகைப் பார்ப்பது, தெரிந்து கொள்வது, புரிந்து கொள்வது வெறுமனே ஒரே ஒரு தன்மையால் என்பது வெறும் பிதற்றல்.

ஆகவே அவர்கள் ஏழு வகையான கூர்மதியை இனம் காணபித்ததுடன் அவற்றின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு என்கிறார்கள்.

I. மொழிசார்ந்த அல்லது வாய்மொழிக் கூர்மதி (*Linguistic/ Verbal Intelligence*) பொதுவாக ஒருவருடைய கூர்மதியை அளவிடும் பொழுது மொழி பெரும் அளவிலே இடம்பெறுகிறது. இவ்வகையான கூர்மதி எழுத்தாளர் மேடைப் பேச்சாளர், கவிஞர்கள் போன்றோரிடம் நிறையவே உண்டு வளரும் இளம் பிள்ளைகளிடம் இக் கூர்மதி உள்ளதா எனக் கண்டு கொள்ளல் சுலபம். எப்படி?

1. தமது நிலைப்பாட்டை வலியுறுத்திச் சொல்லும் மொழி அறிவு. 2. மிகுந்த ஞாபகசக்தி 3. எதையும் நன்கு விளக்கிச் சொல்லக் கூடிய மனப் பக்குவம் 4. சொல்லப்படுபவற்றை சுலபமாகப் பகுத்துணரும் தன்மை

II. கணித அல்லது தருக்க முறைக் கூர்மதி (*Mathematical/ Logical Intelligence*). இக் கூர்மதி "விஞ்ஞான ரீதியான சிந்தனை (*Scientific Thinking*) எனக் கருதப்படுகிறது. உய்த்துணர்ந்து நியாயப்படுத்தும் திறன் இவர்களிடம் அபரிமிதமாகக் காணப்படும். கணணி செயல்முறை வல்லுனர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், கணிதவியலறிஞர்கள் பலரிடம் இக் கூர்மதி உண்டு. எமது குழந்தைகள் மாதிரிகளை அல்லது பாங்குகளை (*Patterns*) இனம் காணும் ஆற்றல் உள்ளவராயின் எண் கேத்திர கணித அமைப்புகள் போன்ற கருத்தியலான (*Abstract*) குறியீடுகளை வைத்துச் செயற்படும் ஆற்றல், தனித்தனியான செய்திகளை ஒன்றிணைக்கும் செயற்றிறன் இருக்குமாயின் அவர்களில் இவ்வகைக் கூர்மதி உள்ளதாகக் கருதமுடியும்.

III. மனக்காட்சி அல்லது இடம்சார்ந்த கூர்மதி (*Visual/ Spatial Intelligence*) விஷயங்களை வெவ்வேறு கோணங்களிலே மனதில் கணித்து அவற்றிற்கு ஏற்ப செயற்றிறன் காட்டல். இத்தகைய கூர்மதி கட்டிடக் கலைஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள், வரைபடக் கலைஞர் போன்றோரிடம் நிறையவே உண்டு. எமது பிள்ளைகள் படம் வரைதல், ஓவியம் தீட்டுதல், செஸ் (*Chess*) விளையாடுதல் போன்றவற்றில் ஆர்வம் உடையோராயின் அவர்களிடம் இக் கூர்மதி இருக்கிறது என உணரலாம். இக் கூர்மதியின் பிரதிபலிப்பு அவர்கள் மனதில் எழுகின்ற ஆக்க பூர்வமான சிந்தனையின் வலுப்பாடே. எனவே இவர்களிடம் மொழி சார்ந்த கூர்மதி இல்லாமை போன்ற போலித் தோற்றம் புலப்படலாம்.

IV. உடல் அல்லது இயக்கக் கலைநயமான கூர்மதி (*Body/ Kinesthetic Intelligence*). நான் ஆரம்பத்தில் கூறிய நயோமியிடம் இத்தகைய கூர்மதி காணப்பட்டது. இவர்கள் விளையாட்டு வீரர்களாகவோ, நடிகர்களாகவோ, புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்பவர்களாகவோ இருப்பர். எமது பிள்ளைகள் தமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் உடல் அசைவுகள் மூலம் காட்ட முற்படின் அவர்களிடம் இக் கூர்மதி உண்டு. "செயல் மூலம் கற்றல்" என்பது நீண்டகாலமாகவே நிலவி வரும் கற்றல் கோட்பாடு. என்ன செய்ய வேண்டும் என்பதை எமது உடல் நன்கே தெரிந்து வைத்துள்ளது. ஒரு சைக்கிள் வண்டியை எப்படி ஓட்டுவது, காரினை எங்கே நிற்பாட்டுவது

போன்றவை என்பது மனதின் எண்ணத்தை உடல் பிரதிபலிப்பதாலேயே நடைபெறும் நிகழ்ச்சிகள். எனவே செயல்கள் உடல் அசைவுகள் மூலம் மனதிலே இக்கூர்மதி உடையோருக்கு மனதிலே இலகுவில் பதிந்து விடுகிறது.

V இசை சார்ந்த அல்லது ஓசை ஒழுக்குடைய கூர்மதி (*Musical/ Rhythmic Intelligence*). இத்தகைய கூர்மதி யாரிடம் இருக்கும் என்பது நான் கூறாமலேயே தெரிந்திருக்கும். விளம்பரத்தில் சாதனை படைப்போர் இதில் அடங்குவர். குழந்தைகள் பலர் ABC பாடல் இதன் மூலமாகவே கற்றனர். "வெள்ளை நிறத்தில் ஒரு பூனை" என்ற அருமையான பாடல் நிறங்கள் பற்றியும், எண்கள் பற்றியும் அறிய வைக்கிறது. 'ஆத்திசூடி' அகர வரிசையைத் தெரிய வைக்கிறது. பிள்ளைகள் ஓசைகளை தெளிவாய் உணரும் தன்மையுடையவராய், சூழலில் ஏற்படும் ஓசைகளையும் மனிதக் குரல்களையும் தெளிவாய் இனம் காணக்கூடியவராயின், இசைக் கருவிகளை லாவகத்துடன் கையாளும் திறன் உடையவராயின் அவர்களுக்கு இக் கூர்மதி உண்டென்பது தெளிவு.

VI மனிதருக்கிடையே நட்புரிமைக் கூர்மதி (*Interpersonal Intelligence*) ஆசிரியர்கள், ஆலோசகர் சபைத் தலைவர்கள், அரசியல்வாதிகளிடம் அபரிமிதமாகவே உள்ளது. இக் கூர்மதி மற்றையோரிடையே எண்ணங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளல், பொறுமை பேணல், கலங்காத மனப்பக்குவம், மற்றவர்களின் குறை நிறைகளைக் கணித்து அவர்கள் புண்படாவண்ணம் பக்குவமாக ஆலோசனை வழங்கல், எதையும் அனுசரித்துச் செல்லுதல் போன்ற பண்புகள் உங்கள் குழந்தைகளிடம் காணப்பட்டால் அவர்கள் இக்கூர்மதியுடையவர்கள் எனலாம்.

VII தன்னகத்தியங்கிவரும் கூர்மதி (*Intrapersonal Intelligence*) தத்துவ மேதைகள், உளவியலறிஞர்கள், ஞானிகள், சித்தர்கள், யோகிகள் இவ்வகைக் கூர்மதியுடையோர். எதையும் தன்னை மையமாக வைத்துச் சிந்தித்தல், உள்ளுணர்வு மூலம் செயற்படுதல், வருங்காலம் பற்றிய நீண்ட தொலைநோக்கு, ஆழ்ந்த தத்துவார்த்த விசாரணை போன்றவை உங்கள் குழந்தைகளிடம் காணப்படலாம். அவை இக் கூர்மதிக்கு அறிகுறிகள்.

நான் மேற்கூறிய ஏழும் எமது பிள்ளைகளின் கூர்மதியைக் கணிக்கும் ஏழு வேறு வேறான வகைகளே. இவற்றில் ஒன்றோ ஒன்றிற்கு மேற்பட்டவையோ உங்கள் பிள்ளைகளில் காணப்படவே செய்யும். சரி அப்படி ஒன்றுமே காணப்படாவிட்டாலும் கூட அது அவர்கள் குறை அல்ல. இன்னும் ஆய்வாளர்கள் அதுபற்றிச் சிந்திக்கவில்லை என்பதே கருத்து.

எமது பிள்ளைகளின் கூர்மதியை, நாம் முயற்சி எடுத்தால் அதிகரிக்க முடியும். அவர்களின் கூர்மதி எத்துறையில் அமைந்துள்ளது என்பதைக் கண்டு அதனை விருத்தி செய்யத்தக்க அனுசரணையான சூழலை வகுத்துத் தருதல் பெற்றோர்களான எமது கடமையாகும்.

(செப்டம்பர் 1996)

Parents Role in the Development of the Brain of Child

குழந்தைகளின் மூளை அபிவிருத்தியில் பெற்றோரின் பங்கு

மூன்று வயதுப் பாலகன். டேவிட் சிவ்லர் (David Shiffler) என்பது பெயர். அவனது கண்டு பிடிப்பு இன்று உலக சாதனையாகக் கொண்டாடப்படுகின்றது. டேவிட்டும் அவனது பெற்றோர்களும் விடுமுறையைச் சந்தோஷமாகக் கழிக்க Rio Puerco என்ற ஊருக்குச் சென்றனர். அங்கு 'The Land Before Time" என்ற கேலிச் சித்திரப் படமொன்றினை டேவிட் பார்த்தான். அப்படம் ஒரு சிறிய டைனோசோர் பற்றியது.

டைனோசோர் பற்றிய உணர்வு டேவிட்டின் பிஞ்சு மனதை நன்றாகவே மாற்றி விட்டது. நிலத்தில் அவன் கண்ட கூழாங் கற்கள் யாவும் அவனுக்கு டைனோசோர் முட்டைகளாகவே தெரிந்தன. இவை எல்லாவற்றிலும் மேலாகத் தோட்டத்திலே தனது விளையாட்டு மண்வெட்டியால் வெட்டி எடுத்த பச்சை நிறமான சிறு கோள வடிவான ஒரு கூழாங்கல், டைனோசோர் முட்டை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தான். அதனைத் தன் தந்தைக்குக் கூறியபோது அவர் ஏற்கவில்லை.

சிறுவன் டேவிட் மனம் தளரவில்லை. அதனைப் பாதுகாப்பான ஒரு இடத்திலே வைத்ததுடன், மீண்டும் மீண்டும் தனது கருத்தைத் தந்தைக்குச் சொல்லிக்கொண்டேயிருந்தான். அவனது உபத்திரவம் தாங்க முடியாத தந்தை இறுதியில் அந்தக் கூழாங் கல்லை கொலறாடா பல்கலைக் கழகத்தின் தொல்லுயிரியற் பேராசிரியர் Emily Bray என்பவரிடம் எடுத்துச் சென்றார். தந்தைக்கு அங்கே ஆச்சரியம் காத்திருந்தது. அற்புதமான கண்டுபிடிப்பு என வாயாரப் புகழப்பட்டது. மெக்சிக்கோ தொல்லுயிர் காட்சிச் சாலையில் பார்வைப் பொருளாக இப்போது அது வைக்கப்பட்டுள்ளது. இம்முட்டை 150 மில்லியன் (15 கோடி) வருடங்களுக்கு முற்பட்டது எனகிறார்கள் உயிரியல் அறிஞர்கள். இதுநாள் வரை இறைச்சி உண்ணும், முட்டை இடும் டைனோசோர்களே முதன் முதலில் தோன்றியதாகக் கருதப்பட்ட காலக் கணிப்பை இக்கண்டுபிடிப்பு மாற்றி விட்டதாகக் கூறப்படுகின்றது.

உயிர்ச் சுவடுகள் (Fossils) என்று கூறப்படுகின்ற டைனோசோர் போன்றவை பற்றிய அறிவு இன்று மாத்திரமல்ல, இன்னும் பல்லாயிரம் வருடங்கள் கழிந்த பின்னும் முழுமையானவையென்று தீர்மானம் எடுக்க முடியாது. நாளாந்தம் புதுப்புது உயிர்ச் சுவடுகள் திடீரெனப் புதிய புதிய இடங்களிலிருந்து தோண்டி எடுக்கப்படுகின்றன. எனவே, இன்று உலவுகின்ற

கருத்து நாளை பிழையானதென மாற்றப்படலாம். இன்று அற்புதமான கண்டுபிடிப்பு என்று கோபுர உச்சியில் வைக்கப்பட்ட விடயம், நாளை "சீ குப்பை" என்று வீசி எறியப்படலாம். இது விஞ்ஞானம் சம்பந்தப்பட்டது.

எம்மை இங்கு ஈர்ப்பது விஞ்ஞானம் அல்ல; பிள்ளை வளர்ப்பு சம்பந்தமானது. டேவிட்டின் தந்தை போன்று எம்மில் எத்தனை பேர் முயற்சி எடுத்திருப்போம். "சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என்று நாம் தொன்று தொட்டுக் கூறிக் குழந்தைகளை மட்டந்தட்டியே வாழ்ந்து வந்திருக்கின்றோம். அவர்களது நற்றொடக்கத்துக்கு (*initiative*) முட்டுக் கட்டையாக இருந்திருக்கின்றோம். அவர்களது படைக்கும் திறனுக்கு (*creativity*) தடையாக நின்றிருக்கின்றோம். நுண்ணாய் சிந்தனையை (*critical thinking*) மழுங்கிப்போகச் செய்திருக்கிறோம்.

பொதுவாக எமது செயற்பாடுகள் மற்றவர்களாலேயே நெறிப்படித்தப்படுவது மிகவும் மனவேதனைக்குரியது. "மற்றவர்கள் என்ன சொல்வார்கள், அவர்கள் ஏளனம் செய்வார்கள்; இவர்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள்" என்ற ரீதியிலேயே எமது எண்ணங்கள் போவதைக் காணலாம்.

எங்களில் ஒருவர் டேவிட்டின் தந்தையாக இருந்தால், "விசர்ப் பொடியா, உந்தக் கூழாங்கல்லை டைனோசோர் முட்டை என்கிறாயே, உனக்கு மூளை இல்லையா" என மட்டந்தட்டி இருப்போம். பொறுமையுடன் அதனை ஆய்வுகூடம் எடுத்துச் செல்ல கனவிலும்கூட எண்ணியிருக்க மாட்டோம்.

மூளை பற்றிய அண்மைக்கால ஆய்வுகள் சில பற்றி இங்கு கூறலாமென எண்ணுகின்றேன். மூளை நரம்புக் கலங்கள் (*Neurones*), நரம்புப் பசையிழையம் (*Neuroglea*) என இரு வகை இழையங்களால் ஆனது. இவற்றில் நரம்புக் கலங்களே மூளையின் தொழிற்பாட்டுக்குக் காரணமானவை.

நரம்புப் பசை இழையக் கலங்கள் நரம்புக் கலங்களின் போஷணை, மற்றும் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டவை. ஒரு குழந்தை பிறக்கும்பொழுது அதன் மூளையிலே 100 பில்லியன் (*billion*) நரம்புக் கலங்கள் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்கள் பிறக்கும்பொழுதே ஒரே எண்ணிக்கை நரம்புக் கலங்களே உள்ளனவென்றால், புத்திக் கூர்மையில் ஏன் வேறுபாடுகள் தோன்றுகின்றன எனக் கேட்கலாம்.

நரம்புக் கலங்களுக்கிடையே மின்னிணைப்புகள் போன்ற நரம்பு இணைப்புகள் உள்ளன. இந்த இணைப்புகளின் தன்மை பெரிதளவில் புத்திக் கூர்மையைத் தீர்மானிக்கின்றன. பொதுவாகப் பிள்ளை ஒன்று பிறக்கும்போது அதன் பொதுவான தேவைகளுக்கேற்ப இணைப்புகள் ஏற்பட்டு விடுகின்றன.

பிள்ளை பிறந்தவுடனே அதன் மூளை பிரமிக்கத்தக்க வகையில் விருத்தியுறுகின்றது. படபடவென நரம்புக் கலங்கள் பல்வேறு இணைப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன. இங்கேதான் ஆச்சரியமான உண்மை-யொன்றினைப் பெற்றோர்களாகிய நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மூளையானது பேராசையோடு பல இணைப்புகளை உருவாக்கியுள்ளது உண்மை. ஆனால், அவை நிலைத்து நிற்கப் போகின்றனவா இல்லையா

என்பது யார் கையில் அடுத்த சில வருடங்கள் மிக முக்கியமானவை. 'A child is a finished product by five years" என்று, பெயர் பெற்ற உளவியல் அறிஞர் Piaget கூறியுள்ளார். அவர் உளவியல்சார் விருத்தியையே மனதில் வைத்துக் கூறினார். அக்குழந்தையின் சமூகவியல், உணர்வுபூர்வ விருத்திக்கு வேண்டிய தளம் ஐந்து வயதாகு முன்னரேயே அமைக்கப்பட்டு விடுகின்றது என்பதே Piaget இன் கருத்தாகும்.

அண்மைக் காலத்தில் நடந்த நரம்பியல் சம்பந்தமான ஆய்வுகள் குழந்தையின் ஆய்வறிவு (intellectual) விருத்தியும், ஓரளவு இந்த வயதெல்லையிலேயே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றது என்றே கருத வைக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவின் கல்வி ஆணைக்குழுவின் தலைவரான Frank Newman அவர்கள், மூளை அபிவிருத்திக்கென கால அளவீடு என்று ஒன்றுண்டென்றும் அதில் முதல் வருடம் மிக முக்கியமானது என்கிறார். உதாசீனம் செய்யப்பட்ட, பெற்றோரால் போதிய ஆதரவு காட்டப்படாத, வன்முறைக்குள்ளான பிள்ளைகள், அவர்களது மூன்று வயதுக்குள்ளேயே பாரதூரமாகப் பாதிக்கப்பட்டு, நிரந்தரமாக மூளை விருத்தியில் பாதிக்கப்பட்டு விடுகின்றார்கள்.

குஸ்ரன் பெய்லர் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் புறுஸ் பெறி அவர்கள், அனுபவங்கள் மூளை விருத்தியைப் பாதிப்பது பற்றி மிக அற்புதமாக விபரிக்கின்றார். "மூளையின் விருத்திக்குரிய கட்டிடக் கலைஞனாக அமைவது அனுபவங்களே" என்கிறார். குழந்தை தனது வாழ்க்கையில் பெறுகின்ற ஒவ்வொரு நுண்ணிய அனுபவமும் அதன் மூளை எத்தகைய முறையிலே விருத்தியுறப் போகின்றது என்பதைத் தீர்மானிக்கின்றது. வன்முறைக்கு ஆளாகின்ற பிள்ளைகள், உணர்வுபூர்வ ஆதரவு பெறாத பிள்ளைகள் (பெற்றோர் மணமுறிவு, தாயின் மன அழுத்தம்) ஆகியோரின் மூளை பெருமளவிலே பாதிக்கப்படுகின்றது. பெய்லர் மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சியாளரின் முடிவின்படி, உயிராற்றல் அற்ற சூழலில் (stimulating environment) வாழுகின்ற ஒரு குழந்தையின் மூளை விருத்தி முப்பது வீதம் குறையும் வாய்ப்பு உண்டு.

ஏற்கனவே சொல்லப்பட்டது போன்று, பிறந்த குழந்தையின் நரம்புக் கலங்கள் மிக வேகமாகப் பல நரம்பிணைப்புகளை உபயோகிக்கின்றன. இவற்றின் ஊடாகவே செய்திகள் கடத்தப்படுகின்றன. நரம்பிணைப்புகளை ஏற்படுத்திய மூளை இவ்விணைப்புகள் (Synapse) ஊடாக கணத்தாக்கம் (impulse) செல்ல வேண்டும் என எதிர்பார்க்கின்றது. கணத்தாக்கம் என்பது நரம்பு முளைகள் ஊடாகக் கடத்தப்படும் ஒரு செய்தியே. அவ்வாறு கணத்தாக்கங்கள் செல்லும் இணைப்புகள் உயிர்ப்புடையனவாய் வலுப்பெற்று நிற்கின்றன. கணத்தாக்கங்கள் செல்லாத இணைப்புக்கள் படிப்படியாக வலுவிழந்து, செயலிழந்து முற்றாகவே அழிந்து விடுகின்றன. அழிந்த நரம்பிணைப்புகள் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேயும் மீண்டும் தோன்றப் போவதில்லை. அழிந்தவை அழிந்தவைகளே. நரம்பிணைப்புகளின் எண்ணிக்கையே மூளையின் செயற்றிறனை நிர்ணயிக்கின்றன. எனவே குழந்தைப் பருவத்திலே உயிராற்றலுள்ள ஒரு சூழலைத் தந்து மூளை

உருவாக்கிய அத்தனை நரம்பிணைப்புகளையும் செயலூக்கம் கொடுத்து செயற்பட வைப்பது பெற்றோரின் முக்கிய கடமையாகும்.

பேச்சு, அசைவு, பார்வை, உணர்வு, கேட்டல் போன்ற பல்வேறு உணர்வுத் திறன்கள் மெருகூட்டப்படாத அடிப்படை அமைப்பிலே ஒரு குழந்தை பிறக்கும் போதே உருவகப்படுத்தப்பட்டுள்ளன. இவையுடன் சம்பந்தப்பட்ட நரம்பிணைப்புகளும் பிறக்கும் பொழுதே தோன்றிவிடுகின்றன. ஆனால் இவற்றினை மெருகூட்டவும், செயற்பாட்டினை அதிகரிக்கவும் தேவையான நரம்பிணைப்புகள் பிறந்த பின்னரே உருவாக்கப்படுகின்றன. அந்த நரம்பிணைப்புகள் தூண்டப்பட்டு செயற்படவைக்கும் பொழுது ஒவ்வொரு உணர்வுத் திறனும் செயற்றிறனில் அதிகரிக்கிறது.

உதாரணமாக: குழந்தை ஒன்று பிறந்த போது அதன் கை கால்கள் வெறுமனே கட்டுப்பாடற்ற முறையிலே அசைகின்றன. அடுத்த நான்கு வருடங்களிலே மூளை நரம்பிணைப்புகளை முற்போக்கான முறையிலே மெருகூட்டியதன் விளைவாக குழந்தை தவள, நடக்க, உட்கார, ஓட, எட்டிப் பிடிக்க, பற்றிக் கொள்ள என தன் அவயவங்களுடைய செயற்றின்களை அதிகரித்துக் கொள்கிறது. பெற்றோர்களாகிய நாங்கள் இந்த மெருகூட்டலை இன்னும் விரைவு படுத்துதலுடன், மேலும் சிறப்படையச் செய்யலாம். நுண் இயக்கத் திறன்களை (*Fine Motor Skills*) அதிகரிப்பதற்காகப் படம் வரைதல், வெட்டுதல், ஒட்டுதல் போன்ற செயல்களை ஊக்கப்படுத்தல் வேண்டும். கத்தரிக்கோல் மூலம் வெட்டப்பழகுதல் விரல்களின் நுண் அசைவுத் திறனை அதிகரிக்கப் பெரிதும் உதவும். இதே போன்றே பியானோ அல்லது வயலின் வாசிக்கப் பயிற்றுதலும் சிறந்த செயற்பாடுகளாகும்.

குழந்தை தாயின் கருப்பையில் இருக்கின்றபோதே தாயின் குரலை உணரும் திறன் பெற்றுவிடுகிறது என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆறுமாதக் குழந்தை ஒன்று மிகச் சுலபமாக உயிர் எழுத்து (*Vowel*) ஓசையைக் கிரகிக்கும் திறன் பெற்று விடுகிறது. இவ் ஓசைகளே பிள்ளையின் பேச்சுக்கு வேண்டிய ஒலிக் கூறுகளாகின்றன. எனவே பெற்றோர்கள் சிறப்பாகத் தாய்மார்கள் பிள்ளைகளுன் நிறையவே பேசவேண்டும் நிறையவே பிள்ளைகளுடன் பேசினால் அவர்கள் புதிய சொற்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு மிக்க அதிகம் உள்ளது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தாய்மார்கள், பாட்டிமார்கள் குழந்தைகளும் உச்ச ஸ்தாயியில் பேசும் பேச்சு மாறா ஒரே நிலை மெட்டு (*Sing Song or Parentese*) என அழைக்கப்படுகிறது. இத்தகைய பேச்சு குழந்தைகட்கு பொருட்களையோ, உறவினரையோ சொற்களுடன் தொடர்பு கொள்ள வைக்கிறது. மாறா ஒரே நிலைமெட்டிலே தாய் குழந்தையுடன் பேசுவதை அன்னியர்கள் பார்க்கின்றபோது இது என்ன முட்டாள் தனம் குழந்தைக்கு விளங்கப் போகிறதா என எண்ணுவார்கள். ஆனால் இன்று ஆராய்ச்சியாளர்கள் குழந்தையின் மூளை மொழி விருத்திக்கு வேண்டிய ஒலிக் கூறுகளைப் பெறுவதற்கு அனுசரணையாக விளங்கும் மிகவும் உன்னதமான முறை இதுவே என வலியுறுத்துகிறார்கள். வாசிங்ரன் பல்கலைக்கழக நரம்பு விஞ்ஞான பீடத்தைச் சார்ந்த பற்றீசியா குகுல் (*Patricia Khul*) தாய்மார்களின் உச்ச ஸ்தாயியில் நீட்டிப் பேசும் பேச்சு மிக முக்கியமானது என்கிறார். எல்லா



1. மூளையிலே உள்ள நரம்புக் கலங்கள் சாதாரண எண்ணிக்கையில் நரம்பிணைப்புக்களைக் கொண்டுள்ளன

2. நரம்புக் கலங்கள் அவசர அவசரமாகப் புதிய நரம்பிணைப்புக்களை உருவாக்குகின்றன



3. கணத்தாக்கங்கள் செல்லாமையால் உபயோகிக்கப் படாத நரம்பு முளைகள் முற்றாகவே அழிந்து விடுகின்றன.



மொழிகளுக்கும் பொதுவான உயிரெழுத்து ஓசைகளாகிய ஆ, ஈ, ஓ தாயினது பேச்சிலே அதிகம் வலியுறுத்தப்படுவதால் குழந்தை அவ்வொலிகளை மிகவும் சுலபமாக இனம் கண்டு கொண்டுவிடுகிறது என்று பற்றிசியா குகுல் கூறுகிறார்.

நரம்பு விஞ்ஞானவியல் அறிஞர் ஆதார பூர்வமாக இப்பொழுது சொல்லுகின்ற கருத்து எமது முன்னோர்களுக்கு என்றோ, எப்படியோ புரிந்திருக்க வேண்டும் என்பது அவர்கள் ஆண்டாண்டு காலமாக பாடிவருகின்ற தாலாட்டுப் பாடல்களிலிருந்து புரியக் கூடியதாக உள்ளது

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீ அழுதாய்
அடித்தாரைச் சொல்லி அழு

கண்ணே அடித்தார் யார்
கற்பகத்தைத் தொட்டார் யார்
தொட்டாரைச் சொல்லி அழு
தோள்விலங்கு போட்டிடுவோம்
ஆராரோ ஆரிவரோ

மாமி அடிச்சாளோ
மாதுளம் கம்பு வெட்டி
ஆச்சி அடித்தாளோ
ஆமணக்கம் தண்டு வெட்டி
பாட்டி அடித்தாளோ
பால் வார்க்கும் சங்காலே
மாமி அடித்தாளோ
மைதீட்டும் கையாலே
ஆராரோ ஆரிவரோ

பிள்ளையைத் தாலாட்டி உறங்க வைக்கின்ற பொழுது அதன் தாயோ அல்லது பாட்டியோ பாடுகின்ற தாலாட்டு, மாறா ஒரே நிலை மெட்டைச் (*Sing Song*) சேர்ந்த வகையே. ஆனால் அங்கே மூன்று பிரதான உயிர் எழுத்து நெடில்களும் மீண்டும் மீண்டும் சொல்லப்படுவது குழந்தையின் மொழி விருத்திக்கு வலுவான தளம் அமைத்துக் கொடுக்கிறது.

மேலும் பாடல் முழுவதிலுமே நெருங்கிய உறவு முறைகளும், சில எளிமையான வினைச் சொற்களும் மீண்டும் மீண்டும் வருகின்றன. குழந்தை உறங்கும் வரைக்கும் அந்த உறவு முறைகள் வேறு வேறு வினைச் சொற்களுடன் சேர்த்துக் கூறப்படுகின்றன.

மாமி அடித்தாளோ
மாதுளம் கம்பு வெட்டி
மாமி அடித்தாளோ
மைதீட்டும் கையாலே

என மாறி மாறி வருகிறது. இதனால் குழந்தையின் மூளையிலே மொழி விருத்திக்கு வேண்டிய சொல்லாட்சியும் பதிந்து கொள்கிறது.

இதற்காக இப்பொழுதும் தாலாட்டுப் பாடுங்கள் என்று நான் கூறுவதாக கருதவேண்டாம். எமது முன்னோர் விஞ்ஞான அறிவு இல்லாமல் விஞ்ஞான ரீதியாகச் சிந்தித்தார்களே என்று என்னுள் எழும் ஆச்சரிய உணர்வை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே இதனைச் சொன்னேன்.

பொதுவாக குழந்தைகளின் மொழி விருத்தித் திறன்கள் காலவரையறை வைத்தே விருத்தியுறுகிறது என மொழியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். சொற்றொடரியல் திறன்கள் (*Syntax*) ஐந்து ஆறு வயதினுக்கு மேல் விருத்தியுற மாட்டா. குழந்தையொன்றின் வயது எட்டு மாதம் ஆகின்ற பொழுதே அவர்களுக்கு எளிமையான கதைகளை வாசித்து விடலாம். அவர்களுக்கு ஒன்றுமே விளங்காது என எண்ணாதீர்கள். வாசித்தலால் அவர்களது மொழி அறிவிற்கு வித்திடுகின்றீர்கள். அவர்கள் சொற்களின் ஒலி வடிவங்களைப் புரிந்து கொள்கிறார்கள். இதனால் சொற்கள் எவ்விதம் அமைகின்றன என்பதைப் புரந்து கொள்வதுடன் ஒருவர் பேசுகின்றபொழுது ஒலி வடிவங்களைக் கண்டு கொள்ளவும் முடிகின்றது. ஆனால் சொல்லாட்சித் திறன்கள் (*Vocabulary*) தொடர்ந்து விருத்தியுறலாம். இன்னொரு மொழி கற்கும் திறன்கூட ஆறு வயதிற்குப் பின் படிப்படியாகக் குறைந்து கொண்டு போகிறது.

ஒரு சிறு வேண்டுகோள்: குழந்தைகளை அண்மையில் வைத்துக் கொண்டு பேசுகையில் கெட்ட வார்த்தைகளை உபயோகிக்காதீர்கள். எட்டு மாதக் குழந்தைக்குக்கூட கெட்ட வார்த்தைகளையும் நல்ல வார்த்தைகளையும் இனங்கண்டு ஞாபகம் வைக்கும் சக்தி உள்ளனர் என ஆய்வாளர் கருதுகின்றனர். *Johns Hopkins University* யைச் சேர்ந்த *Peter Jusczyk "little Ears Are Listening"* என்கிறார்.

பெற்றோர்கள் இரண்டு விஷயங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். குழந்தைகளுடன் நிறையப் பேசுதல் வேண்டும், எளிமையான சொற்களை உபயோகித்து உச்சஸ்தாயியில் மீண்டும் மீண்டும் ஒரே சொற்களை உபயோகித்தும் பேச வேண்டும். வீட்டு மொழியிலேயே பேசுவதுடன் நிறையக் கதைகள் சொல்லி அவர்களின் சொல்லாட்சியை விருத்தி செய்ய முன்வர வேண்டும்.

தமிழ் படிக்க விடுவதால் அவர்கள் ஆங்கில மொழியாற்றல் குறைந்து விடுமென ஐயுறத் தேவையில்லை. குழந்தைப் பருவத்திலே எத்தனை மொழி கற்றாலும் அத்தனையிலும் ஆற்றல் பெறும் திறன் அவர்கட்கு உண்டு.

(இக் கட்டுரையை நான் எழுதுவதற்குக் காரணமாக இருந்தவர் திரு. மனோகரராசா. Time பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையின் பிரதியைக் கூட எனக்கு அனுப்பியிருந்தார். அவருக்கு நன்றி)

(செப்டம்பர் 1997)

மூளையை நல்ல நிலையில் வைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?

மனித மூளையை நேரடியாகப் பார்க்கையில் மூன்று முக்கிய அம்சங்கள் அவதானிக்கக்கூடியதாக அமையும். முதலாவது, அதன் மேற்பரப்பு முழுவதும் பெருமளவிலே சுருள் சுருளான மடிப்புகளையும், அவற்றிற்கிடையே காணப்படும் கால்வாய்களையும். அடுத்து, மூளையின் முழுத்தூரமும் முன்னிருந்து பின்னாக ஆழமான பிளவு ஒன்று வலம் இடமென மூளையை இரு பாதிகளாகப் பிரிப்பதை. மூன்றாவது, மூளையின் சில பகுதிகள் றோஸ் நிறமாகவும், வேறு சில பகுதிகள் வெளிறியும் காணப்படுவதை.

மூளையின் பரப்பு இவ்வளவு சுருள் சுருளாக படிந்திருப்பதற்குக் காரணம் என்ன? மூளையினை அதன் மடிப்புகள் யாவற்றையும் விரித்து எடுத்தால் கிட்டத்தட்ட நான்கு சதுர அடிகள் வரை பெருமனாக இருக்கும் என்பதிலிருந்தே அதன் மடிப்புகள் தோன்றியதற்குரிய காரணம் புலனாகியிருக்கும்.

நடுவிலே காணப்படுகின்ற ஆழமான பிளவு மூளையை இரு பகுதிகளாகப் பிரிக்கிறது என்று சொல்வதிலும் பார்க்க, இரு தனித்தனி மூளைகள் சில ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்காக இப்பிளவின் கீழே இணைக்கப்பட்டுள்ளன என்று கூறுதல் மூளையின் தனித்தன்மையை விளக்கு- வதாக அமையும்.

மூளையின் பகுதிகளிலே மிகப் பெரியது மூளையம் என்பபடுகின்றது. நரம்புத் தொகுதியினை உருவாக்கிய நரம்புக் கலங்களிலே 70 வீதமானவை மூளையத்திலே காணப்படுகின்றன. சாதாரண மனித மூளையில் 10000000 000000 (10 பில்லியன் - 100 பில்லியன் வரையான நரம்புக் கலங்கள் (neurons) உள்ளன. நரம்புக் கலங்களுக்கிடையே அவைகளுக்குப் பாதுகாப்பாக அமையும் இடநிரப்புப் பொருளாக Neuroglea எனப்படும் நரம்புப் பசையிழையக் கலங்கள் உள்ளன. இவற்றின் எண்ணிக்கை நரம்புக் கலங்களின் எண்ணிக்கையிலும் பன்மடங்கு அதிகம். மொத்த இந்திய சனத்தொகையினைப் பன்னிரண்டு மடங்காக்குங்கள். அவர்கள் கைகோர்த்துக்கொண்டு முண்டியடித்து நின்றால் எப்படி இருக்கும். இதன் விளைவே மூளையின் பரப்பில் எக்கச்சக்கமான சால்களும் பீடங்களும்.

மூளையின் தொழிற்பாடுகள் முழுவதற்கும் நரம்புக் கலங்களே காரணமாகின்றன. நரம்புக் கலங்கள் ஒவ்வொன்றும் இரு பகுதிகளைக் கொண்டவை. அவை கருவினைக் கொண்டுள்ள கலவுடலும், அதன் ஓரங்களில்

இருந்து தோன்றும் நரம்பு முளைகளும் ஆகும். கலவுடல்கள் மூளை முண்ணாண் போன்ற பகுதிகளிலும், சில திரட்டுக்களிலும் மாத்திரமே காணப்படுகின்றன. நரம்பு முளைகள் உடல் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. நரம்பு முளைகள் இல்லாத இடமே இல்லையென்று கூறலாம். நரம்பு முளைகள் தமது முனைகளிலே பல சிறிய கிளைகளாகப் பிரிந்து முடிவுறுகின்றன. அதேபோன்று, இன்னொரு நரம்பு முளை பல சிறிய கிளைகள் இணைவதால் உருவாகின்றது. நரம்பு முளைகள் புலனுறுப்புகளிலோ, இயக்க உறுப்புகளிலே முடிவுறலாம். செய்திகள் நரம்பு முளைகள் ஊடாகச் செல்கின்றன. இரண்டு நரம்புக் கலங்களின் நரம்பு முளைகள் ஒன்றோடு ஒன்று தொடாமலேயே செய்திகள் கடத்தப்படுகின்றன. நரம்பு முளைகள் ஊடாகச் செய்திகள் செல்வதை மின்சாரம் செல்வது போலவும், இரண்டு நரம்புக் கலங்களின் ஊடாகச் செய்தி போவதை இரசாயனப் பொறி முறையாலும் என்போம். நரம்புக் கலங்கள் எவ்வளவுக்கெவ்வளவு நரம்பு முளைகளைக் கொண்டிருக்கின்றதோ அவ்வளவு சிறப்பாற்றல் உடையதாகின்றது. "அஷ்டாவதானி", "சதாவதானி" என்று அந்தக் காலத்தில் கேள்விப்பட்டிருப்பீர்களே, அதேபோலத்தான் நரம்புக் கலங்களும். ஒரு நரம்புக்கலம் தனது நரம்பு முளைகள் மூலம் 1000 வேறு நரம்புக் கலங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியது. இராவணனுக்கு இருபது கைகள் என்றால், இரண்டு கைகளையுடைய எம்மிலும் பார்க்க அவனின் செயலாற்றல் பன்மடங்கு அதிகமாகத்தானே இருக்கும்.

வாழ்வு நிறைவானதாக அமையவேண்டுமாயின், 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். உண்மையில் நோயற்ற வாழ்விற்கு ஆதாரமாக அமைபவை உடலியல் நன்னிலை (*Physical Fitness*), மனம்சார் நன்னிலை (*Mental Fitness*) ஆகிய இரண்டுமே. காலையில் எழுந்ததும் பலர் நடப்பார்கள், ஓடுவார்கள், அப்பியாசங்கள் செய்வார்கள். உடலியல் நன்னிலையை நிலைநிறுத்துவதற்கென அட்டவணைக் கிரமமாகச் செயற்படுவார்கள். இதன் விளைவாக உடலிலேயுள்ள தசைத் தொகுதிகள் நன்கு விருத்தியுற்று சிறப்பாகத் தொழிற்படக்கூடிய திறன் உடையவையாக அமையும். அதேவேளை மனம்சார் நன்னிலையும் இதேயளவு முக்கியத்துவம் உடையது என்பதை நம்மில் பலர் உணர்வதில்லை. அறிவுத்திறனை நிறையவே செயற்படுத்துவோர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள் எனவும், நோய் நொடியில்லாமல் வாழ்வார்கள் எனவும் ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

நரம்பியல் ஆய்வாளர்கள் மூளையின் எவ்வெப் பகுதிகள் பல்வேறு தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன என்பதை மிகத் துல்லியமாகக் கணித்திருக்கின்றனர். ஒவ்வொரு சிறு பகுதியிலும் காணப்படுகின்ற நரம்புக் கலங்களே குறிப்பிட்ட தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன. அங்கங்கே காணப்படுகின்ற நரம்புக் கலங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது சாத்தியமில்லை. இதே போன்றே பல்வேறு உடற்கலங்களின் எண்ணிக்கையும். இயற்கை (கடவுள்) மனிதனை என்றுமே வஞ்சிப்பதில்லை. உடற்குறை-பாடுகளுடன் பிறந்த சிலரைத் தவிரப் பெரும்பாலானோருக்கு நரம்புத் தொகுதியிலுள்ள நரம்புக் கலங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரே தொகையினதாகவே இருக்கும். அப்படியென்றால், ஏன் சில பிள்ளைகள் புத்திக்


நரம்புக் கலம்
நரம்புக் கலவுடல்
நரம்பு முளை
நரம்பு முளை
நரம்பிணைப்பு



மூளை (மேற்பரப்பு)



மூளை (பக்கத் தோற்றம்)

கூர்மையுடையவர்களாகவும், சிலர் மந்தமானவர்களாகவும் உள்ளார்கள் என்று ஆண்டாண்டு காலம் கேட்கப்படுகின்ற கேள்வியை இப்பொழுதும் சிலர் கேட்கலாம்.

மனிதப் பிறப்புரிமையில் *EUGENICS* என்பது பிறப்புரிமை சம்பந்தப்பட்டது. சில குழந்தைகள் அதீத புத்திக்கூர்மையுடன் பிறக்கவே செய்கின்றன. மனித *(EUTHENICS)* வேறு சிலவோ சாதாரண புத்திக் கூர்மையுடன், பிறந்தாலும் வளர்ப்பு முறையினால் கூர்மையுடையவர்களாக வளர்கின்றனர். *'Use it or lose it'* என்பார்கள். சார்ள்ஸ் டார்வின் என்னும் கூர்ப்பியல் அறிஞர் *'Use and disuse of organs'* என்றார். இதன்படி உபயோகப்படுகின்ற உறுப்புகள் விருத்தியுறுவதும், உபயோகப்படாத அங்கங்கள் சிதைந்து சீர்குலைவதையும் காணலாம்.

அறிவாற்றல்சார் செயற்பாடுகள் மூளையின் உடலியல் அமைப்பினை மாற்றி விடுகின்றன. நரை நிறப் பகுதியின் அளவு அதிகரிக்கின்றது. காரணம், நரம்புக் கலங்கள் மேலும் மேலும் நரம்பு முளைகளை உருவாக்கி தமக்கிடையே உள்ள தொடர்புகளை அதிகரிக்க, மூளையின் தொழிலாக்கித் திறன் முன்னிலும் பன்மடங்கு கூடுகிறது. எனவே மூளைக்கும் அப்பியாசம் முக்கியமாகும். இது எப்படிச் சாத்தியமாகிறது.

1. புதிய திறன்களைப் பெறுதல்: புதிய விளையாட்டுக்களைக் கற்றுத் தெரிந்து கொள்ளலாம். இதனால் புதிய முறையில் தசை இயக்கத் தொகுதி தொழிற்படுவதுடன் அதனோடு தொடர்புடைய மூளையின் பகுதியும் செயற்றிறனை அதிகரிக்கும். மின்கணனி உபயோகிக்கப் பழகுதல் உன்னதமானது. மரவேலை போன்ற தொழில் நுட்பங்களைக் கற்றல், அல்லது ஏதேனும் கவின் கலைகளைக் கற்றல் யாவுமே புதிய புதிய திறன்களைப் பெற வழி வகுப்பவை. இன்னொரு மொழியினைக் கற்றலும் வேறு வகையான திறன்களைப் பெற வாய்ப்பளிக்கின்றது.

2. அறிவுசார் தொழிற்பாடுகள்: நாம் சிறுவர்களாக இருந்தபோது அடிவாங்கி வாய்ப்பாடு பாடமாக்கினோம். அதன் பலனாக இன்றும் எந்தவொரு கணக்கையும் மனதால் செய்யும் தகைமையுடையோராய் இருக்கின்றோம். எமது பிள்ளைகள் கல்குலேட்டர் இல்லாவிட்டால் சிறு கூட்டல் கழித்தல்களைக் கூடச் செய்ய முடியாமல் திக்கு முக்காடுகிறார்கள். ஏன் வீணே வாய்ப்பாடு பாடமாக்கி நேரத்தை வீணடிக்க வேண்டும் என்பார்கள். ஆனால், வாய்ப்பாடு பாடமாக்குவதால் மனம்சார் தொழிற்றிறன் பெருமளவிலே அதிகரிக்கின்றது என்பதனை அவர்கள் உணர்வதில்லை. இன்றைய கல்வி முறையும் அதனை முக்கியமாகக் கருதுவதில்லை. நமது பிள்ளைகளை அறிவுசார் செயல்கள் செய்யுமாறு ஊக்குவிக்க வேண்டும். சதுரங்க விளையாட்டு *(chess)* இதற்கு மிகவும் சிறந்தது. இது மூளைக்குப் பெருமளவிலே வேலை கொடுக்கும் ஒரு விளையாட்டு. இதற்கு அடுத்ததாக குறுக்கெழுத்துப் போட்டி *(crossword puzzles)* நிறையவே சிந்திக்க வைப்பதுடன் நிறையத் தெரிந்து கொள்ளவும் உதவும். *Scrabble, Word Building* போன்றவை சொல்லாட்சியை அதிகரிக்கச் செய்வதுடன், சாதுரியமாகச் செயற்படும் திறனையும் வளர்க்கின்றது. *Bridge,*

கடதாசி விளையாட்டு ஆகியவைகளும் கூட அறிவாற்றலைப் பெருக்கி உதவுபவையே.

3. ஞாபக சக்தியை விருத்தி செய்தல்: ஆததிசூடி கற்றோம் அப்பொழுது அதன் அர்த்தம் புரியாமல், "கொன்றை வேந்தன்" மனனம் செய்தோம் ஆசிரியரின் பிரம்புதான் அன்று எமக்குத் தெரிந்த அர்த்தம். கற்ற திருக்குறளைச் சிலசமயம் மலகூடத்தில் இருக்கும் பொழுதும் கூடச் சொல்லிப் பார்த்துச் சரி செய்வதுண்டு. பின்னர் எத்தனையோ வருடங்கட்குப் பிறகு இவற்றின் அர்த்தம் புரியும் பொழுது, அவற்றினை வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே பிரயோகிக்கும் பொழுது, புதிய புதிய முறைகளிலே வியாக்கியானம் செய்கின்றபொழுது நாம் இளமையில் பட்ட கஷ்டம் வீண் போகவில்லை என்ற திருப்தி ஏற்படவே செய்கிறது. இன்றைய இளம் தலைமுறையினரிடம் ஞாபகசக்தி இல்லை என்று அர்த்தமில்லை. அது SELECTIVE MEMORY, அவர்கட்கு எது தேவையோ அதனை மாத்திரம் நினைவில் வைக்கிறார்கள். மற்றைய தேவைகளை இன்றைய தொழில்நுட்பம் கவனித்துக் கொள்கிறது. பாடசாலை ஒன்றிலே பாலர் மேற்பிரிவில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் இன்னும் ஒழுங்காகப் பேச்சு வரவில்லை என்பதால் என்னை வந்து பார்க்கச் சொன்னார்கள். நான் அவனுடன் சிறிதுநேரம் பேசியபின் பாட்டுப் பாடுவோம் என்று சொல்லி 'சின்னச் சின்னப் பூனை' என்றேன். அவன் இல்லை 'சின்னச் சின்ன ஆசை, சிறகடிக்க ஆசை' என்றான். அவன் ஞாபகசக்தி அப்படி. பல்வேறு விஷயங்களையும் மூளை ஞாபகத்தில் வைக்கும் பொழுது அதன் ஆற்றல் பிரமிக்கும் வகையாய் அமையும். பிள்ளைகளை ஞாபகசக்தியை விருத்தி செய்யும் வகையில் தூண்டுதல் அவசியம்.

4. படைப்பாற்றல், கவின் கலைகள் கற்றல்:- சிறுவர்களை எழுதுமாறு ஊக்குவிக்க வேண்டும். இப்போ தொலைபேசி இருக்கின்ற காரணத்தினாலே பெரியவர்கள் கூடக் கடிதம் எழுதுவது வேலை மினக்கேடு என எண்ணுகிறார்கள். ஊரில் உள்ள உறவினருக்கு பிள்ளைகளைக் கடிதம் எழுத வைக்கலாம். சிந்திக்கிறார்கள் தொடர்பு கொள் முறையிலே புதிய எல்லைகளை அமைக்கிறார்கள் இன்னும் எமது வேர்களையும், ஊர்களையும் பற்றிச் சிந்திக்கிறார்கள். இதே போன்று கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுத வைக்கலாம். எழுதும் பொழுது தர்க்க ரீதியாகச் சிந்திக்கிறார்கள். விஷயங்களையும், நிகழ்ச்சிகளையும் சீரான ஒழுங்கிலே அமைக்கும் வண்ணம் குழப்பமற்ற முறையிலே சிந்திக்கப்பழகுகிறார்கள். இதேபோன்று தான் சங்கீதம், நடனம் போன்ற கவின் கலைகள் கற்கும் போது அவதானித்தல், பிரயோகித்தல், புதிய முறைகளில் எடுத்துக் காட்ட முனைதல் எனப் பல்வேறு ஆற்றல்கள் விருத்தியுற வழிவகுக்கின்றன. சித்திரம் வரைதலும் நிறையவே மூளையின் திறமைகளை ஊக்கி விருத்தி செய்யக்கூடியது.

திறன்களை அனுபவரீதியாகப் பெற்றால், மூளையின் நரம்பு முளைகள் அவற்றிற்கு ஏற்ப விருத்தியுறுகின்றன. பின்னர் அதே போன்ற சந்தரப்பங்கள் ஏற்படுகின்ற பொழுதோ சற்று மாறுபட்டவை தோன்றுகின்ற பொழுதோ முன்னர் கற்ற திறன்கள் பிரயோகிக்கப்படுகின்றன. நாய் ஒன்று கடிப்பதற்காக (இங்கு இல்லை, ஊரிலே) உங்களை நெருங்குகிறது. மூன்று வழிகள் உள்ளன. என்ன

செய்வது என்று மலைத்துப் போய் நின்று நாயிடம் கடிவாங்கிக் கொண்டு, பின் டாக்டரிடம் போகலாம், பின்னங்கால் முதுகில் அடிக்க சிறிது தூரம் ஓடியபின் திரும்பிப் பார்த்து நாய் இல்லை என்பதைக் கண்டு நிம்மதியாக மூச்சு விடலாம். நாயைக் கண்டதும் கீழே உள்ள கல்லையோ, தடியையோ எடுத்து வெற்றியோ, தோல்வியோ எதிர் கொள்ளலாம். இந்த மூன்று தீர்மானங்களில் எதனைச் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியது மூளை. அதுவும் உடனடியாக எடுக்க வேண்டியது. ஏற்கனவே கற்ற திறன்கள் மூளை எடுக்க வேண்டிய தீர்மானத்திற்கு நிறையவே உதவுகின்றன.

விளையாட்டுக்களிலே, மிக வேகமாகப் பிரதிவினை (Quick Response) காட்டல் இன்றியமையாதது. சிறந்த விளையாட்டு வீரராக உள்ளவர் நல்ல மூளைத் திறன்களையும் உடையவராக இருப்பார். Tennis விளையாட்டினை பார்ப்பவர்கள் ANDRE AGASSI யின் விளையாட்டில் நிறையவே சாதுரியம் உள்ளதைக் கண்டிருப்பீர்கள். MICHAEL CHANG கூட ஓரளவிற்குப் பரவாயில்லை. PETE SAMPRAS அந்த அளவினுக்குச் சாதுரியமான ஆட்டம் ஆடுபவராக நான் கணிக்கவில்லை. ஏன் மல்யுத்தத்தில் கூட மூளைத்திறன் எவ்வளவு தேவை என்பதை நேற்றைய தலைமுறையின் மல்யுத்த வீரர் ஆன MUHAMMED ALI (CASSIUS CLAY) மல்யுத்தம் செய்ததைப் பார்த்தவர்கள் உணர்வார்கள். 'காதுக்கடி' மன்னன் MIKE TYSON வெறுமனே உடல் வலுவைத்தான் நம்பி மல்யுத்தம் போட்டார். காதையும் கடித்தார். பட்டத்தையும் இழந்தார்.

5. தர்க்கரீதியில் சிந்தித்தல்: எமது பிள்ளைகள் எம்மால் பதில் சொல்ல முடியாத விதத்தில் பல கேள்விளைக் கேட்பார்கள். நாம் அப்படியல்ல, 'எடுப்பார் கைப்பிள்ளை' போல யாரோ சொல்லித் தந்ததையும், எவரோ எழுதியதையும் தேவ வாக்கு என எண்ணிக் கற்றோம். தர்க்கரீதியாக் சிந்தித்தோமில்லை. சிந்திக்கத் தொடங்கியிருந்தால், பெற்றோரின் கண்டிப்பு, ஆசிரியரின் அச்சுறுத்தல், சமூகத்தின் ஏளனம் எனப்பல அவஸ்தைகளுக்கு ஆளாகியிருப்போம். எனது மகள், "கோவிலிலே காணப்படும் வள்ளி, தேவயானி ஆகிய இருவரையும் எப்படி வேறுபடுத்திக் கண்டு கொள்வது" எனக் கேட்டா.

இந்த ரீதியில் நான் இதுவரை சிந்திக்கவே இல்லை. உங்கள் பிள்ளைகள் உங்களை இக்கட்டில் மாட்டக் கூடிய இத்தகைய பல கேள்விகளைக் கேட்கலாம். பொறுமை பேணுங்கள். தெரியாது என்றால் மழுப்பாதீர்கள், கோபப்படாதீர்கள். தெரியாது அறிந்து சொல்கிறேன் என்று கூறி யாரிடமாவது விடை அறிந்து கூறுங்கள். அப்பாவிற்கோ, அம்மாவிற்கோ தெரியவில்லை என பிள்ளை ஏளனம் செய்ய மாட்டார், தனக்காகத் தகவல் திரட்டித் தந்தமைக்காக நன்றியுடையவனாயிருப்பான். கோபப்படுவதாலோ, அசட்டுக் கேள்விகள் கேட்காதே என்று விரட்டுவதாலோ, மழுப்பி விடுவதாலோ பிள்ளையின் தர்க்கரீதியான சிந்திக்கும் திறனை மழுங்க வைப்பதோடு அவருக்கு உங்கள் மேல் உள்ள நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் போக்கடித்து விடுகிறீர்கள். பிள்ளைகள் நாம் எண்ணுவதிலும் பார்க்க மூளைத்திறன் உடையவர்கள். அதை வளர்க்க உதவுங்கள்.

கிறிஸ்மஸ் பண்டிகைச் சமயம் ஒரு குடும்பத்திலே தாய் தந்தை அவர்களுடைய நான்கு வயது மகன் ஆகிய மூவரும் இருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார்கள். குழந்தை தந்தையைப் பார்த்துக் கேட்டது "நான் எப்படிப் பிறந்தேன்?" என்று. "உன்னை எனக்குக் கிறிஸ்மஸ் தாத்தா தந்தார்" என்றார் தந்தை. "அப்போ எனது அண்ணன் எப்படிப் பிறந்தார்" என்றது குழந்தை. "அவனையும் கிறிஸ்மஸ் தாத்தாவே தந்தார்" எனக் கூறினார் தந்தை. "அப்போ நீ எப்படிப் பிறந்தாய்" என்றது குழந்தை. "எனது அப்பாவிற்குக் கிறிஸ்மஸ் தாத்தா என்னைக் கொடுத்தார்" என்றார் தந்தை. குழந்தை கைகொட்டிச் சிரித்தது. "ஐயோ! ஐயோ! உங்கள் ஒருவருக்குமே ஒழுங்காகப் பிள்ளை பெறத் தெரியவில்லையே" என்றது. தந்தை அசடு வழிந்தார்.

6. வாசிப்பதை ஊக்கப்படுத்துங்கள்: தொலைக்காட்சி வாழ்க்கையின் இன்றியமையாத அம்சமாக வந்துவிட்டமையால் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் குறைந்து கொண்டு வருகிறது. INTERNET வாசிக்கும் தன்மையைச் சற்று இழுத்துப் பிடிப்பது உண்மையே. வாசித்தல் என்பது மிகச் சிக்கலான மனம் சார் தொழிற்பாடு. செய்தியை உள்ளடக்கிய விஷயம் என்பதை வெறுமனே சொற்களை வாசிப்பதால் மாத்திரம் தெரிந்து கொள்ள முடியாது. நிறையவே சிந்திக்க வேண்டும், சில சமயங்களில் முன்னர் வாசித்ததை நினைவு கூர வேண்டும், தொடர்புபடுத்த வேண்டும், வியாக்கியானம் செய்ய வேண்டும்.

எனவே வீட்டிற்கு ஒரு பத்திரிகையாவது எடுக்க வேண்டும், சிறிது நேரமாவது தொலைக்காட்சியை நிறுத்திவிட்டுப் பத்திரிகை வாசிக்கத் தூண்ட வேண்டும். 'SCRAP BOOK' ஒன்றினைச் செய்து கொடுத்து அவர்களுக்கு உதவக் கூடிய பல விஷயங்கள் சம்பந்தமானவற்றை வெட்டி ஒட்டி வைக்கப் பழக்கலாம்.

நாளைய எமது தலைமுறையினர் இன்னும் சிறப்பாக வாழ, இன்னும் பல உள. இவை சில.

(வாக்கு மூலம்: TORONTO STAR பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையில் நிறையவே திருடியுள்ளேன். மன்னிப்பார்களாக!)

(ஏப்ரல், மே - 1998)

Adolescent Behaviour: Is it parental indifference or peer influence?

வளரிளம் பருவத்து மாணவர் நடவடிக்கைகள்; பெற்றோர் உதாசீனமா? ஒத்த வயதுக் குழுவின் கவர்ச்சியா?

"குறை நினைக்க வேண்டாம்! உங்கள் சமூகத்து மாணவிகள் அடக்க ஒடுக்கமாக பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள். ஆனால் மாணவர்களில் பெரும்பாலோர் அப்படி இல்லையே? ஓடியாடித்திரிந்து கூச்சலிட்டுத் தம்மையும் வருத்தி, மற்றையோரையும் குழப்பி அடிக்கிறார்களே இது ஏன்?" எனச் சில நாட்களுக்கு முன்னர் இடைநிலைப் பாடசாலை ஒன்றின் ஆசிரிய ஆலோசகர் என்னிடம் கேட்டார்.

எமது வளரினம் பருவத்து மாணவர் (Adolescents) சிலர் இத்தகைய நடத்தை காண்பிப்பது பற்றி வேறு பலரும் கூறியுள்ளனர். எனவே, அவர்களின் நடத்தை பற்றிச் சிந்திக்கலாமென எண்ணினேன்.

வளரிளம் பருவத்தவரது அனுபவ மாற்றங்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்தவையாக இருந்த போதிலும் உடலமைப்பு, ஆளுமை, அறிவாற்றல், மனக்கிளர்ச்சி போன்றவை முக்கியமானவை. ஆளுமை வளரிளம் பருவத்தினரிலே வித்தியாசமான பரிமாணங்களிலே வெளிக்காட்டுவதுடன், ஐந்து வெவ்வேறான விருத்திக் கடமைப் பொறுப்புக்களுடன் சம்பந்தப்பட்டுள்ளது.

1. உடலமைப்பிலே தோன்றுகின்ற மாற்றங்களால் ஏற்படும் அனுபவங்கள், பாலியல் முதிர்வு அடைதலால் ஏற்படுகின்ற உணர்வுகளை அனுசரித்துச் செல்லல்

2. பெற்றோர்களுடன் இதுவரை இருந்த உறவு முறையிலே இருந்து உளரீதியாக மாறுபடுகின்ற தன்மை

3. தன்னொத்த வயதுடைய ஆண்களுடனோ பெண்களுடனோ ஏற்படுத்தக் கூடிய ஆக்க பூர்வமான உறவு

4. தனக்கென ஒரு தொழில் பெறுவதற்குத் தன்னை தயார்படுத்த வேண்டுமென்ற உணர்வு நிலை

5. தன்னை அடையாளம் காட்டுதற்குரிய "தனித்துவம்" கொண்ட நிலையை எய்த வேண்டும் என்ற அங்கலாய்ப்பிற்கு வழிவகுத்தல்

இவ்வைந்திலும் "நான் நானாக" என்ற உணர்வு ஏற்படுத்தும் தனித்துவத்தை நாட்ட முனைதலே மிக முக்கியமானது. இந்த உணர்வேதான் வளரிளம் பருவத்தினரிலே பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

முக்கியமானதொன்றினை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வளரிளம் பருவத்தினிலே ஏற்படுகின்ற அனுபவங்கள் வெவ்வேறு கலாசாரங்களிலே வேறுபட்டுக் காணப்படுவதுடன், அவற்றின் தாக்கங்கள் பொதுவாக ஆண்களிலும் பார்க்கப் பெண்களையே பாதிப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும் எமது சமூகத்தைப் பொறுத்த மட்டிலே பெற்றோர் பெண்களை வளர்க்கும் முறையினால் ஏற்படுகின்ற அனுபவங்கள் பெண்களிலே பாரிய தாக்கங்களை ஏற்படுத்துதற்குத் தடையாக உள்ளதே நிதர்சனமான உண்மையாகும்.

வளரிளம் பருவத்தவரிலே சடுதியான விரிவான மாற்றங்கள் பல ஏற்படுகின்றன. உளப்பாங்கிலும், உடலமைப்பிலும் ஏற்படுகின்ற இம் மாற்றங்கள் "இங்கே! இப்பொழுதே" என்ற இளமைக்கால மனப்பான்மையில் இருந்து மாறி ஊகங்களையும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயும் மனப்பாங்கினையும் ஏற்படுத்துகின்றன. அவர்களைப் பொறுத்த மட்டிலே வாழ்க்கைமுறை, தொழில் வாய்ப்பு போன்றவற்றிலே பல்வேறான விருப்பத் தேர்வுகள் உள்ளன. எனவே அவர்கள் தமது ஆற்றல்கள், திறன்கள், தனித்துவம் போன்றவற்றை மீண்டும் மதிப்பீடு செய்து மீளஅமைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அப்பொழுது அவர்கள் தமது குறைகளையும், நிறைகளையும் அறிந்து கொள்கின்றனர்.

இங்குதான் பிரச்சனை ஆரம்பமாகிறது. வளரிளம் பருவத்தினர் தமது குறைகளையும், நிறைகளையும் மதிப்பீடு செய்கின்ற பொழுது, குறைகள் பெரிய அளவிலே காணப்படுமாயின் ஏற்படுகின்ற விரக்தி உணர்வு அவர்கள் மனதிலே பலமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

வளரிளம் வயதினர் பொதுவாகவே எடுக்கின்ற தீர்மானங்கள், அதன் விளைவாகப் புலப்படுத்துகின்ற நடவடிக்கைகள் மூன்று காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவை: தம் சுய சிந்தனையின் விளைவானவை; பெற்றோர்களின் வழிகாட்டலால் அல்லது நிர்ப்பந்தத்தின் விளைவானவை; நண்பர்களின் ஆலோசனை, வழிநடத்தலின் விளைவானவை.

வளரிளம் பருவத்தினர் தமது சுயசிந்தனையின் விளைவால் எடுக்கும் தீர்மானங்கள் சிக்கல் நிறைந்தவையாகவே இருப்பன. இவர்கள் பொதுவாகவே தன்முனைப்புள்ளவர்களாகவே இருப்பர் (Egocentric), மற்றவர்கள் தங்களையே எப்பொழுதும் அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற உணர்வு அவர்களது நினைவோட்டத்தில் இருந்து கொண்டே இருக்கும். இதனால் அவர்கள் நடவடிக்கைகள் பெரும்பாலும் தமது கற்பனையில் தெரிகின்ற அவதானிகளுக்காகவே நடத்தப்படுகின்றன. எமது இளைஞர்களில் பெரும்பாலோர் இத்தகைய கற்பனைக்கேட்போர் (Imaginative Audience)களுக்காகவே அடாவடித்தனத்திலும், கூச்சல் குழப்பத்திலும் ஈடுபடுகின்றனர். தமது திறன்களை மதிப்பீடு செய்கின்ற பொழுது ஏற்படுகின்ற

விரக்தியின் பிரதிபலிப்பு இதற்குக் காரணமாகிறது. அப்படியாயின், பெண்கள் ஏன் அப்படி நடத்தை காட்டுவதில்லை? பின்னர் பார்ப்போம்.

பெற்றோர்களின் வழிகாட்டலின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கின்ற வளரிளம் பருவத்தினரை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. முன்றடைசெய் வளரிளம் பருவத்தினர் (Fore Closed Adolescents) பெற்றோரை ஒத்த நடத்தை காட்டுவார்கள். பெற்றோரே அவர்களுக்கு வேண்டிய மாதிரி உருக்கள் (Role Model) ஆக அமைந்து விடுவதாலும் பிள்ளைகளும் அதிக நேரத்தை ஆக்கபூர்வமாகச் செலவழிப்பதாலும், பிள்ளை சார்பாகப் பெற்றோர் எடுக்கின்ற தீர்மானங்கள் பிள்ளை அறியாமலேயே அவரது தீர்மானங்கள் ஆகிவிடுகின்றன. எனவே வளரிளம் பருவத்தினர் உளப்பாங்கிலே ஏற்படுகின்ற மாற்றங்கள் மிகச் சுமூகமாகவும், அங்கீகாரம் பெறக்கூடியவை-யாகவும் அமைந்து விடுகின்றன.

2. தவணை முறை வளரிளம் பருவத்தினர் (Moratoriom Adolescents): பிள்ளைகளின் அன்றாடப் பிரச்சனைகளைச் சுமூகமாகத் தீர்ப்பதில் பெற்றோர் அக்கறை காட்டும் தன்மையில் அந்நியோன்யம் நிலவுவதில்லை. சில முக்கிய முடிவுகள் எடுப்பதில் பங்கு கொள்வார்கள். தமது கருத்தை வலியுறுத்தி அதனை ஏற்கும்படியும் வற்புறுத்தலாம். இங்கு வளரிளம் பருவத்தினரின் ஆளுமை பெற்றோரது நடவடிக்கையால் பாரிய பாதிப்பினுக்கு ஆளாவதைக் காணலாம்.

3. பரவுவகை வளரிளம் பருவத்தினர் (Diffusion Adolescents). பிள்ளைகளின் உளவியல் தேவைகள் பெற்றோரால் ஈடுசெய்யப்படுவதில்லை. தீர்மானங்கள் எடுப்பதில் பெற்றோர்கள் பங்கு கொள்வதில்லை. குடும்பத்தில் தந்தை தலைமைத்துவம் பேணுவதில்லை. பிள்ளைகளை வழிநடத்துதற்குரிய ஆற்றலோ, அறிவோ, ஈடுபாடோ அவர்களிடம் இருப்பதில்லை.

இந்த மூன்றிலேயும் முதலாவது வகையினைச் சேர்ந்தவர்கட்கு வளரிளம் பருவத்தில் ஏற்படும் மாற்றங்கள் சுமூகமானவையாகவே இருக்கின்றன. இரண்டாவது, மூன்றாவது வகையில் முழுமையாகவும் ஒத்த வயதுடையவர்களின் வழிகாட்டலாலும், அவர்களது அனுபவங்களை முன்னோடியாக வைத்தும் தனித்துவத்தை நிலைநாட்ட முனைகையிலே சமூக அங்கீகாரம் அற்ற சில/ பல நடவடிக்கைகள் ஏற்பட நிறையவே வாய்ப்புகள் உண்டாம்.

இந்நாட்டிலே வாழ்கின்ற நம் இளைஞர்களிலே ஒரு பகுதியினர் பெற்றோர்களைப் பிரிந்து வந்து உறவினர்களுடனோ அல்லது நண்பர்களுடனோ வாழ்கின்றனர். எனவே அவர்கள் இவர்களுக்கு பெற்றோர் ஆக்க வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டியவர் ஆகின்றனர். அவர்களால் இப்பணி எந்த அளவினுக்கு ஆற்ற முடிகின்றது என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒத்த வயதுடையோர் குழு, வளரிளம் பருவத்தவர்க்குப் பல்வேறு விதங்களிலே அனுகூலமாக உள்ளது. எனவே தீர்மானம் எடுப்பதில் நண்பர்களின் ஆலோசனை நிறைய இருக்க வாய்ப்புண்டு.

1. குடும்பத்திற்குப் பதிலமர்த்தல் (Replacement for Family) ஒத்த வயதினர் குழு ஒரு குடும்பம் போல இயங்க, அங்கு வளரிளம் பருவத்தவருக்கு ஒரு அந்தஸ்து தரப்படுகிறது. தனது வீட்டிலே கிடைக்காத அங்கீகாரம், கருத்துகட்குச் செவிமடுத்தல், எண்ணங்கள் விதந்துரைக்கப்படுதல் அவரது தனித்துவத்தை நிலைநாட்டப் பெரிதும் உதவுகின்றன. முன்றடை செய் குடும்பங்களில் உள்ள வளரிளம் பருவத்தவர்கட்கு இந்நிலை ஏற்படமாட்டாது. மற்றைய இரண்டு வகையினரும் ஒத்தவயதுடையோர் குழுக்களைச் சரணடைவதற்கு குடும்பத்திற்குப் பதிலமர்த்தல் ஒரு பிரதான காரணமாகின்றது.

2. உறுதிப்படுத்தும் செயல்விளைவு (Stabilizing Influence): ஓமோன்களின் தாக்கத்தால் ஏற்படுகின்ற அதீத மாற்றங்கள், சமூகத்தின் பார்வையில் காணக்கூடிய வித்தியாசமான அனுபவங்கள் வெறுமனே தனக்கு மாத்திரமல்ல தன் வயதொத்தவர்கள் யாவருக்குமே ஏற்படுகின்ற புதுமை வாய்ந்த அனுபவங்கள் என்பதை அறிகின்ற பொழுது வளரினம் பருவத்தினர் மனதிலே ஒரு நிம்மதி தோன்றுகின்றது. எனவே அத்தகையோரைச் சகபாடிகளாகக் கொள்வது உள்ளத்திலே தோன்றக்கூடிய பல சந்தேகங்களுக்கு விடைகாண உதவும் என்ற மனப் பாங்கினை ஏற்படுத்துகின்றது.

3. தன்மதிப்பை ஏற்படுத்தும் சாத்தியம் (Source of Self Esteem) ஒத்த வயதுடையோர் குழு ஒன்றில் அங்கத்துவம் வகிக்காவிட்டால், குழுவின் பலம் முழுமை பெறாது. எனவே தான், குழுவினுக்குத் தேவையானவன், தனது பங்களிப்பு குழுவின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானது என உணர்வதன் காரணமாக அவரது தன்மதிப்பு மேலோங்குகின்றது. இத்தகைய உணர்வு பல குடும்பங்களின் வளரிளம் பருவத்தினருக்கு ஏற்படுகின்றது என்பதை நாம் உணர வேண்டும். காரணம் என்னவாயிருக்கும் எனபதையும் நீங்கள் அறிவீர்கள்.

4. நடத்தைக்குரிய ஓர் படிஅளவுகளை வகுத்தல் (Source for Behavioural Standards). எப்படி நடக்க வேண்டும், எதனைச் செய்ய வேண்டும், எவ்விதம் பேசவேண்டும் என்று நடத்தைக்குரியபடி அளவுகளை வழங்கும் அதிகாரத்தை வளரிளம் பருவத்தினர், ஒத்த வயதுடையோர் குழுக்களின் ஆலோசனையின் பிரகாரம் தீர்மானிக்கின்றனர்.

எந்த ஒரு குடும்பத்திலும் பெற்றோருக்குரிய அரவணைப்பும், பிள்ளைகட்குரிய உரிமைகளும் உதாசீனம் செய்யப்பட்டால் அல்லது மறுக்கப்பட்டால், வளரிளம் பருவத்தினர் தமக்கு வேண்டிய பாதுகாப்பையும், முன்மாதிரியையும் ஒத்த வயதுடைய குழுவில் இருந்து பெறமுனைவர். எவ்வளவுக்கெவ்வளவு வளரிளம் பருவத்தினருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம், கண்ணியமான உறவுமுறை, குறைகிறதோ அங்கே ஒத்த வயதுடையோர் கலாசாரம் மிக்க கவர்ச்சி மிக்கதாய் அமையும். எனவே, ஒத்த வயதுடையோர் குழுவினில் வளரிளம் பருவத்தவர் ஒருவர் தஞ்சமடைவாராயின் அது பெற்றோரின் உதாசீனத்தின் நேரடி விளைவே அன்றி அங்கே உள்ள கவர்ச்சியின் விளைவு அல்ல.

5. பாதுகாப்பினைத் தருகிறது (*Source of Security*): பெற்றோரின் விழுமியங்களிலிருந்து வளரிளம் பருவத்தினர் வேறுபடுகையிலே அவர்கட்கு வேண்டிய பாதுகாப்பினைத் தரவல்லது ஒத்த வயதுடையோர் குழுக்கள் மாத்திரமே. அவர்களுடைய விழுமியங்களிலே முரண் இருப்பதில்லை என்பதுடன் அவர்களை இயங்க வைப்பது குழுஉணர்வே அன்றி நீதி நியாயம் என்ற கோட்பாடுகள் அல்ல.

எனவே பெற்றோர்களின் ஆதரவுமிக்க வழிநடத்தல், அந்நியோன்யமான உறவு முறை அனுசரணையுடன் கூடிய குடும்ப நெறிகள் வளரிளம் பருவத்தினருக்கு கிடைக்காவிட்டால் அவர்கள் அவ்வளவையும் பெறுவதற்கு ஒத்த வயதுடையோர் குழுக்களை நாடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஒரு பாடசாலையில் இத்தகைய பல்வேறு குழுக்கள் உள்ளன. தனக்கு உகந்தது ஒன்றினை வளரிளம் பருவத்தவர் தெரிந்து எடுத்துக் கொள்ளலாம்.

மாணவர்கள் மத்தியிலே ஆய்வொன்று நடத்தப்பட்டது. "நீங்கள் சந்தோஷமாக எப்போது இருக்கின்றீர்கள்" என வினவப்பட்டனர். பெரியவர்கள் இல்லாமல் எம் போன்றவர்களுடன் கூடிக் கும்மாளம் அடிக்கின்ற பொழுதேதான் நாம் மிகச் சந்தோஷமாக உள்ளோம். காட்டுத்தனமாய், மிருக உணர்வுடன குரல் எழுப்புவதை நாம் மிகவும் விரும்புகிறோம்" என்றார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களிலே இவ்வகை நடவடிக்கைகளில் நாட்டம் இல்லாதவர்கள் கூட அவர்களுடன் சேரவேண்டிய அவலம் ஏற்படுகிறது. குழுவின் அங்கீகாரம் தேவை என்பதால் அவர்களும் மனமில்லாமல் ஈடுபடவே செய்வார்கள்.

மக்கான்டிலஸ் (*McCandless*) எனும் உளவியல் அறிஞர் மனித நடத்தை பற்றி ஆராய்கின்ற பொழுது, நடத்தைகள் சில செயலூக்கங்களாலேயே (*Drives*) கட்டுப்படுத்தப்படுகின்றன என்கிறார். பாலியல் உணர்வு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செயலூக்கம். அதே போன்றே விரக்தி, தாக்கும் மனப்பான்மை, பற்றார்வம் (*Anxiety*), துருவி ஆயும் தன்மை (*Curiosity*) சார்ந்த நிலை (*Dependence*) போன்ற எல்லாமே நடத்தையைத் தூண்டும் செயலூக்கங்களே. தொடர்ந்த முயற்சிகளாலும், தவறுகளை உணர்ந்து திருத்துவதாலும் (*Trial and Error*) எந்த நடத்தை உணர்வினைப் பிரதிபலிக்க வல்லது என்பதையும் அதனை வலுப்பெறவைக்க என்ன செய்லாம் என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

வளரிளம் பருவத்தினரது நடத்தைகட்கு அவர்களிடத்திலுள்ள செயலூக்கங்கள் காரணமாகின்றன. எனவே எமது வளரிளம் பருவத்து மாணவர்கள் நடவடிக்கைகட்கு இத்தகைய செயலூக்கங்களே காரணமாகின்றன எனலாம். பெற்றோர்கள் போதிய வழிநடத்தலைக் காண்பிக்காவிட்டால், அல்லது அவர்களுக்குக் காண்பிக்கக் கூடிய ஆற்றல் இல்லாவிட்டால் ஒத்தவயதுடையோர் குழுவினைச் சரண்புகும் வளரிளம் வயதினர் அக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறும் பொருட்டு அதன் பொதுத் தன்மை வாய்ந்த விழுமியங்களைப் பின்பற்ற வேண்டிய கடப்பாடு ஏற்படுகின்றது. எனவேதான் அர்த்தமில்லாத காட்டுத்தனமான நடவடிக்கைகள், கூச்சல், கும்மாளம், அடாவடித்தனம் போன்ற நடவடிக்கைகள் அவர்களுடைய பொதுப் பண்பு

ஆகிறது. இதனை உறுதிப்படுத்துவதற்கு, மற்றவர்கள் தங்களைப் பார்க்கிறார்கள், தங்கள் செயல்களை விதக்கிறார்கள்என்ற போலியான எண்ணத்துடன் 'கற்பனைக் கேட்போர்' பற்றிய உணர்வு (*Imaginative Audience*) காரணமாகிறது.

வளரிளம் பருவத்திலே ஏற்படுகின்ற மாற்றங்கள் ஆண்களிலும் பார்க்கப் பெண்களையே பெரிதும் பாதிக்கிறது என்று உளவியல் அறிஞர் கூறினாலும், எமது சமூகத்திலே பெண்களின் வளர்ப்பு முறை வேறுபட்டு நிற்கின்றமையால் பாதிப்பு அவ்வளவு அதிகம் இல்லை அல்லது இருந்தாலும் புலப்படுத்துவதில்லை என்றே கொள்ள வேண்டும்.

பெண்பிள்ளைகள் பிறந்த நாட்தொட்டே பெற்றோரினது, சிறப்பாகத் தாயினது கண்காணிப்பிலேயே வளர்க்கப்படுகின்றனர். பெண்குழந்தையின் ஒவ்வொரு செயற்பாடும் தாயினது வியாக்கியானத்திற்கு ஆளாவதுடன், அதற்குச் சமூகத்தின் அங்கீகாரம் கிடைக்குமா என்ற ரீதியிலே கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. பிறந்த நாளிலிருந்தே 'பெண் விற்பனைக்குரிய பொருள்' என்ற மனப்பாங்கிலே பல தாய்மார்கள் சிந்திப்பதால், 'பாவனையாளர் விரும்பக்கூடிய சிறப்பு அம்சங்கள் இருக்கின்றனவா என்று ஒரு பொருளை விற்பவன் சிந்திப்பது போன்றே' அவர்களும் சிந்திக்கிறார்கள். எனவே பெண்பிள்ளைகள் சமூகத்தால் ஏற்புடையதாகக் கொள்ளக்கூடிய நெறிமுறைகளை உடையவர்களாகவும், நடத்தையிலே மிதமான கலாசார பிரதிபலிப்பை காட்டுபவர்களாகவும் வளர்க்கப்படுகிறார்கள். எனவே எம் சமூகத்தில் பெரும்பாலான பெண்பிள்ளைகள் பிரச்சனைக்குரியவர்களாக இருப்பதில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்னர், உயர்தரப் பாடசாலை ஒன்றின் ஆசிரிய ஆலோசகர் எமது மாணவர்கள் நடத்தை பற்றிக் குறை சொன்ன பொழுது அது விடயமாகவே இம்மாதம் 'தமிழர் தகவலில்' எழுத உள்ளேன் என்றேன். "பெண்பிள்ளைகட்கு கொஞ்சம் கூடிய சுதந்திரம் கொடுங்கள், ஆண்பிள்ளைகளைக் கூடிய கட்டுப்பாட்டுடன் வளருங்கள்" என எழுதுமாறு வேண்டினார். அவர் கூறியதைக் கூறி விட்டேன். உங்கள் தீர்ப்பு எதுவோ?

(*மார்ச் 1996*)

Adolescent Girls May Create Problems To Mothers ; Exercise Patience

வளரிளம் பருவப் பெண்கள் தாய்மாருக்குத் தீராத பிரச்சனை ஆகலாம்: பொறுமை பேணுவது அவசியம்

"நீங்கள் எப்படித் தனியாக உங்கள் இரு பெண்பிள்ளைகளுடன் சமாளிக்கிறீர்கள்" என்று என்னை வினாவினார் ஒரு தாய். "எனக்கொன்றும் பிரச்சனையாகத் தெரியவில்லையே, எட்டு வருடங்கள் தாயில்லாமல் அவர்களை வளர்த்து விட்டேன், அவ்வளவு சங்கடமாய்த் தெரியவில்லை! ஏன் கேட்கிறீர்கள்?" என்றேன். "இல்லை எனக்கு அவர்களோடு தினசரி அல்லாடுவது பெரும் சிரமமாக உள்ளது. மூத்தது அவ்வளவு மோசமில்லை, இளையதாலே நாளாந்தம் பெரும் கரைச்சல்" என அங்கலாய்த்தார். "எங்கும் பிரச்சனைகள் இருக்கவே செய்யும். அவற்றின் பரிமாணங்கள் நமது அணுகுமுறையினால் எடுக்கின்ற பரப்பெல்லை வேறுபடும்" என்றேன்.

வளரிளம் பருவத்துப் பெண்கள் சம்பந்தமாய் 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகை அண்மையிலே ஒரு கட்டுரை பிரசுரித்தது. அதிலே வளரிளம் பருவத்துப் பெண்கள் பலர் பெற்றோர்களுடைய, சிறப்பாகத் தாய்மாருடைய மனநிம்மதியையே விரட்டி ஓட்டி விட்டனர் என்று கூறப்பட்டுள்ளது. எமது சமூகத்தில் இந்த அளவினுக்கு பிரச்சனைகள் இல்லை என்றாலும் ஓரளவு இருக்கவே செய்கின்றன என அறிய முடிகிறது. இதற்கு ஓர் அளவினுக்கு எமது பிள்ளை வளர்ப்பு முறையே காரணமாகிறது. கீழே வெவ்வேறு வகையான பிள்ளை வளர்ப்பு முறைகள் தருகிறேன். இதில் எது உங்கள் வளர்ப்பு முறைக்கு ஒத்துள்ளதாக நீங்கள் உணர்கிறீர்கள்.

*. தன் விருப்ப முறை (Autocratic): இங்கு தனது அபிப்பிராயத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் சொல்லுவதற்கு பிள்ளைக்கு உரிமை இல்லை. பிள்ளை தன்பாட்டிலே ஏதேனும் தீர்மானம் எடுப்பதோ, அடி எடுத்து வைப்பதோ, தலைமைத்துவம் காட்டுவதோ குதிரைக் கொம்பு. போர்வீரருக்குரிய ஒழுங்காட்சி. பெற்றோர் தீர்மானங்களைச் செயற்படுத்தும் உரிமை மாத்திரமே பிள்ளையின் பணி

* ஆதிக்க உணர்வுடைய (Authoritarian): பிள்ளை பிரச்சனையைச் சொல்லலாம். அதற்குரிய சில தீர்வு முறைகளைச் சொல்லும் உரிமையும் உண்டு. இதற்குமேல் வாழ்க்கையில் நிறைய அனுபவம் பெற்ற பெற்றோர்கள் இருக்கையிலே, நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான் எப்படித்

தீர்வு காண முடியும். எனவே, தீர்மானம் எடுப்பது பெற்றோர் கடமை. செயற்படுத்துவது பிள்ளையின் கடமை.

* சம உரிமை பேணும் (*Democratic*): தனது நடத்தை சம்பந்தமான விடயங்கள் பற்றி பிள்ளை தனது கருத்தைச் சுயாதீனமாக வெளிப்படுத்துவதுடன், தீர்க்கமான சில முடிவுகளைக் கூட தானே எடுத்துக் கொள்கிறார் என்றாலும்கூட இத்தீர்வு அனுபவம் மிக்க பெற்றோர்களின் வழிநடத்தலின் விளைவாக எடுக்கப்பட்டதாக இருக்கும் அல்லது அவர்கள் அங்கீகாரம் பெற்றதாக இருக்கும்.

* சமநிலை பேணும் (*Equalitarian*): இங்கு பெற்றோர் பிள்ளை என்ற பாகுபாடு இல்லாமலே சுதந்திரமாக எல்லோரும் ஒருங்கே சர்ச்சித்து முடிவெடுப்பர். எல்லோரும் சம அளவிலே பங்குபற்றுவதால் தீர்வு ஏகோபித்ததாக அமையும்.

* இசைவு தருகின்ற (*Permissive*): தனது நடத்தை சம்பந்தமான முடிவினை எடுக்கும் போது அது தன்னைப் பொறுத்தது என்றமையால் தன் முடிவே தீர்க்கமானதாக இருக்க வேண்டும் எனப் பிள்ளை எண்ணுவார். பெற்றோர்கள் தம் கருத்துக்களைக் கூறலாம். பிள்ளை எடுக்கின்ற முடிவினை அங்கீகரிக்க வேண்டும்.

* தன்னிச்சையான (*Laissez- Faire*): இங்கு ஒரு தீர்மானத்தை எடுப்பதையோ, செயற்படுத்துவதையோ பிள்ளை முழுமையான ஆதிக்கத்தைப் பேணுவார். பெற்றோர்களைக் கருத்துக் கேட்டால், அவர்கள் தெரிவிக்கலாம். ஏற்பதும் விடுவதும் பிள்ளையைப் பொறுத்தது.

* புறக்கணிக்கின்ற (*Ignoring*): பெற்றோர்கள் விட்டேத்தியாக ஒதுங்கிவாழ்கின்றனர். எந்த ஒரு தீர்மானத்தையும் பிள்ளை எடுக்கையில் அதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்ற ரீதியில் சிந்தித்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். எனவே பிள்ளை பெரியவராகிறார். அவர் எடுக்கின்ற தீர்மானம் பெற்றோர் அங்கீகரிக்க வேண்டியதாகின்றது.

ஏழு வெவ்வேறு வகையான பிள்ளை வளர்ப்பு முறையினை நான் கூறியுள்ளேன். உங்களது எந்த வகையெனக் கண்டு கொள்ளுங்கள். எது நல்லது என்பதையும் கூறப்பட்ட விளக்கங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எமது சமூகத்தின் தனித்துவம் இங்கு கூற வேண்டும். நாம் ஆண்பிள்ளைகட்கும் பெண்பிள்ளைகட்கும் ஒரே வகையான வளர்ப்பு முறை கடைப்பிடிப்பதில்லை.

நான் எனது ஆண்பிள்ளை இருவரையும் ஓரளவிற்கு முதலாவது இரண்டாவது வகைப்படியேதான் வளர்த்தேன். எனது பெண்பிள்ளைகளை அந்த முறையில் வளர்க்க முடியவில்லை. இரு காரணங்கள். எனது மனைவியின் மறைவினால் நான் தாயுமானேன். இரண்டாவது எனது மகன்கள் வளரிளம் பருவத்தில் வாழ்ந்தது ஈழம், தமிழ்நாடு. எனது பெண்பிள்ளைகள் வாழ்ந்தது கனடா. இந்த நாட்டின் கலாசாரம், கல்விமுறை, பொது வாழ்வு யாவுமே எனது வளர்ப்பு முறையை பெரும் அளவிலே பாதித்துவிட்டன. "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்பார்கள். தாயென்று ஒருத்தி இருந்து விட்டால்,

தந்தை தன்விருப்பமுறையானவராய் இருந்தாலும் பாதகமில்லை. அவருடைய தீர்மானங்கள் தன்விருப்பமுறையில் எடுக்கப்பட்டாலும் கூட தாய் மூலமாகப் பிள்ளைகளுக்குப் போகும் பொழுது அவரது சாதுரியத்தால் சம உரிமை பேணும் முறை மாதிரி அமைந்து பிள்ளையின் அங்கீகாரம் பெறும் வாய்ப்புண்டு. எனது மனைவியார் இறந்த சில வருடங்கள் நான் எனது மகன்களை வளர்த்த முறையைக் கையாண்டு எனது பெண்களையும் வளக்க முனைந்து அல்லல்பட்டது நிதர்சனமான உண்மை. அதனை உணந்து உடனடியாகவே எனது வளர்ப்பு முறையை முற்றாகவே மாற்றிக் கொண்டேன். சம உரிமை கொடுத்து சமநிலை பேணும் முறையினைக் கையாண்டதில் வெற்றியீட்டினேன் என்று சொல்வதிலும் பார்க்க முன்பிருந்ததிலும் பார்க்க பாரிய மாற்றங்களைக் காண முடிந்தது என்று கூற முற்படுகிறேன்.

எமது சமூகத்தின் தனித்துவம் என்ற போதிலும் இந்நாட்டில் வாழ்கின்ற நாம் எமது பிள்ளை வளர்ப்பு முறைகளிலே ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்குமிடையே பாரிய வேற்றுமை காட்டுவது உகந்தது அல்ல. ஒரே வீட்டிலே இப்படி வெவ்வேறான முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது அது வளரிளம் பருவத்துப் பெண் பிள்ளையிலே உளவியல் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவரினது சுயமதிப்பும் *(Self esteem)* வீழ்ச்சியடையலாம். வளரிளம் பருவத்துப் பெண் பிள்ளைகளிலேதான், ஆண்களிலும் பார்க்க கூடுதலான மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. உடல் ரீதியான இம் மாற்றங்கள் ஈஸ்ரொஜன் *(Oestrogen)* எனும் ஓமோன் *(Hormone)* ஒன்று சுரக்கப்படுவதால் ஏற்படுகின்றன. உடற்பாங்கிலே ஏற்படுகின்ற இம்மாற்றங்கள் உளவியல் ரீதியாக பல ஏக்கங்கள், அங்கலாய்ப்புகள், எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவிக்கின்றன. இந்த வேளையிலேதான் பெற்றோரை விட்டு விலகி ஒத்தவயதுடையோர் குழுவில் தஞ்சம் அடைகின்ற மனப்பான்மை பொதுவாகவே எல்லா வளரிளம் பருவத்தினருக்கும் தோன்றுவது இயல்பு. ஆகவே பெற்றோர்களின் ஆதரவு மிகவும் தேவையான பருவமும் இதுவே. மற்றைய சமூகங்கள் போலல்லாது எமது சமூகப் பெற்றோர் பெண்பிள்ளைகட்கு ஆதரவு தருகின்றார்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்களது மிகையான பாதுகாப்புத் தன்மையினாலும் தன்விருப்பமுறை அல்லது ஆதிக்க உணர்வு வளர்ப்பு முறையினாலும் ஏற்படக்கூடிய அனுகூலங்களிலும், வியாகூலங்களே அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு.

மேரிபைப்பர் *(MARY PIPHER)* எனும் உளவியல் அறிஞரின் கருத்துப்படி வளரிளம் பருவத்தை எய்தும் பெண்களிலே பின்வரும் மாற்றங்களைக் காணமுடியும். அவர்களுடைய விரிவாற்றல், எல்லாம் நன்மைக்கே என்ற உணர்வு, வலியுறுத்திச் சொல்லும் மனப்பான்மை சிறிது குறைவதைக் காணலாம். அதே சமயம் பணிவிணக்கம் காட்டும் தன்மை, தன்னையே குறைகூறும் மனப்பான்மை அதிகரிப்பதைக் காணலாம். பொதுவாகவே தனது உடற்பாங்கு பற்றிய தாழ்வு மனப்பான்மை தோன்றலாம். இவை மாத்திரமல்லாமல் அவர்களது அறிவுத்திறன் அளவீடு *(IQ)* கூட வீழ்ச்சியடைவதுடன், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் கூட சிறப்பாற்றல் குறைவதைக் காணமுடியும்.

இவை யாவற்றுக்கும் அடிப்படையான காரணம் பற்றி ஆராய்வதானால் இன்றைய சமூகம் பெண்களை எந்தக் கோணத்தில் பார்க்கிறது என்பதை ஆராய வேண்டும். பெண்களை வெறும் பாலியல் பொருட்களாகவே காண்பிக்கின்ற தொலைக்காட்சிகள், சஞ்சிகைகள், பாடல்கள், சினிமாப் படங்கள் போன்றவை பெண்மை பற்றிய நெறி பிறழ்வான தகவல்களைத் தருவதால் சமூகத்தில் நமது பங்களிப்பு என்ன என்பதைப் பெண்கள் மறுபரிசீலனை செய்ய வைக்கின்றன. வன்முறை பிரயோகிக்கப்படுகின்ற பொழுது, எப்பொழுதும் பெண்களே பாதிக்கப்படுபவர்களாகவே காண்பிக்கப்படுவது அவர்களது சுயமதிப்பைப் பெரும் அளவிலே இறங்கு முகமாகத் தள்ளி விடுவதோடு மற்றவர்கட்கு இசைந்து நடத்தல், அவர்களைக் கவரக் கூடிய அழகு இருத்தல் தான் பெண்மையின் நற்பண்புகள் என எண்ண வைக்கின்றன.

பொதுவாகத் தாய்மார்கள் தான் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இதுநாள்வரை தாயையே தனது அடைய இனமறி (*Role Model*) கருவியாகக் கொண்ட பெண், இப்பொழுதுதான் தானாக அடையாளம் காட்ட முனைகின்ற பொழுது, அந்த நினைவினை உடைக்க முயல்கிறார்.. இதனால் இருவருக்கும் மோதல் ஏற்பட வாய்ப்புண்டு. கைக்கு அடக்கமாய் இதுநாள்வரை இருந்த பிள்ளை இப்படி ஏன் மாறிவிட்டது என்று தாய் கவலைப்படுவது உண்டு. இதோ ஒரு மாணவி கூறுவதைக் கேளுங்கள். "தாய்மார்கள் பிள்ளைகளைப் புரிந்து கொள்வதில்லை. ஒரு தாய் நினைக்கிறாள் தன் மகள் இன்னும் சின்னப்பிள்ளை என்று, ஆனால் மகளோ பெரிய பெண்ணாக நடத்தை காட்ட ஆரம்பிக்கிறாள். உதாரணத்திற்கு, தாய் மகளைக் கேட்கிறா, இன்று பாடசாலையிலிருந்து வர ஏன் நேரமாகி விட்டது என்று. அதற்குப் பிள்ளை கூறும் பதிலில் தாய் திருப்தியடைவதில்லை. இதைக் கண்ட பிள்ளை திகைக்கிறது. என்ன! அம்மாவிற்கு என் மேல் சந்தேகம். பெற்றபிள்ளையிடம் கூட நம்பிக்கையில்லை? இது சிறிய விஷயம் ஆனால் அசிங்கமான விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இதுபோன்ற ஒரு பெண் தன்னை மிகையாக அலங்காரம் செய்து கவர்ச்சியாக உடை உடுத்தினால், "யாரைப்பார்க்க இவ்வளவு அலங்காரம் எனத் தாய்கேட்டால், மகளுக்குத் தாய் மேல் அப்படியான ஒரு வெறுப்பு ஏற்படுகிறது. காரணம் பெண்கள் நினைக்கிறார்கள், தாம் வளர்ந்து விட்டார்கள் எனவே தம்மை அழகுபடுத்தல் அவசியம் என்று. தாயோ வேறு கோணத்தில் பார்க்கிறா. பிள்ளையோ வளர்ந்து விட்டாள் நாகரீகமாக உடை உடுத்துச் சென்றால் என்னென்ன விபரீதம் இந்த நாட்டில் ஏற்படக் கூடுமோ? என்று

இம் மாணவி சொன்னவற்றில் பொதிந்துள்ள உண்மைகளை எம் பெற்றோர் உணர வேண்டியது மிக அவசியம். தாய்க்கும் பிள்ளைக்குமிடையே ஏற்படக்கூடிய இந்த முரண்பாடுகள் தற்காலிகமானவை. இயற்கையானவை, அவசியமானவை என்பதை அறிகின்ற தாய்மார் ஆனந்தமடைவார்கள். ஆனால் அங்கே ஒரு கெட்ட சேதி ஒன்றும் உள்ளது. அடுத்த ஐந்து வருடங்கள் இத்தகைய அல்லாடல்கள் நிறைந்தவையாகவே அமைய வாய்ப்புண்டு. எய்தவன் இருக்க அம்பை நோவதில் பயனில்லை. இங்கே சூத்ரதாரி "ஈஸ்ரோஜன்" என்கிற ஓமோன். ஆகவே இந்த போராட்டத்தை

தற்காலிகமானதாக்குவதோ அல்லது நிரந்தரமானதாக்குவதோ ஒரு தாயின் அணுகுமுறையிலே தங்கியுள்ளது. எப்படி?

தாய்க்கும் பிள்ளைக்குமிடையே நம்பிக்கைக்குப் பாத்திரமான இடைவெளி இருத்தல் அவசியம். மகள் தொலைபேசியில் பேசுகின்ற பொழுது அவள் என்ன பேசுகிறாள் என்று பார்க்காமல் அவ்விடத்தை விட்டு நகர வேண்டியது அவசியம். ஆனால் அதே சமயம் இடையிடையே அவருக்கு வருகின்ற தொலைபேசிச் செய்திகளை எடுத்து அவரது நண்பர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம்.

அடுத்தது உடை, அழகுபடுத்தல் சம்பந்தமானது. வளரிளம் பருவத்துப் பெண்களின் முதல் முன்னுரிமை தமது உடலழகு சம்பந்தமானதே. மற்றையோர் மனதைக் கவர வேண்டுமென்ற எண்ணம் அவர்கட்கு இப்பருவத்தில் தோன்றுவது நியாயமானதே. "பெண்பிள்ளைகட்கு மற்றவர்களைக் கவர வேண்டும், விதம் விதமாக தம்மை அலங்கரித்துக் கொள்ள வேண்டும், நவீன உலகத்திற்கு ஈடாக நிற்க வேண்டும் என்ற எண்ணங்கள் ஏற்படுகின்றன. இதனைச் செயற்படுத்த முனைகின்ற வேளையிற்தான் குடும்பத்தில் பிரச்சனைகள் தோன்றுகின்றன" என இன்னோர் மாணவி கருத்துத் தெரிவிக்கிறார். மேலும் அவர் "முரண்டு பிடிப்பதைத் தவிர்த்து அவர்களுடைய வழியில் சென்று அவர்களை நல்வழிப்படுத்துவதே பெற்றோரின் கடமையாகும். காலத்திற்கேற்றவாறு பெற்றோர்கள் சிறிது இறங்கி வரவேண்டும்" என்கிறார். ஆகவே தாய்மார்கள் நாணயக் கயிறை இறுக்கமாகப் பிடிக்க விரும்பினால் பிள்ளைகளுடன் சிநேக பூர்வமாகப் பழக வேண்டியது அவசியம். இப்பருவப் பிள்ளைகள் தாயை உதாசீனம் செய்யலாம், எதிர்த்துப் பேசலாம், அவமதிக்கலாம். ஆனால் இவை தற்காலிகமானவையே என்று உணர்ந்து உணர்ச்சிவசப்பட்டோ, கோபித்தோ, விரக்தியடைந்தோ பிரச்சனையை இறுகப்பண்ணாமல் அன்பு காட்டி, அரவணைத்துச் சென்றால் அவர்களை வசப்படுத்தலாம். அப்படிப் பழகினால் ஆடை அழகு படுத்தலில்கூட ஒரு எல்லைக்குமேல் செல்லாமல் பார்த்துக் கொள்ளமுடியும்.

அடுத்த முக்கியமான விஷயம், அவர்கள் நண்பர்கள் சம்பந்தமானது. எத்தகைய நண்பர்களுடன் அவர்கள் பழகுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுதல் அவசியமானதே. எனவே அவர்களை வீட்டிற்கு அழைத்துவரும் சலுகையைக் கொடுப்பது உசிதமானது. அதே சமயம் ஆண்களுடன் பழகுவதையும் பாலியல் கண்கொண்டு பார்க்காமல் இருப்பது நன்று. இளம் வயதிலே ஆண்களும் பெண்களும் எப்படிப் பழகினார்களோ அதே போன்று தொடர்ந்தும் அவர்களைப் பழக இடம் கொடுத்தால் அவர்கள் உற்ற நண்பர்களாக தொடர்ந்து பழகும் வாய்ப்புண்டு.

சில வீடுகளில் *Curfew* பற்றியும் பிரச்சனை வருவதுண்டு. பெண்பிள்ளை நேரம் தவறி வீடு வந்தால், அவர் கூறுகின்ற காரணத்தைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கின்றனர். "சில விதிவிலக்கான பிள்ளைகளைப் பார்த்த பெற்றோர்கள், தம் பிள்ளையும் அப்படிப்பட்டவராக இருக்குமோ எனச் சந்தேகப்படுகின்றனர். இது பிழையான முறை. கூடுதலாகப் பெற்றோர்கள் கட்டுப்பாடு போட முயலும் பொழுது அவர்கள் எதைச் செய்ய வேண்டாமெனச்

சொல்கிறார்களோ அதனைச் செய்தால் என்ன என்று எண்ணத் தோன்றுகிறது" என்கிறார் வளரிளம் பருவத்துப் பெண் பிரதிநிதி ஒருவர். எமது பிள்ளையின் செயற்பாடுகளில் நாம் சந்தேகம் கொள்வதாகக் காட்டுவோமாயின் எமது வளர்ப்பு முறை முற்றாக தோல்வியடைந்து விட்டது என்பதே பொருள். "குறிப்பிட்ட நேரத்திற்கு வீடு வந்துவிட வேண்டும். வர முடியாவிட்டால் எங்கு நிற்கிறாய், எப்போ வருவாய் எனத் தொலைபேசி மூலம் அறிவித்து விடு" என்று அவர்களை வழிப்பண்ணுவதுதான் சிறந்த முறை.

எமது வளரிளம் பருவத்துப் பெண்களைப் பெரும் அளவிலே பாதிப்பது 'ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி' என்கிற எமது விகர்ப்பமான வளர்ப்பு முறையே. வளரிளம் பருவத்துப் பெண் ஒருவரின் ஆதங்கம் எப்படி வெளிப்படுகிறது என்று பாருங்கள்,. ஆண்கள் செய்கின்ற அடாவடித்தனங்களும் அத்துமீறல்களும் அம்மாமாருக்குப் பெரிதாய்த் தெரிவதில்லை. வீட்டுப் பணியில் நாம் பங்கேற்க வேணும் என்கிற தாய்மார், ஆண்பிள்ளைகள் அவிழ்த்து விட்ட மாடுகள் போல் வெளியில் திரிவது கண்டு கவலையுறுவதில்லை. அவன் தோளுக்கு மிஞ்சி விட்டான் எனப் போலிச் சாட்டுச் சொல்வார்கள். பெண்பிள்ளைகள் என்றால் இளக்காரமா?" இந்தப் பெண்ணின் ஆதங்கத்திற்கு என்ன பதில்?

புதிய நாடு, வித்தியாசமான சூழல், வேறுபட்ட கலாசாரப் பின்னணி, மாறுபட்ட குடும்பக் கட்டமைப்பு, பண்பு, வேறுபட்ட விழுமியங்கள் எனப் பன்முனைத் தாக்கங்கள் எம்மை புடம்போட முனைகின்றன. எனவே, நாம் எமது பிள்ளை வளர்ப்பு முறையிலேயும் மாற்றம் கடைப்பிடித்தல் அவசியமாகிறது.

(ஏப்ரல் 1996)

இந்த நூலின்
விநியோகத்தினால்
கிடைக்கும் நன்கொடை
கனடிய 'கான்ஸர்'
நிறுவனத்துக்கு
(Canadian Cancer Society)
வழங்கப்படும்.

"விதைத்த சிறு விதையுள் இருந்த சிறுமுகை முளைத்துச் சிறு தருவாவதைக் கண்டின்புற்ற நீ, அவை வளர்ந்து பெருமரமாகி நிழல் தரும் வேளைவரை பொறுமை பேணாமல், தவிக்கவிட்டுப் போக உனக்கு எப்படித்தான் மனம் வந்ததோ தாயே!"

மணிவண்ணன்
மணிமாறன்
மணிமொழி
மணிவிழி

"ஆரம்பத்தில், பெண் பிள்ளைகள் இருவரும் சிறுமிகளாக இருந்தபோது வீட்டு நலனில் நிறையவே ஈடுபட்ட எனது மகன்மார், பின்னர் வளர வளர பொறுப்புகளில் தம்மையும் ஈடுபடுத்திய பெண் பிள்ளைகள், இறுதியாக வீட்டின் முழுப் பொறுப்பையும் தன் தலையில் தாங்கியுள்ள எமது மருமகள் என்றாகி, இப்போது நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாகி விட்டது. அதன் உபவேந்தர் மறைந்திருந்து கண்காணிக்கிறார் என்பதை எல்லோருமே உணர்ந்துள்ளமையால் வீடு வீடாக உள்ளது."

பொ. கனகசபாபதி

'பெற்றோர், பிள்ளைகள், உளவியல்' என்பது நூலின் பெயர். பெயரே நூல் கூறும் பொருளையும் துலக்கமாகச் சொல்லி நிற்கின்றது. இது ஒரு தொகுப்பு நூலாயினும் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் உளவியலால் இழைத்துச் செய்யப் பெற்ற தனித்துவத்தால் தனி நூலாகவே கொள்ளத்தக்க இயல்புடையது.

- கவிநாயகர் வி. கந்தவனம்

ஆசிரியர் கனகசபாபதி அவர்களின் திறமையை இப் புத்தகம் முழுவதும் தெள்ளத் தெளியக் காணலாம். தன் வாழ்வில் தன் மக்களை வளர்த்த போது, அதுவும் அவர் மனைவி மறைந்த பின் உண்டான புதுப் போராட்டங்களை உதாரணம் காட்டி, மிக அழகாகவும் ஆழமாகவும் போராட்டங்களை எப்படிச் சமாளிப்பது என்று எழுதியுள்ளார்.

- பேராசிரியர் ரி. இராதாகிருஷ்ணன்

"எல்லார் உடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்லப்பட முடியாதது. ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் கவலைப்படத் தேவையில்லை" எனும் கீதையின் பொருளை உணர்ந்த கனக்ஸ் தனது நூலைத் தனது மனைவியின் ஆத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்கின்றார்.

- வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)

நாம் அகதிகளாகவே இங்கு வந்தோம். கனடிய அரசாங்கங்களினதும் மக்களினதும் தாராள மனப்பான்மை எம்மை இங்கு காலூன்றி நிற்கச் செய்துள்ளது. பிறந்த நாட்டில் அனுபவிக்க முடியாத சுதந்திரக் காற்றை இங்கு மூக்கு முட்டச் சுவாசிக்கின்றோம். கனடிய மண்ணில் எங்கள் தாய்வீடு போன்று காலாற நடக்கின்றோம். கனடாவின் சலுகைகள் அனைத்தையும் எங்கள் உரிமைகளாக அனுபவிக்கின்றோம். பிரதியுபகாரம் செய்ய வேண்டாமா? கனடியத் தேசிய நீரோட்டத்தில் எங்கள் பங்கைச் சேர்க்க வேண்டாமா? இந்த நூலை வெளியிடும் நோக்கம் சிறிதளவாவது இதனை நிறைவுசெய்யுமென நம்பலாம்.

- திரு எஸ். திருச்செல்வம்


DARLY
IN LOVING
MEMORY OF
25-2-39-5-10-88